"மகாராணி தன்னைக் கொல்ல சதி செய்வதாக மன்னர் கூறுகிறாரே...?"

"போர்க்காலங்களில் தொழிற்சாலைகளை இழுத்து மூட வேண்டுமென்கிறாரே மன்னர்! ஏனாம்?"

வரிக் வரி சிரி



"போருக்கு கிளம்பும் போது சங்கு ஒலிக்கும் சத்தம் கேட்டால் மன்னருக்கு கிலி வருகிறதாம்"

—ஆர்.பி.முத்துக்கண்ணு, இராயப்பட்டி.

"நீர் வேறு! மன்னரை போருக்குப் போகும்படி மகாராணி சொன்னதைத் தான் அப்படிச் சொல்கிறார்!"

—முத்து, ஆனந்த், வேலூர்.



# பந்தயத் துடிப்பு



பட்டுக்கோட்டை பிரபாகர்




அப்ஸரா அழகான பெண்ணல்ல. ஆனால் அழகாகத் தெரிகிற பெண். அப்படித் தெரிய வைக்க இந்த பூமியில் ஏராளமான சாதனங்கள், சாமர்த்தியங்கள் உள்ளன. கொஞ்சம் விலை அதிகம்.

தங்க பஸ்பம் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லதென்று டாக்டர் சொன்னால், 'ஒரு வேளைக்கு எத்தனை கிலோ சாப்பிட வேண்டும் டாக்டர்?' என்று கேட்கிற அப்பர் பெர்த் ஜாதியைச் சேர்ந்தவள் என்பதால் அப்ஸராவால் அந்த விலையை தாராளமாக டிப்ஸ் சேர்த்துத் தர முடிகிறது.

சினிமா இண்டஸ்ட்ரிக்கு வெளியில் செயற்கை இமை முடிகள் பொருத்திக் கொள்கிற ஒரே பெண் அப்ஸராவாகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு வீட்டில் டிராயிங் ரூம், பெட் ரூம், ஸ்டோர் ரூம், ஆபீஸ் ரூம், கேம்ஸ் ரூம், ஸ்டடி ரூம், பாத்ரூம் என்றெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தப் பட்டியலில் இல்லாத ஒரு ரூம் அப்ஸராவின் பங்களாவில் இருக்கிறது.

அது அவளுடைய காஸ்ட்யூம் ரூம்.



புதிதாக பெண்களுக்கு மட்டுமான ஒரு ரெடிமேட் ஷாப் துவங்க வேண்டுமானால் ஒரு பிட் துணி பர்ச்சேஸ் செய்யத் தேவையில்லை. ஒரு கடையைப் பிடித்து அந்தக் காஸ்ட்யூம் ரூமில் அப்ஸரா ஃபாஷன் கடந்தவை என்றும், உடுத்தி முடித்தவை என்றும் உபயோகிக்காமல் ஒதுக்கி வைத்திருக்கும் அவளின் உடைகளை அள்ளிக் கொண்டு வந்து போட்டால் போதும்.

(சர்தான்ப்பா, அப்ஸரா ஒரு பண பண பணக்காரி, புரிஞ்சிருச்சு. அப்பாலே மேல சுத்து! -என்கிறார் தண்டையார்பேட்டை ரா.குஞ்சப்ப வாசகர்)

இந்த வகைப் பெண்கள் தனியாக கார்கள் வைத்திருப்பார்கள். ராத்திரி பனிரெண்டு மணி, ஒரு மணி என்று வீட்டுக்குத் திரும்பினாலும் 'திஸ் இஸ் டூ பேட் மை சைல்ட்' என்று செல்லமாக இங்கிலீஷில் கொஞ்சும் அப்பாக்கள் வைத்திருப்பார்கள். இவர்களுக்கு ஐஸ்க்ரீம் பிடிக்கும். ஸ்விம்மிங் பிடிக்கும். ஹெல்த் கிளப்புகள், சனிக்கிழமை இரவுகளில் டிஸ்கோ நடனங்கள், 'ஹாய் ஜோதி, எனக்கு ஒரு வாரமா பிடிச்சிருந்த ஜலதோஷம் சரியாப் போய்டுச்சி. அதனால இன்னிக்கு உங்களுக்கெல்லாம் பார்க் ஷெராட்டன்ல டின்னர் பார்ட்டி' -டிராஃபிக் மீறல்கள், புரியாத உரத்த சங்கீதங்கள் -அது ஒரு தனி உலகம்.

அப்ஸரா அந்த உலகத்தின் சராசரிகளில்

ஒருத்தி. சுனில் பாப்ரே, கௌரவ் டிக்கி, அனில் கிட்டி -இதெல்லாம் ஐஸ்க்ரீம் வகைகளின் பெயர்களல்ல, அப்ஸராவின் ஆண் நண்பர்களின் பெயர்கள்.

ஆண் நண்பர்கள் என்றால்...

''ஹாய் அப், வாட் எ சர்ப்ரைஸ்!''

''என்ன மேன் சர்ப்ரைஸ்?''

''சைக்கிள் பம்ப் வாங்கி வீட்ல வச்சிருக்கியா?''

''வொய்?''

''இன்ஃப்லேஷன் மை கர்ள்! இல்லடா கிட்டி?''

''யா! வீக்கமாத்தான் தெரியுது.''

''ஃபினாயில் போட்டு கழுவு கிட்டி. டர்ட்டி! டர்ட்டி!''



''எதை?''

''உன் வாயைத்தான். அப்புறம், கௌரவ் நீ சொல்லவே இல்லையே...''

''எதை?''

''அந்த பம்பாய் பார்ட்டி. லேகாவா?''

''அய்யோ! அது நாங்க ஆம்பளைங்களுக்குள்ளே பேச வேண்டிய பேச்சு.''

''தெரியாதா என்ன பேசுவிங்கன்னு? நாம் எவ்வளவோ பேசியாச்சு. கமான்டா, உடம்புல தவிர வாட் ஈஸ் த டிஃபரன்ஸ் இன் அவர் மைண்ட்ஸ்? சொல்லு, என்ன செஞ்சே அவளை?''

''டெஃபனெட்டா.நோ காண்ட்டேக்ட் பட் ஐ பெய்ட் 5,000''

''என் நோ?''

''பயம். எ.அய்.டி.எஸ். பயம்''

''அதனால?''

''ஆஸ் வீ டு வித் பனானா, தோல் உரிச்சி...''

''மியூசியம் பார்த்ததோட சரியா?''

''இல்லை. மியூசிக்கை போட்டு விட்டு, ரம் கொஞ்சம் ஊத்தி விட்டு.. உதறு உதறுன்னு அப்படி ஒரு பிரேக் டான்ஸ்! நெவர் ஐ ஹேட் சீன்...''

அவர்களின் உரையாடல்களை கூட்டாமல் குறைக்காமல் மேற்கொண்டு எழுதிக் கொண்டே போனால் கதையின் தரம் தரை மட்டத்திற்கு வந்து விடுகிற அபாயமிருப்பதால் இத்துடன் நறுக்கி விடலாம்.



அப்ஸரா மேக்கப்பி புறப்பட்ட போது அவள் அப்பா பம்பாய் ஸ்டாக் எக்ஸ் சேஞ்சுடன் போனில் பேசுகிற ஒரு சீனுக்கு வந்து விடலாம்.

''டாடி, உங்கிட்ட ஒண்ணு சொல்ல ணும், சொல்லணும்னு இருந்தேன்.''

இப்போதுதான் பேசக் கற்றுக் கொண்ட குழந்தையாய் மழலையில் கொஞ்சினாள் அப்ஸரா. அவள் அப்பாவின் சட்டைக் காலருக்கு அடியில் பொருத்திக் கொண்டிருந்த பட்டாம் பூச்சியை நிரடியபடி.

''என்னாச்சி? யாரையாச்சும் காதலிக்கிறியா?'' என்றார் யோகேஷ் வர்மா.

அப்ஸரா தன் வாட்ச்சைப் பார்த்து, ''இந்த

ஒம்போது மணி முப்பது நிமிஷம் இருபத்தேழு வினாடி வரைக்கும் இல்லை. நீங்க டாபிக் ஆரம்பிச்சதால கேக்கறேன். அப்படி நான் சொன்னா உங்க ரியாக்ஷன் என்ன டாடி?'' என்றாள்.

''முதல்ல பளார்ன்னு ஒரு அறை. அப்புறம் ஒரு ரூம்ல உன்னைப் பூட்டி வெச்சிடுவேன். ரெண்டே நாள்ல உனக்கு அவசரமா எனக்குப் பிடிச்ச ஒருத்தனை கல்யாணம் பண்ணி வச்சிடுவேன்.''

''டாடி?'' என்றாள் விழி இமைகளைப் படபடத்து.

''பயந்துட்டியாடா? இதெல்லாம் பணக்கார இந்தி சினிமா அப்பா செய்றது. ஐம் நாட் லைக் தட். நீ வளர்ந்துட்டே அப்ஸரா. உனக்கு விபரம் தெரியும். உன் வாழ்க்கையை அமைச்சிக்கிறதுக்கும், வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கிறதுக்கும் முழு உரிமை இருக்கு. ஒருத்தர் ஐடியாலஜியை இன்னொருத்தர் மேல திணிக்கக் கூடாதுங்கறது என் பாலிசி. வி ஹேவ் பார்ன் டு லிவ்! நான் ஒரு ஆண். நீ ஒரு பெண். உன்னை நான் உருவாக்கினேன். தட்ஸ் ஆல். அதனால நீ எனக்கு அடிமை இல்லை. ஐ டோண்ட் வாண்ட் டு ஹேவ் எனி ஹோல்ட் ஆன் யூ. ஆனா... இந்த ரத்த சம்பந்தம் இருக்கு பாரு. அது செய்ற சென்டிமென்ட் விளையாட்டினால... உனக்கு ஒரு பாதிப்புன்னா நான் துடிச்சிப் போய்டறேன். அந்த சந்தர்ப்பத்தில் நான் யாரோன்னு மனசு விலகாது. பேபி, யு நோ ஒன் திங். மிகைப்படுத்தி சொல்லலை. திடீர்னு ஒரு ஆசாமி துப்பாக்கியோட வந்து 'வர்மா, உன் சொத்து பூரா எனக்கு எழுதிக் கொடு. இல்லைன்னா அப்ஸராவைக் கொன்னுடுவேன்'னு சொல்றான்னு வெச்சிக்க...''

''எதுக்கு டாடி பயங்கரமான கற்பனை?''

''அட, சும்மா வெச்சிக்கலாம். அப்ப என் பதில் என்ன தெரியுமா?''

''என்ன?''

''உன் பேனாவில கையெழுத்துப் போடவா, இல்லை என் பேனாவில கையெழுத்துப் போடவான்னு கேப்பேன்.''

அப்ஸரா புளகாங்கிதம் (இந்த வார்த்தையை உபயோகித்து ரொம்ப நாளாச்சு) அடைந்து, உயரம் எட்டாததால் தன் நுனிக்கால்களில் எம்பி வர்மாவின இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டு, ''ஐ லவ் யூ ஸோ மச் டாடி'' என்றாள்.

''சரி, நீ என்னவோ சொல்ல வந்தியே, என்ன?''

''சும்மா ஊர் சுத்திக்கிட்டே இருக்கிறது போரடிக்குது டாடி.''

''ஒரு புருஷன் வாங்கித் தரட்டுமா? அவனை கொஞ்சிக்கிட்டிருக்கியா?''

''போங்க டாடி!'' வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே தோன்றும் வெட்கம் அவள் கன்னங்களில் தோன்றி மறைந்தது.

''சரி, சொல்லு.''

"நான் பறக்கணும் டாடி."

"வாட் டு யூ மீன்?"

"ஃப்ளையிங் கிளப்ல சேர்ந்து குட்
விமானம் ஓட்டக் கத்துக்கணும்
ஆசையா இருக்கு."

"டேன்ஜரஸ் கேம் அப்ஸரா. ரிஸ்
அதிகம்."

"எதில ரிஸ்க் இல்லை டாடி? ப்ளீஸ்பா.

"அப்ஸரா, எல்லாக் கேள்விகளுக்கு
என் பதில் ஆமாம் என்பதாக மட்டு
இருக்கும். அந்தக் கேள்விகளை
கேட்பதாக இருந்தால் -அப்படின்னு ஒ
கவிதை படிச்சேன் நேத்து. அது எனக்கு
பொருந்தும் அப்ஸரா."

"எத்தனாம் தேதிலேர்ந்துப்
இலக்கியம் எல்லாம் படிக்
ஆரம்பிச்சிங்க?"

"நாட்டி சைல்ட்" என்று வர்மா அவள்
கன்னத்தைப் பிடித்து செல்லமாக
அசைத்து விட்டு, "ஏற்பாடு பண்றேன்"
என்றார்.




அந்த நட்சத்திர ஹோட்டலின் நீச்சல்
குளத்தில் மாலைச் சூரியனின் லிப்ஸ்டிக்



பூசின வெளிச்சம் சின்னச் சின்ன அலைகளில் தவழ்ந்து கொண்டிருந்தது.

இரண்டு ஆண்களைத் தவிர ஆறு பெண்கள் அதில் நீந்திக் கொண்டிருந்தார்கள். கரையில் சாய்ந்து படுத்துக் கொள்ள வாகான இருக்கைகள் இரண்டில் வெளிநாட்டு இளைஞன் ஒருவன் ஜட்டியுடன் படுத்திருக்க, அருகில் அவன் மனைவி அல்லது காதலி டூ பீஸ் நீச்சல் உடையில் சாய்ந்தமர்ந்து லைம் குடித்துக் கொண்டிருந்தாள்.

அருகாமை புல்வெளியில் தூரம் தூரமாய் சதுர மேஜைகள் போட்டு சிலர் அவசரமின்றி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் சுரேந்தர் ஒருவன். சூட் அணிந்திருந்தான். கோட்டைக் கழற்றி மற்றொரு நாற்காலியின் முதுகில் போட்டிருந்தான். டையில் மின்னும் கல் பதித்த பின் செருகியிருந்தான். ஒரு கையில் புகையும் சிகரெட்டுடன், மற்றொரு கையில் மெனுகார்டைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேறொரு வாசலில் அப்ஸரா வந்தாள்.

தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்த தன் இரண்டு தோழிகளுக்கு, "ஹாய்... ஹாய்..." சொன்னாள்.

"ஏன் இவ்ளோ லேட்?"

"வழில சுனில் பிடிச்சிக்கிட்டான். தோ டூ மினிட்ஸ்ல வந்துட்டேன்." தான்

கொண்டு வந்த சிறிய கைப்பையுடன் உடை மாற்றும் தனியறைக்கு சென்றாள் அப்ஸரா. டார்க் ப்ளூ சிங்கிள் நீச்சலுடையில் திரும்பி வந்தாள். அந்த சின்னச் சின்னத் துண்டுத் துணிகளாலான உடை அவளின் செழிப்பான தேகத்தை முற்றிலும் மறைக்க இயலாமல் திணறிக் கொண்டிருந்தது.

அப்ஸரா டைவிங் போர்டில் மெதுவாக ஏறினாள்.

புல்வெளியில் மேஜை அருகில் அமர்ந்திருந்த ஜெர்கின் அணிந்த ஒரு ஆசாமி தனக்கருகில் வைத்திருந்த ஒரு பெரிய பையை அதன் ஜிப்பை இழுத்துத் திறந்தான்.



அதற்குள்ளிருந்து ஒரு வீடியோ கேமிராவை எடுத்துத் தன் தோளில் வைத்துக் கொண்டு யூனிட்டை மற்றொரு தோளில் மாட்டிக் கொண்டு எழுந்தான்.

அப்ஸரா டைவிங் போர்டின் மேல் இப்போது அதன் முனைக்கு வந்து நின்று தன் தோழிகளையேப் பார்க்க... அந்த வீடியோகிராஃபர் தன் சாதனத்தை ஆன் செய்து கொண்டு லென்ஸ் வழியாக அவளைப் பார்த்தான். பதிவு செய்யத் துவங்கினான்.

அப்ஸரா அதைக் கவனிக்காமல் அந்தரத்தில் சுழன்று பிறகு நேராகி ஒரு மீன் கொத்தியாய் தண்ணீரில் செருகிக் கொண்டு உள்ளே சென்று வெளியே வந்த போதுதான்...

''அய்யய்யோ! அவன் உன்னை வீடியோ எடுத்துட்டாண்டி'' என்றாள் ஒரு தோழி.

வீடியோ மனிதன் சத்தமில்லாமல் தன் இடத்திற்குத் திரும்பி, சாதனத்தை லெதர் பையில் வைத்து அவசரமாக புறப்படத் தயாராக...

உடம்பிலிருந்து நீர் சொட்டச் சொட்ட வந்து குறுக்கே நின்றாள் அப்ஸரா.

''என்ன மிஸ்டர் செஞ்சே?''

''நவ் ஆர் யெஸ்டர்டே நைட்?''

''என்னை வீடியோ எடுத்தியா?''

''நோ'' என்று அவன் ஒரு சிக்லெட் பிரித்து வாயில் போட்டுக் கொண்டான்.

''நான் பார்த்தேன்.''



''நான இந்த டைவிங் போர்டைத்தான் ஷூட் பண்ணேன். அது மேல நீ நின்னதால அதுவும் விழுந்திருக்குமோ என்னவோ...''

''யூ... ராஸ்கல்!''

அப்ஸரா அவனை அறைய கையை ஓங்க, ஓங்கின கையைப் பிடித்து அப்படியே பின்பக்கம் முறுக்கினான் அவன்.

''ஆ!'' வலி தாங்காமல் கத்தினாள் அப்ஸரா.

இதுவரை மௌனமாக கவனித்துக் கொண்டிருந்த சுரேந்தர் தன் நாற்காலியை பின்னால் தள்ளி எழுந்து கொண்டான்.

''பப்ளிக்கா நூறு பேர் பார்க்கற மாதிரி

அரைகுறையா குளிப்பீங்க. அதை வீடியோ எடுத்தா கொறைஞ்சி போய்டுவீங்களா சாத்தான் போடி'' என்று அவன், அவளை கை பின்புறம் மடக்கி வைக்கப்பட் நிலையிலேயே நடத்தி நீச்சல் குளத்தி அப்படியே தள்ளி விட்டுவிட்டு நடக்க துவங்க..

''எக்ஸ்க்யூஸ் மி'' என்றான் சுரேந்த -அவன் முன்னால் நின்று.

''என்ன?'' என்று திரும்ப, கராத்தே முறையில் சுரேந்தர் ஒரு ஜம்ப் செய்து தனது வலது காலால் அவனுடைய இட தாடையில் ஒரு அப்பர் கிக் கொடுத்து விட்டு பழையபடி நிற்க...

அவன் பத்தடி தள்ளிச் சென்று

விழுந்தான்.

''ஸாரி பிரதர். நான் சும்மா இங்கே கராத்தே பிராக்டிஸ் பண்ணேன். அந்த இடத்துல நீங்க வந்து நின்னுட்டிங்களே என்னவோ...''

''ஏய்! ஹீரோடி'' என்றாள் ஒருத்தி அப்ஸராவின் தோளைத் தொட்டு. அப்ஸரா மீண்டும் கம்பிப் படிகள் ஏறி மேலே வந்து நின்று ரகளையை கவனித்தாள்.

கீழே விழுந்தவன் எழுந்து கொண்டான்.

''இத பாரு, அனாவசியமா நான் உன்னோட ஃபைட் பண்ண விரும்பலை. உனக்கும் உடம்பெல்லாம் புண்ணாய்டும். எனக்கும் என் டிரெஸ் எல்லாம் மண்ணாய்டும். அதனால எடுத்த வீடியோ கேஸட்டை அவங்ககிட்ட கொடுத்துட்டு, ஸாரி சிஸ்டர்னு ரெண்டே ரெண்டு வார்த்தை மரியாதையா சொல்லிட்டுப் போயிடு, பார்க்கலாம்.'' என்ற சுரேந்தர் ஒரு புது சிகரெட் பற்ற வைத்துக் கொள்ள...

அவன் வேகமாக ஓடி வந்து தன் தலையால் சுரேந்தரின் வயிற்றில் முட்டினான். அந்த திடீர் தாக்குதலுக்குத் தயாரில்லாமல் இருந்த சுரேந்தர் நிலைதடுமாறி நீச்சல் குளத்தில் வந்து அந்தத் தோழிகள் மேல் விழுந்தான்.

தத்தளித்து தண்ணீரின் மேற்பரப்புக்கு வந்து, ''சரி, உனக்கு விதி அப்படித்தான்னா யாரால மாத்த முடியும்?'' என்றான். ஒரே ஜம்ப்பில் குளத்தை விட்டு வெளியில் வந்து அவன் மேல் புலிப் பாய்ச்சலாய்

பாய்ந்தான்.

இங்கே அவரவர் கற்பனைகளுக்கேற்ற படி ஒரு ஃபைட் வைத்துக் கொள்ளுங்கள். இறுதியில் உதட்டோரம் கிழிந்து ரத்தம் வர, தஸ் புஸ் என்று மூச்சு வாங்க, தான் பதிவு செய்த வீடியோ கேஸட்டை அப்ஸ்ராவிடம் கொடுத்து விட்டு, ''ஸாரி'' என்றான்.

''சிஸ்டர்னு சேர்த்துச் சொல்டா'' கையை ஓங்கினான் சுரேந்தர்.

''அடிக்காதிங்க. சொல்லிடறேன்.. ஸாரி, சிஸ்டர்''

''இதை முதல்லயே சொல்லியிருக்கலாமில்லே. வேஸ்ட் ஆன ரத்தம் மறுபடி

சுரக்கறதுக்கு ஒரு மாசமாவது ஆகும். பே ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டு வீட்டுக்கு போ.''

அவன் முறைத்துக் கொண்டே சென்றதும் அப்ஸரா, ''ரொம்ப தேங்ஸ் சா உங்க பேரு?'' என்றாள்.

''சுரேந்தர்''

''தயவுசெஞ்சி நீங்க மறுக்கக் கூடாது என்ற அப்ஸரா தன் கழுத்தில் அணி திருந்த மெல்லிய தங்கச் செயினை கழற்றி அவனிடம் நீட்டினாள்.

''உடனே உங்க பணக்காரத் திமிரை காட்டிடுவீங்களே. இதென்ன சன்மானமா பெரிய ராஜ பரம்பரைன்னு நினைப்பா சிங்கப்பூர்ல எங்க வீட்டு நாய்க்கு தங்கத்திலதான் சங்கிலி செஞ்சி கட்டி போட்டிருக்கோம். என்கிட்ட வச்சிக்காதே அவன் செஞ்சது நியாயமில்லைன்னு பட்டுது. உதைச்சேன். தட்ஸ் ஆல். பை!'' என்றுவிட்டு வேகமாக நடந்தான் சுரேந்தர்

அதிர்ச்சியுடன் நின்றாள் அப்ஸரா.

''என்ன ஒரு இன்ஸல்ட்! ரொம்பத்தான் அலட்டிக்கிட்டுப் போறான் அப்ஸரா'' என்றாள் ஒருத்தி.

''ச்சீ! போடி! அந்த அலட்டல் தான்டி கம்பீரம். இவரோட ஈகோ எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஐ லைக் இட்' என்ற அப்ஸரா தூரத்தில் போகின்ற சுரேந்தரின் முதுகையேப் பார்த்துக் கொண்டிருந்தாள் புன்னகையுடன்.






**இந்தக் கதை துவங்கும் முன் நடந்த சம்பவம் - 1:**

வர்மா கிளப்பில் அமர்ந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார். பாய்ண்ட்டுக்கு ஆயிரம் ரூபாய் வைத்து ஆடும் உயர்ந்த ரக சூதாடிகளுக்கான கிளப் அது.

தேவைப்படுபவர்கள் விஸ்கி, பிராந்தி சாப்பிட்டுக் கொண்டே ஆடலாம்.

வர்மா அன்றைய ஆட்டத்தில் அதுவரை ஒரு லட்சத்து நாற்பத்தெட்டாயிரம் தோற்றிருந்தார். அதைப் பிடிக்க வேண்டுமென்கிற -பந்தயத் துடிப்பில் என்று எழுதினால் தலைப்பை தொடர்பு படுத்துவதற்காக வலிய செருகினது போல் இருக்கும். ஆகவே- அடங்காத வெறியுடன் உட்கார்ந்திருக்க...

ஒரு உதவியாள் வந்து பவ்யமாகக் குனிந்து வேதம் சொல்பவனைப் போல், ''சார், உங்களுக்கு போன்'' என்றான்.

''யாரு?''

''உங்க வீட்லேர்ந்து முத்தையா பேசறார்''

முத்தையா - வேலைக்காரன், நாற்பது வயது வேலைக்காரன். ரொம்ப நாளைக்கு முன்னாலிருந்து வர்மாவின் வீட்டில் இருப்பவன். மனைவியை இழந்தவன், குழந்தை இல்லாதவன். ஒரு விசுவாசமான மனித நாய்க்குட்டி.

''என்னடா முத்தையா?'' என்றார் வர்மா போனில் எரிச்சலாய்.

''வந்து... நீங்க கொஞ்சம் நேர்ல வாங்கய்யா...''

''எதுக்கு?''

''அம்மா... வந்து...''

''யாரு? என் பொண்டாட்டியா? தெளிவா சொல்லித் தொலையேன். நீ ராஜியையும் அம்மாங்கறே,
 அப்ஸராவையும் அம்மாங்கறே...''

''அப்ஸராம்மாதான் பெங்களூர் போயிருக்காங்களே''

''சரி, ராஜிக்கு என்ன?''

''நிதானத்தில இல்லைங்கய்யா...''

''மைகாட்! ஆரம்பிச்சிட்டாளா மறுபடி?''

''காரை தனியா ஓட்டிக்கிட்டு வெளில போகணும்னு ஒரே பிடிவாதம். ரூம் கதவை சாத்தி வச்சிட்டேன். உள்ளே எல்லா சாமான்களையும் தூக்கிப் போட்டு உடைக்கிறாங்க.''

''வீட்ல வேற யார் இருக்கா?''

''நான் மட்டும்தான் இருக்கேன். என்னை கதவைத் திறந்து விடச் சொல்லி கெட்ட வார்த்தை எல்லாம் சொல்லி திட்றாங்கய்யா...''

''திறந்துடாதே. டேஞ்சர்! நான் வர்றேன், உடனே வர்றேன்...''

வர்மா தனது சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளப்பை விட்டு வெளியேறி தன் காருக்கு வந்தார்.

டிரைவர் விரைப்பாகி பின்கதவைத் திறந்து பிடித்தான். ஒரு வினாடி யோசித்த வர்மா, அந்தக் கதவை அறைந்து சாத்திவிட்டு கை நீட்டினார்.

''சாவி கொடு. நீ வீட்டுக்குப் போ''

''உங்களை வீட்ல விட்டுட்டுப் போறேனே சார்.''

''சொல்றதைச் செய்டா முண்டம்!''

வர்மா காரில் அமர்ந்து, ஸ்டார்ட் செய்து புறப்பட்டார்.

தன் பங்களாவின் போர்ட்டிகோவில் 
காரை நிறுத்தி, எஞ்சினை ஊமையாக்கி இறங்கினார் வர்மா.

முத்தையா ஓட்டமாய் வந்து அவரிடமிருந்து பெட்டியை வாங்கிக் கொண்டு மாடி அறையின் சாவியைக் கொடுத்தான்.

படிகள் ஏறி மேலே வந்து அந்த அறையின் பூட்டைத் திறந்து கதவைத் தள்ளினார். உள்ளே வந்து விளக்கைப் போட்டார்.

உள்ளே கட்டிலில் குப்புறப் படுத்திருந்த அவர் மனைவி ராஜி விருட்டென்று பாம்பு போல தலையை மட்டும் தூக்கிப் பார்த்தாள்.

அறை அலங்கோலமாக இருந்தது.

பீங்கான் தொட்டிகள் உடைந்து கிடந்தன அவள் தலையில் வைத்திருந்த மல்லிகை சரம் உதிர்ந்து அறையெங்கு சிந்தியிருந்தன.

ராஜியை அமைதியாக கைகளைக் கட்டி கொண்டு பார்த்தார் வர்மா.

அவள் அவசரமாக எழுந்து கொண்டாள் மார்புச் சேலை தோளில் இருந்து சரிந்தை பொருட்படுத்தாமல் அவரை நோக்கி வந்தாள். அவரின் கோட்டைப் பிடித்துக் கொண்டு உலுக்கினாள்.

''எனக்கு வேணும். உடனே வேணும் ப்ளீஸ்...''

''செஞ்ச ரகளை போதும். போ மரியாதையா படுத்துத் தூங்கு ராஜி.''

''முடியாது. எனக்கு குவார்ட்ட பாட்டிலாவது வேணும்.''

''நோ! நீ சீரழிஞ்சது போதும்.''

''ஆரம்பிச்சி வெச்சது யாரு?''

''நான் ஒரு த்ரில்லுக்காக ஒரு தடவை உனக்கு விஸ்கி ஊத்திக் கொடுத்தேன் அதுக்காக எனக்குத் தெரியாம நீயா அந்த பழக்கத்துக்கு அடிமையாக சொன்னேனா?''

''விரும்பியோ, விரும்பாமலோ பழகிட் டேன் வர்மா. அந்த போதை எனக்கு ரொம் பிடிச்சிப் போச்சி. என்னால குடிக்கா இருக்க முடியலை. உடம்பு பூரா பர ரங்குது. ப்ளீஸ் வர்மா... கெஞ்சறேன்ல?''

''ராஜி, நீ ஒரு பொம்பளை...''



''ஏன் ஆரம்பிச்சி வெச்சிங்க?''

''உனக்கு கல்யாண வயசில ஒரு மக இருக்கா...''

''அது என் மனசுக்கு உறைக்க மாட்டேங்குது.''

''வேணாம் ராஜி. ஆயிரம் தடவை சொல்லிட்டன். உன்னை எப்படித் திருத்தறதுன்னு எனக்குத் தெரியலை.''

''வேணாம். என்னைத் திருத்த வேணாம். ஏன் திருத்தணும்? எனக்கு அந்த மயக்கம் பிடிச்சிருக்கு. ஏன் மறுக்கறிங்க?''

''நான்சென்ஸ்! அப்பப்ப நீ இந்த மாதிரி வெறியேறி ரகளை செய்ய ஆரம்பிச்சிட்டே. இனிமேயும் வெளியுலகத்துக்கு மூடி வைக்க முடியாது. நாளைக்கு நான் உன்னை ஒரு டாக்டர் கிட்டே அழைச்சிக்கிட்டுப் போயாகணும்.''

''எதுக்கு?''

''உனக்கு ஏற்பட்டிருக்கிற இந்த ஆல்கஹால் வெறியை துடைச்சி எறியறதுக்கு ட்ரீட்மெண்ட் இருக்கும்மா. டாக்டர் சொல்றபடி நடந்தா இந்த அடிக்‌ஷனை விட்டு ஒழிச்சிடலாம்.''

''தேவையில்லை. நான் எங்கயும் வரமாட்டேன். எதுக்காக இதை ஒழிக்கணும்? எனக்கு எவ்வளவு சுகமா இருக்கு. அதைப் போய் ஏன் நிப்பாட்டணும்? இப்ப எனக்கு ஒரு பாட்டில் விஸ்கி நீங்க வாங்கிட்டு வரச் சொல்லப் போறிங்களா இல்லையா? நான்

சொன்னா முத்தையா போக மாட்டேங்கறான்.''

''நான் வாங்கித்தர மாட்டேன்.'' என்றார் வர்மா கண்டிப்பாக. கைகளைக் கட்டிக் கொண்டபடி.

''வேணாம். நானே போய் வாங்கிக்கறேன்'' என்று நகர்ந்தவளை இழுத்து பொளேர் என்று அறைந்ததில் கீழே போய் விழுந்தாள்.

''ராஜி, நீ என்னை மிருகமாக்கறே. போய் ஒழுங்காப் படு.''

''மாட்டேன்'' என்று எழுந்து கொண்டாள் ராஜி. ''உங்க சந்தோஷங்களுக்கு நான் எப்பயாவது குறுக்கே நின்னுருக்கேனா? சீட்டாடறீங்க, லட்சக் கணக்கில தோக்கறிங்க. அதுவும் ஒரு போதை தான். மாத்திக்கிட்டீங்களா? இத்தனை நாள் கேக்கக் கூடாதுன்னு நினைச்சதை இப்ப கேக்கறேன். அண்ணா நகர்ல ஒரு பிளாட் விலைக்கு வாங்னீங்களே... அங்கே யார் குடியிருக்கா?''

''வாடகைக்கு விட்டிருக்கேன். யாரோ குடியிருக்காங்க. அதைப் பத்தி என்ன?''

''யாரோ இல்லை! என் சக்களத்தி குடியிருக்கா! ரஞ்சனி அவ பேரு. அந்த வீட்ல அவ மட்டும்தான் இருக்கா. போன்கூட கனெக்ஷன் வாங்கிக் கொடுத்திருக்கிங்க. எங்கிட்ட இருக்கிறதை விட ரெண்டு மடங்கு புடவை வச்சிருக்கா. போர்டு மீட்டிங், வெளக்கமாறு, தெருப்புழுதின்னு எதையாவது சொல்லிட்டு நீங்க அவளைப் போய் கொஞ்சிட்டு கொட்டம் அடிச்சிட்டு வர்றீங்க. இதெல்லாம் உண்டா இல்லையா?''

வர்மா அதிர்ந்து போய் நின்றார்.

அத்தனையும் உண்மைதான். அலுவலகத்திற்கு வேலை கேட்டு வந்தவளை மடக்கிப் போட்டு, பர்சனல் வேலைக்காக சின்ன வீடாக அவர் குடி வைத்திருப்பது உண்மையிலும் உண்மை.

இது எப்படி இவளுக்குத் தெரியும்? அதுவும் இத்தனை துல்லியமான விவரங்களுடன்?

வர்மா போர்க்களத்தில் ஆயுதங்களை எல்லாம் இழந்து நிராயுதபாணியாக நிற்பது போல் உணர்ந்தார். வெலவெலத்துப் போனார். இத்தனை நேரம் அவளை அதிகாரமாக மிரட்டிக் கொண்டிருந்த கம்பீரம், கற்பூரமாய் கரையத் துவங்கியது.

''என்ன அப்படியே சிலை மாதிரி நின்னுட்டீங்க வர்மா? என்னை பஞ்சு மிட்டாய் வாங்கிக் கொடுத்து ஏமாத்திடலாம்னு நினைச்சீங்களா?''

''ராஜி! இதபாரு. யாரோ இல்லாததும் பொல்லாததும் சொல்லி உன் மனசை கெடுத்திருக்காங்க. நீ இப்ப நிதானத்தில இல்லை.''

''ஆமாம். குடிச்சேன். ரகசியமா வச்சிருந்த விஸ்கியைத் தீர்த்துட்டேன். அதனாலதான் கேக்கறேன். எனக்கு இப்ப வேணும் வர்மா. ஞாபகம் இருக்கா... நாம்

லவ் பண்ணி கல்யாணம் செய்துக்கிட்டோம். அடுத்தவரோட உரிமையை, உணர்வை மதிக்கிற உங்க குணம்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சது. நீங்க ரஞ்சனியை வச்சிக்கிட்டிருக்கீங்க. அது நம்ம பண்பாட்டின்படி துரோகம். ஆனா உங்க மனசுக்கு சந்தோஷம். அந்த மாதிரி நானும் உங்களுக்கு ஒரு துரோகம் செய்யப் போறேன். ஆனா அது என் மனசுக்கு சந்தோஷம்.''

''என்ன சொல்றே?''

''குடிச்சிட்டு உளறலை. தெளிவா பேசறேன். இன்கம்டாக்சுக்கு பயந்து நீங்க முக்காவாசி சொத்தை என் பேர்ல வாங்கியிருக்கீங்க. பாங்க்ஸ்ல அல்மோஸ்ட் எல்லா அக்கவுண்ட்சும் என் பேர்லதான் இருக்கு.''

''அதனால?''

''நான் உங்களை டைவர்ஸ் பண்ணப் போறேன். கம்பெனிலேர்ந்து உங்களை வெளில அனுப்பிட்டு கம்பெனியை நான் எடுத்துக்கப் போறேன். லாயரை தீவிரமா விசாரிச்சுட்டேன். சட்டப்படி அப்படிச் செய்ய எனக்கு வாய்ப்பிருக்கு. பாருங்க, இன்னும் கொஞ்ச நாள்ல நீங்க ஒரு செல்லாக் காசு!''

வர்மா முகம் சிவந்தார். மனைவியே இப்போது எதிரியா?

''என்ன பேச்சு மூச்சை காணோம் வர்மா? எனக்கு நீங்க செஞ்ச துரோகத்தை என்னால தாங்க முடியலை. அதனாலதான் மேல



மேல குடிக்கறேன்.''

''ராஜி, நான் இப்ப எதுவும் பேசத் தயாரா இல்லை. தூங்கு. காலைல பேசலாம்.''

''முடியாது. இப்ப எனக்கு பதில் தெரியணும். என்னைக் காதலிச்சி தானே நீ கல்யாணம் செய்துக்கிட்டே? பின்னே ஏன் இன்னொருத்தி கிட்டே போனே?''

தடால் என்று நீ, வா, போ என்று மரியாதை இறங்கினது சொரீர் என்று உறைத்தது. வலித்தது. எரிச்சல் தந்தது. ஆத்திரம் வளர்த்தது.

ராஜி அவரின் கோட்டைப் பிடித்து கசக்கி, உலுக்கி வெறித்தனமாக கத்தத் துவங்கினாள். அந்தக் கத்தலில் ஏராளமான அச்சிடத் தகாத வார்த்தைகள் நிரம்பியிருந்தன.

''என்கிட்டே என்ன சுகம் கிடைக்கலை உனக்கு? சொல்லுடா, என்ன குறை எங்கிட்ட? மலடியா? ரத்தினம் மாதிரி பொண்ணை பெத்துக் கொடுத்தேனே. அவ வளர்ந்து நிக்கிற இந்த வயசுல உனக்கு எதுக்குடா வப்பாட்டி? என்கிட்ட இல்லாத என்ன ----- ----- அவ கிட்ட இருக்கு?''

ஆத்திரத்தின் உச்சிக்குச் சென்ற வர்மா, கண்கள் சிவக்க தன்னை உதறிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். டென்னிஸ் ராக்கெட் மாட்டப்பட்டிருந்தது. அதை எடுத்து திருப்பிப் பிடித்துக் கொண்டு, ''ராட்சசி! என்னையா வாடா, போடாங்கறே! நான் ஆம்பளைடி! அப்படித் தாண்டி

இருப்பேன்!'' என்று மடேர் மடேர் என்று அவளை அடிக்கத் துவங்கினார்.

தன்னிலை மறந்து வெறித்தனமாக அவள் முதுகிலும், கன்னத்திலும், மண்டையிலுமாக மாறி மாறி இரும்பு டென்னிஸ் ராக்கெட்டால் அடித்து விளாச...

ராஜி வலி தாங்காமல் கத்தத் துவங்கினாள். மண்டையில் இருந்து ஒரு குட்டி அருவியாக ரத்தம் வழிந்தது. அறுந்த பட்டமாக தொய்ந்து சரிந்து தரையில் விழுந்தாள்.

விழுந்ததில் இருந்து ஏழே ஏழு வினாடிகள் மட்டும் வலியுடன் உயிர் வாழ்ந்தாள் ராஜி.






ஷாம்பூ போட்டுக் குளித்த கூந்தலை ஹேர் ட்ரையர் போட்டுக் கொண்டிருந்தாள் அப்ஸரா. முணுக், முணுக்கென்று அருகில் இருந்த சிறிய டெலிபோன் ஒலித்ததா, இல்லை சிணுங்கியதா?

எடுத்து, ''ஹலோ! அப்ஸரா'' என்றாள்.

எதிர்முனையில் இருந்து பதில் இல்லை.

''ஹலோ! ஹலோ!''

''வணக்கம். நான் சுரேந்தர் பேசறேன்.''

''எந்த சுரேந்... ஓ! நேத்து ஸ்விம்மிங் பூல்ல டிஷீம் டிஷீம் பண்ணி என் மானத்தைக் காப்பாத்தினீங்களே, அந்த சுரேந்தர்?''

''யெஸ், உங்க குரல்ல இருக்கிற கலகலப்பைப் பார்த்தா நான் போன் பண்ணியிருக்கவே வேண்டாம்னு தோணுது.''

''புரியலை.''

''நான் நேத்து உங்ககிட்டே ரஃப்பா பேசிட்டதா தோணிச்சி. உங்க கிட்டே ஸாரி சொல்றதுதான் மரியாதைன்னு பட்டுது. ஹோட்டல் ஸ்விம்மிங் கிளப்ல உங்க போன் நம்பர் விசாரிச்சி கூப்பிட்டேன்.''

''மன்னிப்பா? என்கிட்டயா? வொய்?''

''நீங்க செயின்தர வந்தப்போ நான் எடுத்தெறிஞ்சி பேசினது கொஞ்சம் ஓவர் ஆக்டிங், இல்லை?''



''இல்லை. சுர்ருன்னு உங்களுக்கு வந்த அந்த கோபம் எனக்கு ரொம்பப் பிடிச்சது. நான் நியாயமா நன்றி சொல்லணும். அதை விட்டுட்டு செயினைக் கழட்டினது தப்புதான்.''

''அய்யோ! அப்போ என் மேல கோபமே இல்லையா?''

''ஒரு மைக்ரோகிராம் அளவு கூட இல்லை.''

''இப்பதான் எனக்கு நிம்மதியா இருக்கு. என்ன செய்றீங்க நீங்க?''

''ஜஸ்ட் இப்பதான் குளிச்சிட்டு வந்து தலையை காய வச்சிட்டிருக்கேன்.''

''காலேஜ் போறிங்களான்னு கேட்டேன்.''

''காலேஜ்? தேங்க்யூ, தேங்க்யூ வெரிமச்.''

''எதுக்கு?''

''என்னைப் பாத்தா காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரியா தெரியுது? ஏம் ஐ ஸோ யங்? பத்து நாளைக்கு முன்னாடி நான் இருபத்தி ரெண்டாவது பர்த்டே கொண்டாடி பார்ட்டி கொடுத்தேன்.''

''ஒரு ரெண்டு வாரம் முன்னாடி அந்த வீடியோகிராபர் உங்களை ஷூட் பண்ணியிருக்கலாம்.''

''ஏன்?''

''நம்ம மீட்டிங் அப்போ நடந்திருக்குமே. என்னை இன்வைட் பண்ணியிருப்பிங்களே. நானும் உங்க பர்த்டே பார்ட்டில கலந்துக்கிட்டிருப்பனே...''

''அவ்வளவுதானா? உங்களுக்காக தனியா ஒரு ஸ்பெஷல் பார்ட்டி கொடுத்துட்டாப் போச்சி.''

''ஷ்யூர்?''

''ஹண்ட்ரட் பெர்ஸண்ட் ஷ்யூர். ஏதாச்சும் காரணம் கிடைக்காதான்னு அலையறவ நான் பார்ட்டிக்கு. அந்த ரோக் என்னை வீடியோ எடுத்து என்ன செய்றதா இருந்தானோ - மஸ்ட் பி எ பிளாக் மெய்லர். ஒரு பெரிய இக்கட்டிலேர்ந்து காப்பாத்திருக்கீங்க. அதுக்காகவாவது பார்ட்டி கொடுக்க வேணாமா?''

''அவன் பிளாக் மெயிலர் இல்லைங்க.



ஒரு பொழுதுபோக்குக்கு எடுத்தவன். ஹார்ம்லெஸ் ரோக். ஆனா நல்ல ரசனையுள்ள ரசிகன்.''

''எப்படி?''

''ஐ திங், நேத்து உங்களைச் சேர்க்காம ஒரு ஆறு பேர் நீந்திட்டிருந்தாங்க. நான் கவனிச்சிக்கிட்டேதான் இருந்தேன். அந்த ஆறு பேரையும் பார்த்துட்டு முகம் திரும்பிக்கிட்டான். நீங்க ஸ்விம் பண்ண வந்ததும் அத்து மீறிட்டான். உங்க ஃபிகர் அவனை வீடியோ பண்ண தூண்டிடிச்சி.''

''சும்மா சும்மா என்னை தேங்க்யூ சொல்ல வைக்கிறீங்களே...''

''உண்மையை சொன்னேன். நேத்து ராத்திரி ரெண்டு காரணங்களால என் தூக்கம் கெட்டுப் போச்சு. ஒண்ணு உங்களை உதாசீனப்படுத்திப் பேசினதால.'

''இன்னொண்ணு?''

''வேணாங்க. ஐ திங்க் ஐ'ம் கிராஸிங் தி லிமிட்''

''அப்புறம்? எங்கே, எப்போ?''

''என்ன?''

''நான் உங்களுக்குத் தர்ற பார்ட்டி?''

''அதை கொடுக்கறவங்க தான் டிசைட் பண்ணணும்.''

''நாளைக்கு ஈவினிங் செவன்-ஓ-கிளாக் சூட்டபிள்?''

''ஓக்கே...''

''கன்னிமாரா ஹோட்டல். ரிசப்ஷன்ல

யார் முந்தி வர்றமோ அவுங்க மத்தவங்களுக்காக வெய்ட் பண்ணலாம்."

''சரி'' என்றான் சுரேந்தர்.

போனை அதன் இடத்தில் வைத்த அப்ஸரா கண்ணாடி அப்ஸராவைப் பார்த்து நாக்கைத் துருத்திப் பழித்துக் காட்டி சிரித்தாள்.

சுரேந்தரின் போனுக்குப் பிறகு தனக்குள் சில இரசாயன மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். அதில் ஒன்று: தேவையில்லாமல் சிந்துகின்ற புன்னகை.





## இ.சு.து.மு.ந.சம்பவம் - 2

வெளிறிய முகத்துடன் தன் படுக்கையறையை விட்டு வெளியேறி வந்த வர்மாவைப் பார்த்ததும் கீழே மாடிப்படியின் கடைசிப் படியில் அமர்ந்திருந்த முத்தையா எழுந்து கொண்டான்.

''முத்தையா, மேல வா'' என்றார் வர்மா சலனமின்றி.

''அய்யா?'' என்று பாய்ச்சலாய் வந்து நின்றான்.

''ரூமுக்குள்ளே போய்ப் பாரு.''

''அம்மா ரொம்ப தொந்தரவு பண்றாங்களா?''

''போய்ப் பாரு.''

உள்ளே போய்ப் பார்த்துவிட்டு, ''அய்யோ!'' என்று அலறி தன் வாயைப் பொத்திக் கொண்டான். வெளியில் ஓடி வந்தான்.

''என்னய்யா இது?'' என்றான்.

ஆடும் நாற்காலியில் அமர்ந்திருந்த வர்மா மெதுவாகச் சொன்னார்.

''செத்துட்டா முத்தையா. என்னோட ஆத்திரத்தை ரொம்ப தூண்டிப் பேசி, என்னைக் கொலைகாரனாக்கிட்டா. என் கையாலேயே... மை காட்!'' தன் முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டார் வர்மா.



என்ன சொல்வது என்று புரியாமல் விக்கித்து நின்றிருந்த முத்தையா தோளின் துண்டின் முனையை வாயில் பொத்தியிருந்தான்.

''இப்ப என்ன செய்றது முத்தையா? எனக்கு எதுவும் புரியலை.''

''போலீசுக்கு போன் பண்ணிச் சொல்லிடுங்கய்யா.''

''முட்டாள் மாதிரி பேசாதே. என்னைக் கைது செஞ்சிடுவாங்கடா. நடந்திருக்கிறது ஒரு கொலை.''

''அய்யா, நீங்க அம்மாவைக்

கொல்லணும்னு நினைக்கலை
அவங்களோட அடாவடித்தனம் பொறு
காம ஆத்திரத்தில ரெண்டு தட்டு தட்
னீங்க. அதுல அவங்க போய்ட்டாங்க
பாவம்! அல்பாய்சு. இது விபத்து மாதி
தானேய்யா.''

''அதெல்லாம் எடுபடாது முத்தைய
இது கொலைதான். காரணம் எதுவ
இருந்தாலும் செயல்பட்ட சூழ்நிலை
எப்படி இருந்தாலும் இது குற்றம்தான்
பெரிய குற்றம்.''

''நான் சாட்சி சொல்றேன்யா.''

''அதெல்லாம் செல்லாது.''

''அப்ப, போலீசுக்கு சொல்ல
வேணாம்னு சொல்றீங்களா?''

''ஆமாம்.''

''வேற எப்படி? இது வெளில தெரியா
போய்டுமா?''

''வெளில தெரியாம செய்யணும்.''

''எப்படி?''

''முத்தையா, அதுக்கு நீதான் உதவணு
உதவுவியா?''

''பதினைஞ்சு வருஷமா உங்க உப்பை
தின்னு வளர்ந்த உடம்புய்யா இது. என்ன
செய்யணும்னு சொல்லுங்க, செய்யறேன்

''ராஜி குடிச்சிருந்தா இல்லையா?''

''ஆமாம்.''

''போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்ல அ
நிச்சயமா தெரிய வரும். ராஜி குடிச்சிட்
கன்னா பின்னான்னு காரை எடுத்து



கிட்டுப் போய், மரத்தில மோதி, ஆக்ஸிடெண்ட் ஆயி, அதில் செத்துட்ட மாதிரி செட்டப் செய்யணும்.''

''அய்யா, இது தப்பில்லையா?''

''இப்ப நமக்கு வேற வழி இல்லை முத்தையா.''

''போலீஸ் கண்டுபிடிச்சிடாதா?''

''போலீஸ் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாதபடி சாமர்த்தியமா செய்தாகணும்'' என்றபோது டெலிபோன் ஒலித்தது.

அதை எடுக்கச் சென்ற வர்மா, கையைப் பின்னே இழுத்துக் கொண்டு, ''முத்தையா, நீ எடு போனை. யாரா இருந்தாலும் சரி, அய்யா கிளப்புக்குப் போயிருக்காரு, இன்னும் வரலைன்னு சொல்லு.'' என்றார்.

முத்தையா நடுங்கும் விரல்களுடன் ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ, யாருங்க?'' என்றான்.

''நான் டாக்டர் நீலகண்டன் பேசறேன். வர்மா இருக்காரா?''

''இல்லையே சார். அவர் கிளப்புக்குப் போயிருக்கார். எப்ப வருவார்ன்னு தெரியலை. ஏதாவது சொல்லணுமா டாக்டர்?''

''ஒண்ணுமில்லை. நான் போன் செஞ்சதா மட்டும் சொல்லு. நான் நாளைக்குப் பேசிக்கறேன்.''

முத்தையா போனை வைத்து விட்டு, ''டாக்டர் நீலகண்டன்'' என்றான்.

''சரி, இப்போ நீ என்ன செய்றே, ராஜியோட பிணத்தை நம்ம அம்பாஸிடர்ல போட்டுக்கிட்டு தாம்பரம் தாண்டி செங்கல்பட்டு ரோட்ல ஒரு ஓரமா நிறுத்திக்கோ. நான் இங்கே ரூமை சுத்தம் பண்ணிட்டு அரை மணி நேரத்துல பெரிய வண்டி எடுத்துக்கிட்டு உன் பின்னாலேயே வந்துடறேன். அங்கே வந்ததும் எப்படி செட்டப் செய்றதுன்னு சொல்றேன்.''

''எனக்கு உதறலா இருக்குங்கய்யா...''

''முத்தையா, எனக்கு மட்டும் இப்படி கொலையை மறைச்ச அனுபவமா என்ன? நான் தூக்குல தொங்கணுமா? அப்ஸரா அனாதையாகணுமா? யோசிச்சுப் பாரு.''

''நல்லதோ, கெட்டதோ நீங்க சொல்ற



ஒரு வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நீங்க சொல்றபடி நான் செய்றேன்யா. எனக்கு அரசாங்கம், போலீசு, சட்டம் எல்லாம் உங்களுக்கு அப்புறம்தான்'' என்றான் உணர்ச்சிப்பூர்வமாக.

அடுத்த பத்து நிமிடங்களில் ஷெட்டில் இருந்த அம்பாஸ்டர் காரை கொண்டு வந்து போர்ட்டிகோவில் நிறுத்தினான் முத்தையா. பின் கதவைத் திறந்து வைத்தான். மாடியறைக்கு வந்தான்.

ராஜியை ஒரே தம்மில் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டான். அவளின் தலைமுடியும், கைகளிரண்டும் ஊசலாட படிகளில் இறங்கினான். பிணத்தை காரின் பின் இருக்கையில் கிடத்தினான்.

''எதுக்கும் ஷெட்லேர்ந்து ஒரு பத்து லிட்டர் பெட்ரோல் ஒரு கேன்ல கொண்டு வந்து வச்சிக்க முத்தையா'' என்றார் வர்மா. ''தேவைப்படலாம்.''

அவன் கார் ஷெட்டிற்கு பெட்ரோலுக்குச் சென்றபோது வர்மா காரின் டிக்கியைத் திறந்து தோட்ட வேலைக்காக இருந்த கடப்பாரை ஒன்றையும், மண்வெட்டி ஒன்றையும் உள்ளே வைத்து மூடினார்.

''நான் புறப்படட்டுமா அய்யா?'' என்று வந்தான் முத்தையா.

''ஜாக்கிரதை. நான் சீக்கிரத்துல புறப்பட்டு பின்னாலேயே வர்றேன். நிதானமான வேகத்திலேயே போ.''

காரில் முத்தையா புறப்பட்டுச் சென்றான்.



அவன் சென்ற பத்து நிமிடங்கள் கழித்து வர்மா வீட்டுக்குள் வந்தார். டெலிபோனை எடுத்தார். எண்களைச் சுழற்றினார்.

''ஹலோ, அசிஸ்டெண்ட் கமிஷனர் பத்ரிநாத் வீடுதானே? அவர் இருக்காரா? நான் வர்மா பேசறேன்னு சொல்லுங்க. தெரியும்.''

சில வினாடிகளில், ''ஹலோ, பத்ரிநாத் பேசறேன். எப்படி இருக்கீங்க வர்மா?''

''சார், அப்செட்! டோட்டலி அப்செட்! ஒரு பெரிய குழப்பம். எனக்கு எதுவுமே புரியலை.''

''கொஞ்சம் தெளிவா சொல்லுங்க வர்மா.''

"நான் கிளப்லேர்ந்து வீட்டுக்கு இன்னைக்கு சீக்கிரத்துலேயே வந்தேன். வீடு திறந்து கிடக்கு. என் டாட்டர் அப்ஸரா பெங்களூர் போயிருக்கா. வீட்ல என் வைஃப்பும், வேலைக்காரன் முத்தையாவும் இருந்தாங்க. நான் முத்தையாவை கூப்பிட்டுப் பார்த்தேன், பதில் இல்லை. அவனைக் காணோம். மாடிக்கு என் ரூமுக்கு வந்து பார்த்தா, ரூம்ல ஒரே அலங்கோலமா இருக்கு! ராஜியையும் காணோம். அது மட்டுமில்லை. என்னோட ப்ளூ கலர் அம்பாஸிடரையும் காணோம்."

"நீங்க சொல்ற முத்தையாவுக்கு காரோட்டத் தெரியுமா?"

"நல்லா ஓட்டுவான்."



"சரிதான். நீங்க சொல்ற சிச்சுவேஷனை வெச்சிப் பார்த்தா, உங்க மனைவியை அவன் கிட்நாப் பண்ணிட்டுப் போயிருக்கிற மாதிரி தெரியுது. நான் உடனே உங்க வீட்டுக்கு வர்றேன். அதுக்கு முன்னாடி உங்க காரைத் தேட ஏற்பாடு பண்ணிடலாம். நம்பர் சொல்லுங்க."

சொன்னார். வர்மா வைத்தார்.

'முத்தையா, என்னை மன்னித்து விடு. ஒரு கொலையை முற்றிலும் மறைப்பது சிரமம். அதை இன்னொருவர் செய்ததாக சித்தரிப்பது சுலபம். நான் தப்பிக்க உன்னை பலிகடாவாக்க வேண்டியிருக்கிறது. எனக்கு வேறு வழியில்லை.'



## 6

கன்னிமாரா ஹோட்டலின் ரிஸப்ஷனில் கால் மேல் கால் அணிந்து தான் காத்திருக்கும் நேரத்திற்கு "Love Me Urgently' என்னும் ஆங்கில நாவலை வாசித்துக் கொண்டிருந்தாள் அப்ஸரா.

இன்றைக்கு அவள் தன் மேக்கப்பிற்காக ஒன்றேகால் மணி நேரம் செலவிட்டிருந்தாள். அதன் புதுக்கருக்கு மாறுமுன் சுரேந்தர் வந்துவிட வேண்டும் என்கிற அவஸ்தை இருந்தது.



முக்கால் மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்த சுரேந்தர், "தேங்க் காட். கோபமாகி வீட்டுக்குப் புறப்பட்டுப் போயிருப்பீங்களோன்னு நினைச்சேன். ஐ'ம் ஸாரி. புறப்படறப்ப டாடி கிட்டேர்ந்து கால் வந்தடுச்சு" என்றான்.

"டாடி எங்கே இருக்கார்?"

"சிங்கப்பூர். பில்டிங் காண்ட்ராக்ட். சுப்ரீம் கன்ஸ்ட்ரக்ஷன்னு பேரு. டாடி பேர் கேட்டு நீங்க சிரிக்கக் கூடாது. குஞ்சப்பன்."

ஆனாலும் சிரித்தாள் அப்ஸரா. "வாங்க, உள்ளே போகலாம்."

அவனுடைய நடையில் ஒரு மிடுக்கு

இருந்தது. அவன் போட்டிருந்த செண்ட் மணத்தில் தான் போட்டிருக்கும் செண்ட் மணம் காணாமல் போயிருப்பதை உணர்ந்தாள் அப்ஸரா.

கார்டன் சர்வீஸில் ஒரு தனி மேஜையில் எதிரெதிரே அமர்ந்தார்கள். ஒரு சதுர சிமெண்ட் மேடையில் யாரையும் தொந்தரவு செய்யாமல் இரண்டு பெண்கள் மிருதுவாக புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

சுரேந்தர் வெள்ளைப் பேண்ட்டும், ஒரு கேஷுவல் டி ஷர்ட்டும் அணிந்து இருந்தான். கழுத்துச் செயின் டாலரில் நங்கூரம் இருந்தது. மார்பில் ஏராள முடி.

''அப்ஸரா, உங்க மேக்கப் என்னைப் படுத்துது. சிம்ப்ளி ரேவிஷிங். எனக்குக் கொஞ்சம் ஒட்டை வாய். படார், படார்னு போட்டு உடைச்சிடறேன். சங்கடப் படுத்தறேனா?''

''சேச்சே'' என்றாள் அப்ஸரா. ''உங்களுக்கு இப்படி டி ஷர்ட்தான் நல்லா இருக்கு. கோட், சூட் ரொம்ப அஃபிஷியலா இருக்கு.''

''இப்ப நான் தேங்க்யூ சொல்லணுமில்ல?''

அப்ஸரா வாய் விட்டுச் சிரித்தாள்.

''அய்யோ! அப்படிச் சிரிக்காதீங்க.''

''ஏன்?''

'மின்னல்ன்னு நினைச்சி எல்லாரும் கண்ணை மூடிக்கப் போறாங்க.''

''ஒரு சிங்கிள் சான்சையும் வேஸ்ட்



பண்றதில்லையா?''

''பாருங்க, உங்களுக்கு பர்த்டே பிரசண்ட் கொண்டு வந்துட்டுக் கொடுக்காம பேசிக்கிட்டிருக்கேன்'' என்று ஒரு சிறிய பார்சலை எடுத்து அவளிடம் கொடுத்தான். ''பத்து நாள் லேட்.''

வாங்கிய அவள் அந்த பூக்காகித பார்சலின் மேல் கட்டியிருக்கும் சின்ன ரிப்பனைப் பிரிக்கத் துவங்க...

''நோ, நோ! இங்கே பிரிக்கக் கூடாது. வீட்டுக்குப் போய் நீங்க தனியா இருக்கிறப்பதான் பிரிச்சிப் பார்க்கணும்.''

''ஓக்கே'' என்று தன் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள்.

வெய்ட்டர் வந்து நிற்க...

''யுவர் சாய்ஸ்'' என்று பாலீஷ் போட்ட நெய்ல் தாங்கிய ஆட்காட்டி விரலை அவன் பக்கம் காட்டினாள்.

''வாட் ஈஸ் யுவர் ஃபாதர் மிஸ் அப்ஸரா?''

''இண்டஸ்ட்ரியலிஸ்ட் யோகேஷ் வர்மா.''

''வாங்கிடுவீர் பிரைட்லைட் பேட்டரிகளா?''

''அதே கம்பெனிதான். மதர் இல்லை. வீட்ல நானும் டாடியும் மட்டும்தான். நீங்க எங்கே இருக்கீங்க?''

''அஷோக் நகர்ல. வீட்ல நானும் மிஸ்டர் சுரேந்தரும் மட்டும்தான்.''

''ஏய்! நீங்க மட்டும் தனியாவா இருக்கீங்க?''

"யெஸ். டாடி சிங்கப்பூர்ல இருக்கார்."

"அதென்னமோ ரொம்ப நாள் பழகிட்ட மாதிரி இல்லே?" என்றாள்.

"நான் நினைச்சேன். நீங்க சொல்லிட்டிங்க."

"சுரேந்தர், எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. இந்த லைக்கிங்கை எப்படி வகைப்படுத்தறதுன்னு எனக்குப் புரியலை. ஐ ஹேவ் மெனி ஃப்ரெண்ட்ஸ். பாய்ஸ்கூட நிறைய பழகியிருக்கேன். எத்தனையோ தடவை இதே ஹோட்டல்ல சேர்ந்து டிபன் சாப்பிட்டிருக்கோம். இப்ப, இந்த செகண்ட்ல நான் அனுபவிச்சிக் கிட்டிருக்கிற ஒரு... வாட் யு கால், ஒரு வித சிலிர்ப்பு இதுவரைக்கும் ஏற்பட்டதில்லை."

"அப்படியா? ஏன் அப்படி?"

"எனக்குத் தெரியலை."

-புறப்பட்டபோது, "மறுபடி எப்போ மீட் பண்ணலாம்?" என்றாள் அப்ஸரா.

"அந்த பார்சலை நீ பிரிச்சிப் பாரு. அதுக்கப்புறம் உனக்கு என்னை மீட் பண்ணணும்னு தோணினா போன் செய்." என்றான் சுரேந்தர்.

"ஓக்கே" தன் காரை ஸ்டார்ட் செய்தாள்.

வீட்டிற்கு வந்ததும் அவசரமாகத் தன் அறைக்கு வந்து கதவை சாத்திக் கொண்டு கட்டிலில் அமர்ந்து அந்தப் பார்சலைப் பிரித்தாள்.

பிரிக்கப் பிரிக்க வெறும் காகிதக் குப்பையாக வந்தது.



கடைசியில் சுரேந்தரின் சிறிய வண்ணப் புகைப்படம் மட்டும் இருந்தது. அதன் பின்புறம் 'I Love You Apsara' என்று எழுதியிருந்தது.

உடனே போன் செய்தாள்.

"ஹலோ சுரேந்தர், எங்கே? எப்போ?"

"மீட் பண்றதுன்னு முடிவு பண்ணியாச்சா? பார்சலைப் பிரிச்சியா?"

"யெஸ். மீட் பண்ணியே ஆகணும். மீட் பண்ணாம எப்படி லவ் பண்றதாம்?" என்ற அப்ஸரா அவன் எதிர்பார்க்காமல் சட்டென்று ரிசீவரில் இச் என்று முத்தம் சொல்லி வைத்தான். இரண்டு கைகளையும் உயர்த்தி, 'வுய்யா!' என்றாள் சத்தமாக.




<u>இ.சு.து.மு.ந.சம்பவம் - 3</u>

நீதிபதி அவர்கள் தன் தீர்ப்பின் இறுதிப் பகுதியில்...

"ஆகவே குற்றம் சாட்டப்பட்டுள்ள முத்தையா தன் முதலாளியம்மா ராஜியை தனிமையில் இருந்த சந்தர்ப்பத்தில் பலவந்தப்படுத்தியுள்ளார் என்பதையும், அந்தப் போராட்டத்தின் இறுதியில்

முத்தையா ராஜியை கொலை செய்து விட்டதோடு, கொலையை மறைக்கும் நோக்கத்தில் காரில் பிணத்துடனும் புதைப்பதற்கான ஆயுதங்களுடனும் புறப்பட்டுச் சென்றான் என்பதையும் போலீஸ் தரப்பில் சந்தேகமில்லாமல் நிரூபித்துள்ளார்கள்.

இந்தக் கொலையை ராஜியின் கணவன் யோகேஷ் வர்மா செய்துவிட்டுப் பழியைத் தன் மேல் சாமர்த்தியமாக சுமத்தி விட்டதாகக் கூறும் முத்தையாவின் வாதத்தை ஏற்பதற்கில்லை.

குற்றம் நிகழ்ந்த சமயம் வர்மா வீட்டில் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது. குடும்ப டாக்டர் போன் செய்து பேசியபோது இதே முத்தையாவே வர்மா வீட்டில் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்.

எனவே முத்தையா குற்றவாளி என்று தீர்ப்பளிக்கிறேன். முத்தையா தன் ஆயுட் காலம் முழுவதையும் சிறையில் கழிக்க வேண்டும் என்று இந்தியன் பீனல் கோட்...''

கண்கள் சிவந்து, கை கட்டி நின்ற முத்தையா திரும்பி பார்வையாளர்கள் பகுதியில் அமர்ந்திருந்த வர்மாவைப் பார்த்தான். அந்தப் பார்வையில் அனல் மின்சார நிலையமே இருந்தது.






சுரேந்தரின் பங்களாவைப் பார்த்து பிரமிக்கக் கூடாத அப்ஸராவே பிரமித்தாள். கிட்டத்தட்ட மைசூர் பேலஸில் பாதி இருந்தது. பதினைந்து பேர்களுக்கு மேல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். மூன்று கார்கள் போர்டிகோவில் தவமிருந்தன. தரை, சுவர் எங்கும் மார்பிள். அந்த ஹால் -நாற்காலிகள் போட்டால் அசெம்ப்ளி ஹால். சுரேந்தரின் அறை மட்டும் அரை கிரவுண்ட் இருந்தது.

''வெல்கம், என்ன சாப்பிடறே?'' என்றான் சுரேந்தர். இடுப்பில் பேண்ட் மட்டும் அணிந்து, ''எக்சர்சைஸ் பண்ணிட்டிருந்தேன். உட்காரு'' டவலால் தன் மார்பு, புஜங்களைத் துடைத்துக் கொண்டான்.

''உங்க பங்களா ரொம்ப ப்யூட்டிஃபுல்லா இருக்கு'' என்றாள்.

''இன்னையிலேர்ந்து அதுக்கு தலைக்கனம் குறைஞ்சிடும் அப்ஸரா''

''வாட்?''

''தன்னைவிட அழகா ஒரு பொண்ணை

இந்த பங்களா இன்னிக்குத்தானே பார்க்குது. அதனால சொன்னேன்.''

''இந்த கப்ஸா வேண்டாம். என் கண்ணைப் பார்த்து சொல்லணும். உங்க மனசைத் தொட்டுச் சொல்லணும். நான் அழகா?''

''அழகை அளந்து நிர்ணயிக்கிறதுக்குன்னு ஒரு ஸ்கேல் இருக்கா அப்ஸரா? நோ. பார்க்கிறவங்க மனசுதான் ஸ்கேல். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான ஸ்கேல்.''

எழுந்து வந்து இரண்டு கைகளையும் அவன் தோள்களில் போட்டுக் கொண்டாள்.

''உங்க ஸ்கேல் என்ன சொல்லுதுங்கறதுதான் கேள்வி.''



''உண்மையை ராவா சொல்லவா? அலங்கரிச்சி சொல்லவா?''

''நிர்வாணமா சொல்லுங்க''

''என்னது?''

''அலங்கரிக்காமன்னு சொன்னேன்''

''அப்ஸரா, பிரிச்சிப் பிரிச்சி சொல்றேன். உனக்கு வரமா கிடைச்சிருக்கு அப்படி ஒரு உடம்பு. உன்னைத் தொடாமயே நான் தூண்டப்படறேன். ஆனா முகம், மேக்கப் எல்லாத்தையும் கழுவிக்கிட்டு வந்துட்டா கொஞ்சம் முன்னாடி பார்த்துப் பேசினது இந்தப் பொண்ணு கிட்டத்தானான்னு சந்தேகம் வந்துடும். நேச்சுரல் அழகு முகத்தில கொஞ்சம் குறைச்சல்தான். ஆனா அதை ஈடு செய்றது உன்னோட மனசோட அழகு! யெஸ்! மெண்ட்டல் பியூட்டி ஈஸ் மோர் இம்பார்ட்டன்ட். அது உனக்கு நிறையவே இருக்கு.''

''எனக்கு உடனே ஸ்வெட்டர் வேணும். கிடைக்குமா?''

''ஏன்?''

''இத்தனை பார் ஐஸ் வைச்சா குளிராதா?''

''இப்ப உனக்குக் குளிருது. அவ்வளவு தானே? அதுக்கு ஸ்வெட்டர் எதுக்கு? வேற வேலை வெட்டி இல்லாம எதுக்காக நான் லவ் பண்ணிக்கிட்டிருக்கேன்?''

சுரேந்தர் தாபத்துடன் அவளை அணைத்துக் கொள்ள, அவள் விலகவில்லை. சிணுங்கவில்லை. ஈடுபாட்டுடன் அவளும் அவன் முதுகில் தன் விரல்களை மேய விட்டாள்.



அவளின் கூந்தல் அலைகளை ஒதுக்கி காது மடலுக்குப் பின்னால் கழுத்தில் மென்மையாக முத்தமிட்டான். காதின் மடலை உதடுகளால் கவ்வி விடுவித்தான்.

நகர்ந்து அவள் கன்னத்தோடு கன்னத்தை மெத்தென்று உரசி, துடிக்கின்ற அவளின் உதடுகளை முதலில் தன் ஒற்றை விரலால், பின் தன் உதடுகளால் நிரடினான். அப்ஸராவின் இமைகள் குனிந்து நிமிர, கருவிழி மேலே சென்று செருகிக் கொண்டு விட்டு பிறகு மீண்டது.




### இ.சு.து.மு.ந.சம்பவம் - 4

ருத்ரமூர்த்தி நூறு சதவீத பாலியெஸ்டர் வேஷ்டி கட்டியிருந்தார். வெள்ளை முழுக்கை சட்டை. கோல்டு பிரேமில் கண்ணாடி. தன் நாற்காலிக்கு பின்புறச் சுவர் முழுக்க தனது தொழிற்சாலைக்கு பல்வேறு அமைப்புகள் வழங்கிய விருதுகளை எல்லாம் ஷோ கேஸ் அமைத்து அழகாக அடுக்கி வைத்திருந்தார்.



கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார் மோகனரங்கம். காக்கி பேண்ட், காக்கி சட்டை போட்டிருந்தார். தலையின் இரண்டு சைடுகளில் மட்டும் இரண்டு பட்டைகளைத் தீற்றியதைப் போல நரைத்திருந்தது.

''வாங்க மோகனரங்கம், உக்காருங்க.''

''பரவால்லை, நிக்கிறேன். நின்னு பழகினவன்தான்'' என்றார் மோகனரங்கம் விறைப்பாக.

''தரையில நிக்கிறதா சாமர்த்தியம்? வாழ்க்கையில நிக்க வேணாமா?''

''என்னை எதுக்காக வரச் சொன்னீங்க? நேரடியா அந்த விஷயத்துக்கு வந்துட்டா தேவலாம்.''

''யூனியன் லீடர் நீங்க. அதனால உங்களை வரச் சொன்னேன்.''

''அது புரியுது. எதுக்குன்னு கேட்டேன்.''

''பதினைஞ்சி நாளா தொழிற்சாலை மூடிக் கிடக்கறதால தொழிலாளர்கள் படற கஷ்டத்தோட கணக்கு உங்களுக்குத் தெரியுமா?''

''விதண்டாவாதம் வேணாம். உங்க கோரிக்கைகளை பரிசீலிக்கிறேன்னு சொல்லியாச்சு. அப்புறம் எதுக்கு ஸ்ட்ரைக்?''

''பரிசீலிக்கிறேன்னு சொல்றது ஒரு நழுவலான வார்த்தை. உங்க கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக் கொண்டதுன்னு எழுதி கையெழுத்து போட்டுக் கொடுங்க. அடுத்த நிமிஷமே நாங்க எல்லோரும் உள்ளே வர்றோம்.''



''உங்க கோரிக்கைகளை ஏத்துக்கிட்டா நிர்வாகத்துக்கு நஷ்டம் வரும்.''

''அது நீங்களா காமிக்கிற பொய்க் கணக்கு. கம்பெனி நல்ல லாபத்திலதான் ஓடிக்கிட்டிருக்கு.''

''இப்ப கடைசியா என்ன சொல்றீங்க?''

''நிர்வாகம் எங்க கோரிக்கைகளை ஏத்துக்கிட்டாகணும்.''

''இல்லைன்னா?''

''எங்க ஸ்ட்ரைக் தொடரும்.''

''எத்தனை நாளைக்கு வேலைக்கு

வராம, சம்பளம் இல்லாம ஸ்ட்ரைக் பண்ணுவிங்க?''

''அடுத்தடுத்து எங்க போராட்டம் தீவிரமடையும்.''

''தீவிரமடைஞ்சி என்ன செய்றதா உத்தேசம்?''

''அதை இப்ப சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''மோகனரங்கம், யூனியன்ல நீங்கதான் ஸ்ட்ராங்கான ஆள். நீங்க சொல்லித்தான் எல்லாருக்கும் தைரியம் வந்து போராட்டத்தில ஈடுபட்டிருக்காங்க. நீங்க சொல்ற வார்த்தைக்கு அவங்க கட்டுப்படறாங்க.''

''நான் சொல்றது நியாயமா இருக்கறதால கட்டுப்படறாங்க.''

''புரியுது. உங்க குடும்ப நிலைமையையும் நீங்க நினைச்சி பார்க்க வேணாமா? வேலை இல்லாம அவஸ்தைப் படற உங்க பையன் சிங்காரவேலுவுக்கு ஒரு வேலை வாங்கித்தர வேண்டியது என் பொறுப்பு. பணம் இல்லாததால உங்க வைஃபுக்கு செய்ய வேண்டிய இதய ஆபரேஷனை பண்ணாம இருக்கிங்களே, அந்த ஆபரேஷனுக்கு ஆகற செலவு மொத்தத்தையும் நான் ஏத்துக்கறேன். நீங்க ஏதாச்சும் சமாதானம் சொல்லி ஸ்ட்ரைக்கை வாபஸ் வாங்க வைச்சிட்டாப் போதும்.''

''என்னை விலைக்கு வாங்கறதுக்காக என் குடும்பத்தோட பலவீனங்களை எல்லாம் துப்பறிஞ்சிட்டு வந்திங்களா?''



''விலைக்கு வாங்கறதா? எதுக்கு பெரிய வார்த்தை எல்லாம்? இது மனுஷனுக்கு மனுஷன் செய்ற ஒரு உபகாரம். நான் ஒரு உதவி செய்றேன். நீங்க ஒரு உதவி செய்ங்கன்னு கேக்கறேன்.''

''மன்னிச்சிடுங்க. உங்க உதவியை எதிர்பார்த்து என் உரிமையை அடகு வைக்க முடியாது.''

''அவசரமில்லை. நல்லா யோசிச்சி முடிவு சொல்லுங்க.''

''கோரிக்கைகளை ஏத்துக்கறதைப் பத்தி இப்ப யோசிக்க வேண்டியது நீங்கதான்.''

''இதைத் தவிர பேங்க்ல உங்க பேர்ல ஒரு லட்சம் ரூபா டெபாசிட் போடறேன் மோகனரங்கம். இன்னும் ரெண்டு மூணு வருஷத்தில் ரிட்டையர் ஆகப் போறிங்க. அதுக்கப்புறம் உதவும்.''

''திரும்பத் திரும்ப நீங்க இதையேதான் பேசப் போறிங்கன்னா... நான் புறப்படறேன்'' என்று மோகனரங்கம் நகர்ந்தார்.

''நில்லுங்க. என் பேர் என்ன தெரியுமா? ருத்ராமூர்த்தி. நல்லதனமா நான் சொல்லிப் பார்த்துட்டேன். பிடிவாதமாக பிடி கொடுக்காம பேசறிங்க. என்னோட கோபத்தை தாங்கிக்க உங்களாலே முடியாது. ஞாபகம் வச்சிக்கங்க.''

''முடியற வரைக்கும் கெஞ்சிப் பார்த்திங்க. எடுபடலைங்கிறப்ப மிஞ்சிப் பார்க்கறிங்களா? இந்த உருட்டல், மிரட்டல் வேலை எல்லாம் என்கிட்ட நடக்காது. வர்றேன்.''

மோகனரங்கம் வெளியே செல்ல, சற்று நேரத்தில் அவரின் உறவுப் பையன் சந்தோஷ் உள்ளே வந்தான்.

''என்ன மாமா, வீடர் என்ன சொல்றாரு?''

''கிழவன் ஒத்து வரலை. எதுக்கும் இடம் கொடுக்கலை. நான் எதிர்பார்த்ததுதான். நீ நம்ம ரத்தினத்தை உடனே வரச் சொல்லு. எந்த ரத்தினத்தை?''

''தெரியும் மாமா'' என்றான் சந்தோஷ்.






வர்மா, கேம்ஸ் அறையில் தனியாக பில்லியர்ட்ஸ் விளையாடிக் கொண்டிருந்தார். ஸ்டிக்கை கவட்டி ஸ்டிக்கில் வைத்து குனிந்து ஒரு பந்தைக் குறி பார்த்துக் கொண்டிருக்க...

''டாடி...'' என்று உற்சாகமாக வந்து அவர் முதுகில் தொற்றிக் கொண்டாள் அப்ஸரா.

''இரும்மா. இந்த பாலை மட்டும் பாக்கெட் பண்ணிட்டு வந்துடறேன்.''

''நோ'' என்று போர்டில் இருந்த பால்களைக் கலைத்தாள். ''எவ்வளவு ஒரு முக்கியமான கெஸ்ட்டை நான் வீட்டுக்கு



அழைச்சிக்கிட்டு வந்திருக்கேன் தெரியுமா?''

''யாரும்மா?''

''உங்க சன்-இன்-லா''

நெற்றியைச் சுருக்கி அவளைப் பார்த்தார்.

''என்ன டாடி, புரியலையா? என் லவர் - என் வுட்பீ - சுரேந்தர் வந்திருக்கார். கமான் டாடி'' அவர் கையைப் பிடித்து இழுத்தாள்.

''சுரேந்தர் உன் ஃப்ரெண்டுன்னு சொன்னே...''

''நோ, நாங்க டிசைட் பண்ணிருக்கோம் -மேரேஜ் பண்ணிக்கிறதுன்னு.''

''கங்கிராஜுலேஷன்ஸ் மை ஸ்வீட்டி'' குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டார் வர்மா.



இருவரும் அந்த அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

ஹாலில் அமர்ந்து புத்தகம் புரட்டிக் கொண்டிருந்த சுரேந்தர் எழுந்து கொண்டு, ''ஹாய் அங்கிள்!'' என்றான்.

புன்னகைத்த வர்மா தனது பைப்பைப் பற்ற வைத்துக் கொண்டு, ''உட்காரு. நிறைய சொல்லிட்டா உன்னைப் பத்தி.''

சுரேந்தர் அமர்ந்து கால் மேல் கால் இயல்பாக அணிந்து கொண்டான். அப்ஸரா தன் அப்பாவின் அருகில் உரசி அமர்ந்தாள்.

''அங்கிள், நான் அப்ஸராவை லவ் பண்றேன்.''

''ஐ சீ''

''அவளும் என்னை டிட்டோ?''

''ஓக்கே. தென்...''

''எங்களுக்கு ரசனைகள் காமனா இருக்கு. ஐடியாஸ் காமனா இருக்கு. கல்யாணம் பண்ணிக்கலாமான்னு யோசிச் சோம். ரெண்டு பேரோட பதிலும் யெஸ்.''

''இப்போ என் யெஸ் வேணுமா?''

''அஃப்கோர்ஸ், உங்க பிராட் மெண்ட் டாலிட்டி பத்தி அப்ஸரா சொல்லிருக்கா.''

''அப்ஸராவோட செலக்ஷன் என்னைக் குமே நம்பர் ஒன்னாதான் இருக்கும். ஐ'ம் வெரி ப்ரவுட். உங்க டாடிக்குத் தெரிவிச்சாச்சா?''

''இன்னும் இல்லை. அவர் கொஞ்சம் கன்சர்வேடிவ் டைப். ஜஸ்ட் லைக் தட் உங்க கிட்ட ஓபன் பண்ற மாதிரி விஷயத்தை ஓபன் பண்ண முடியாது. நேர்ல பேசணும்.''

''எப்போ?''

''ரெண்டு வாரம் கழிச்சி நான் சிங்கப்பூ போறேன். அப்போ...''

''சம்மதிச்சிடுவாரில்ல?''

''ஷ்யூர். கொஞ்சம் போராடி கன்வின் செய்ய வேண்டி வரும்னு நினைக்கறேன் எனிவே, அப்ஸரா இல்லாம சிங்கி செகண்ட் என்னால ப்ரீத் பண்ண முடியாதுன்னு நினைக்கிறேன்.''

''வழக்கமான வசனம். என்ன இங்கிலீஷ்ல சொல்ற!''

மூவரும் சிரித்தார்கள்.



எழுந்து கொண்டார் வர்மா.

''உங்களுக்குத் தொந்தரவா நான் இருக்க விரும்பலை.''

அவர் சென்றதும் சிரித்தாள் அப்ஸரா. ''நான் சொன்னேன்ல- இன் நோ செகண்ட் அப்பாகிட்ட பர்மிஷன் வாங்கிடலாம்னு...'' என்றாள்.

''வெளில போலாமா?''

சுரேந்தர் தன் காரை ஓட்ட, அருகில் அவன் மேல் சாய்ந்து கொண்டு அமர்ந்தாள் அப்ஸரா.

''இப்ப எங்கே போறோம் சுரேந்?''

''எங்க வீட்டுக்கு''

''உங்க வீட்ல என்ன இருக்கு?''

''பத்தடிக்கு பத்தடி வாட்டர் நிரப்பின படுக்கை இருக்கு.''

''ஏய்! ச்சீ!''

''பின்னே, கல்யாணத்துக்கப்புறம் ரியல் மேட்ச் இருக்கு. அதுக்கு சரியான நெட் பிராக்டிஸ் வேணாமா?''

''போதும், போதும். எப்பவும் உங்களுக்கு அதேதான் சிந்தனை.''

''சிந்திக்க வைக்கிறது நீ. உன் அழகு.''

''ஃபுல்ஸ்டாப்! நீங்க புகழ்ந்து புகழ்ந்து நான் இளைச்சிட்டேன் சுரேந்தர். இந்த நிமிஷம் நான் செத்துப் போகத் தயார்- பிகாஸ் நான் அவ்வளவு சந்தோஷமா இருக்கேன்'' என்று அவனை முத்தமிட்டாள் அப்ஸரா.




## இ.சு.து.மு.ந.சம்பவம் - 5

டாக்ஸி பிடித்து பதறிக் கொண்டு சேலத்திலிருந்து வந்த சிங்காரவேலு, டாக்ஸி சரியாக நிற்பதற்கு முன்பாகவே அவசரமாக இறங்கி தன் வீட்டிற்குள் ஓடினான்.



கூடத்தில் அப்பா, அம்மா இரண்டு பேரையும் அருகருகில் கிடத்தி, தலைமாட்டில் விளக்கு வைத்திருந்தார்கள். மூக்குத் துவாரங்களில் பஞ்சடைத்து, கால் கட்டை விரல்களை ஒன்று சேர்த்துக் கட்டி உடம்பில் நிறைய மாலைகள் போடப்பட்டு... பெண்கள் அழுது கொண்டிருந்தார்கள். சக தொழிலாளர்கள் நிறைய பேர் துக்கமாக நின்று கொண்டிருந்தார்கள்.

பயணம் முழுக்க அழுது தீர்த்த சிங்காரவேலுவிற்கு தன் பெற்றோரைப் பிணமாகப் பார்த்தபோது அழுகை வரவில்லை. அப்படியே உறைந்து போய் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் தோளைத் தொட்டான் ச

தொழிலாளி மாதவன்.

''அழுதுடு. மனசில வைக்காதே. வாய்விட்டு அழுதுடு. நீ கல்யாணத்துக்குப் போய்ட்டு வர்றதுக்குள்ளே இங்கே என்னென்னவோ நடந்து போச்சி! முதல்ல கடைசிக் காரியங்களைச் செஞ்சி முடிச்சிடு. அப்புறம் எப்படி, என்னன்னு விரிவாய் பேசிக்கலாம்.''

ஊர்வலமாகக் கொண்டு சென்று எரித்தார்கள்.

''அப்போ, அப்பாவை நிச்சயமா ருத்ரமூர்த்திதான் ஆள் வச்சி கொலை செய்திருக்கணும்னு சொல்றிங்களா?'' என்றான் சிங்காரவேலு கழுத்தின் நரம்புகள் புடைக்க.



''வேற பகை எதுவும் உங்கப்பாவுக்குக் கிடையாதேப்பா. சரியா சொல்லணும்னா, உங்கப்பா கத்தியால குத்தப்பட்டு ரத்த வெள்ளத்தில கெடக்காருன்னு தெரிஞ்சதுமே மார் வலி வந்து உங்கம்மா செத்துப் போனாங்களே, அதுகூட ஒரு மறைமுகமான கொலைதான்'' என்றான் மாதவன்.

''எங்கப்பாவை ருத்ரமூர்த்தி எதுக்காக கொலை செய்யணும்?''

''உங்கப்பாதான் இந்த தொழிலாளர்கள் போராட்டத்துக்கு மூலகாரணம். தன் காரியத்தை தன் இஷ்டப்படி சாதிச்சிக்க நிர்வாகத்துக்கு இடைஞ்சலா இருந்தவர் மோகனரங்கம். கொலை நடந்ததுக்கு

முதல் நாள் ருத்ரமூர்த்தி உங்கப்பாவைக் கூப்பிட்டு போராட்டத்தை நிறுத்தச் சொன்னா லட்ச ரூபா பணம் தர்றேன், உனக்கு வேலை வாங்கித் தர்றேன், உங்கம்மா ஆபரேஷன் செலவு எல்லாத்தையும் ஏத்துக்கறேன்னு ஆசை காட்டியிருக்கான். இவர் என்னை விலைக்கு வாங்க முடியாதுன்னு ரோஷமாப் பேசிட்டு வந்துட்டார். இதெல்லாத்தையும் என்கிட்ட சொன்னாரு...''

''இதெல்லாம் நீங்க போலீஸ்ல சொன்னீங்களா?''

''சொல்லாம? ஆனா அந்த இன்ஸ்பெக்டர் நாங்க சொல்ற எதையும் காதில போட்டுக்கறதா இல்லை. உங்கப்பா தனியா வந்தப்ப எவனோ ஒருத்தன் குடிச்சிட்டு வந்து குடிபோதையில தகராறு செஞ்சிட்டு கத்தி செருகிட்டுப் போயிட்டான். அவனை நாங்க தேடிக்கிட்டிருக்கோம்னு சொல்றார். முழுக்க கட்டுக்கதை. ருத்ரமூர்த்தி பணத்தால அடிச்சி, இந்த கேஸ் தன் பக்கம் திரும்பிடாம பாதுகாப்பு செஞ்சிட்டார்.''

''என்னங்க இது? அப்போ நாட்ல நீதி, நியாயம் எதுவுமே இல்லையா?''

''ஏழைங்களைப் பொறுத்தவரைக்கும் இல்லை.''

''சட்டப்படி ருத்ரமூர்த்தி மேல எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதா?''

''ம்கூம். ருத்ரமூர்த்தி உங்கப்பாகூட பேசினதுக்கு ஆதாரம் என்ன இருக்கு?



போலீசே அவர் பக்கம் இருக்கிறப்ப, இந்த கேசை தள்ளிப் போட்டுக்கிட்டே போய் மறக்கடிச்சிடுவாங்க தம்பி. அவரை ஒண்ணும் செய்ய முடியாது தம்பி.''

''ஏன் செய்ய முடியாது?'' என்று கண்கள் துடிக்கக் கேட்டான் சிங்காரவேலு.

ஒலித்த போனை எடுத்தார் இன்ஸ்பெக்டர்.

''ஹலோ, நான் ருத்ரமூர்த்தி பேசறேன்.''

''வணக்கம் சார்'' குரலில் பவ்யம் வந்தது.

''நம்ம யூனியன் லீடர் மோகனரங்கத்தோட பிள்ளை சிங்காரவேலுன்னு...''

''தெரியும். சொல்லுங்க...''

''மோகனரங்கத்தை நான்தான் ஏதோ ஆள் வச்சி கொலை செஞ்சிட்டதாகவும், அதனால என்னை விசாரிக்கச் சொல்லி சி.பி.ஐ.க்கு விண்ணப்பிக்கப் போறதா காதுக்கு சேதி வந்துச்சி. அவன் அப்படி எழுதினா நமக்கு எதுவும் பிரச்சினையாகுமான்னு தெரிஞ்சுக்கலாம்னு தான்...''

''சி.பி.ஐ. நம்ம மாதிரி தோதுபாது பார்க்கறதில்லை சார். நோண்டு நோண்டுன்னு நோண்டிடுவாங்க சார். கொஞ்சம் பிராப்ளம்தான்.''

''என்ன செய்யலாம்?''

''பையன் ரோஷத்தில துள்றான். கொஞ்சம் படிச்சவன். அதனால துள்ளல் அதிகமா இருக்கு. கொஞ்ச நாள் பையனை உள்ளாற வச்சி அந்தத் துள்ளலை எல்லாம்

அடக்கிட்டா சரியாப் போய்டும். நான் பார்த்துக்கறேன்.''

''நல்லது. டி.வி. நல்லா வேலை செய்யுதா? டெக் கூட உங்களுக்காக ஃபாரின் அயிட்டம் ஒண்ணு சொல்லி வெச்சிருக்கேன். வந்ததும் அனுப்பி வெக்கிறேன்.''

''தேங்க்யூ சார்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

நீதிபதி தீர்ப்பு வாசிக்கும் முன்பாக குற்றவாளிக் கூண்டில் நின்ற சிங்கார வேலுவை ஒருமுறை பார்த்துக் கொண்டார்.

''வேலை கிடைக்காத விரக்தியிலும், பெற்றோர்களின் சாவு தந்த துக்கத்திலும் மனம் நொந்து போன சிங்காரவேலு நகைக் கடையில் பூட்டை உடைத்துத் திறந்து எழுபது பவுன் நகைகளை கொள்ளைய டித்துச் சென்றதை போலீஸ் தரப்பு தெளிவாக நிரூபித்துள்ளதால்- குற்றவாளி சிங்காரவேலுவுக்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கிறேன்.''




யோகேஷ் வர்மா ஒரு பார்ட்டிக்குப் புறப்படும் ஏற்பாடுகளில் இருந்தார்.



செண்ட் எடுத்து உடையின் மீது அடித்துக் கொண்டு வார்ட்ரோப் திறந்து கைக் குட்டை தேடின போது டெலிபோன் அழைத்தது.

''ஹலோ, வர்மா ஹியர்.''

''குட் ஈவினிங் அங்க்கிள். சுரேந்தர் பேசறேன்.''

''ஹாய் யங்மேன்! குட் ஈவினிங்.''

''தாஜ் ஹோட்டல் ரிஸப்ஷன்லேர்ந்து பேசறேன் அங்க்கிள். அஞ்சரை மணிக்கு இங்கே நான் அப்ஸராவை மீட் பண்றதாப் பேச்சு. பங்ச்சுவலா வந்து வெய்ட் பண்ணிக்கிட்டிருக்கேன். மணி ஏழாகப் போகுது. இன்னும் அப்ஸரா வரலை. அதான் போன் செஞ்சேன். நீங்க எடுத்துட்டிங்க. அவளுக்கு உடம்புக்கு எதுவுமில்லையே?''

''நோ... நோ... அப்ஸரா ஈவினிங் அஞ்சு மணிக்கெல்லாம் காரை எடுத்துக்கிட்டுப் புறப்பட்டுட்டாளே சுரேந்தர்.''

''அப்படியா?''

''வேற யாரையாவது பார்த்துட்டு உன்னைப் பார்க்க வர்றாளோ என்னவோ?''

''சேச்சே! யூஷுவலா அவதான் முன்னாடி வந்து எனக்காக வெய்ட் பண்ணுவா. இவ்வளவு லேட் பண்ண மாட்டா. வேற எதாச்சும் டிலே ஏற்பட்டி ருக்கணும். ஓக்கே. நான் இன்னும் அஞ்சி நிமிஷம் வெய்ட் பண்ணிப் பார்த்துட்டு வீட்டுக்குப் போறேன். அப்ஸரா அங்கே வந்தா சொல்லிடுங்க.''

''சரி''

போனை வைத்து விட்டு ஷூ அணிந்து கொண்டார்.

காரில் ஏறச் செல்லும் போது மொபெட்டில் ஒரு இளைஞன் வந்து வண்டியை நிறுத்தி விட்டு ஒரு லெதர் பேகோடு வந்தான்.

''எக்ஸ்க்யூஸ் மி, மிஸ்டர் யோகேஷ் வர்மா?''

''நான்தான்.''

''நான் சிவா கூர்யர்ஸ்லேர்ந்து வர்றேன். உங்களுக்கு ஒரு பார்சல் இருக்கு. இதுல கையெழுத்துப் போடுங்க.''

வர்மா கையெழுத்து போட்டு விட்டு அந்தப் பார்ஸலை வாங்கிக் கொண்டார். பேனாவை அவனிடமே திருப்பிக் கொடுத்து விட்டு, காரில் ஏறிக் கொண்டு வீட்டு வேலைக்காரனிடம், ''அப்ஸரா வந்தா சுரேந்தர் தாஜ் ஹோட்டல்லேர்ந்து போன் செஞ்சாருன்னு சொல்லு. நீ போ'' என்றதும் டிரைவர் காரை ஸ்டார்ட் செய்து புறப்பட்டான்.

பின் சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டு வர்மா அந்த பார்சலின் கட்டுக்களை அவிழ்த்து, காகிதங்களைக் கழித்தார்.

உள்ளே ஒரு நீலநிறப் புடவை இருந்தது. கூடவே ஒரு சாவி வளையத்தில் மாருதி காரின் சாவி இருந்தது.

வேறு எதுவும் இல்லை.

சில வினாடிகள் கழித்துத்தான் அவருக்கு உறைத்தது.



இந்த நீல நிறப் புடவையைத்தானே அப்ஸரா மாலையில் கட்டிக் கொண்டு வெளியில் சென்றாள்? இது அவள் உபயோகத்திற்கு வாங்கித் தந்த மாருதி காரின் சாவி வளையமல்லவா?

என்ன அர்த்தம் இதற்கு? யார் அனுப்பியிருக்கிறார்கள்?

வர்மாவுக்கு வியர்த்தது. பரபரத்தது.

''டேய், காரை நம்ம வீட்டுக்குத் திருப்புடா'' என்றார்.

வீட்டிற்கு வந்ததும் பரபரப்பாக சுரேந்தரின் வீட்டுக்கு போன் செய்தார். ''சுரேந்தர், நான் வர்மா பேசறேன்'' என்றார் படபடப்பாக.

''சொல்லுங்க அங்க்கிள். இப்பதான் வீட்டுக்கு வந்தேன். அப்ஸரா வீட்டுக்கு வந்துட்டாளா?''

''சுரேந்தர், அவ ஏதோ ஒரு ட்ரபிள்ல சிக்கியிருக்கான்னு நினைக்கிறேன். எனக்கு பதட்டமா இருக்கு. கூரியர் சர்வீஸ்ல எனக்கு இப்ப ஒரு பார்சல் வந்திச்சி. நீ கொஞ்சம் உடனே இங்கே வாயேன். நேர்ல பேசலாம்.''

''இதோ வர்றேன்'' என்றான்.

இருபது நிமிடத்தில் அங்கே இருந்தான்.

புடவையையும் கார் சாவியையும் பார்த்து, ''வாட் நான்சென்ஸ்'' என்றான். ''கால் தி போலீஸ் அங்கிள். இதில யோசனை என்ன இருக்கு?''

''பொண்ணு விஷயம்ப்பா. யார் கஸ்டடில இருக்கான்னு புரியலை. ஆனா

நிச்சயமா யாரோ கடத்தியிருக்கான்னு புரியுது. அவன் எதுக்காகக் கடத்தினான்? எந்த விவரமும் இல்லை. ஒரு லெட்டரும் இதோட இல்லை.''

அந்த பார்சல் சுற்றின காகிதத்தையும், சிவா கூரியரின் டெலிவரி ஸ்லிப்பையும் எடுத்துப் பார்த்தான் சுரேந்தர். ''இதில அனுப்பினவங்க பேர் இல்லை. எதுக்கும் கேட்டுடலாம்'' என்று போனை எடுத்து அந்த சிவா கூரியர் சர்வீசை அழைத்தான்.

''ஹலோ, சிவா கூரியர்ஸ்.''

''சார், அடையாறுல மிஸ்டர் யோகேஷ் வர்மா வீட்லேர்ந்து பேசறோம். கொஞ்ச நேரத்துக்கு முன்னால உங்க பிராஞ்ச் லேர்ந்து ஒரு பார்சல் நேர்ல டெலிவரி செஞ்சிங்க. இன்னிக்கு ஈவினிங் 5.15க்கு உங்க கிட்ட பார்சல் ஒப்படைக்கப்பட்டதா குறிப்பிட்டிருக்கிங்க. ஆனா பார்சல்ல அனுப்பறவர் பேர், விலாசம் எதுவும் இல்லை.''

''ஆமாம், ஆமாம். சொல்லுங்க...''

''அந்தப் பார்சலை உங்ககிட்ட ஒப்படைச்சது யாருன்னு தெரியணும் சார்.''

''ஒருத்தர் வந்தார். பார்சல் கொடுத்தார், லோக்கல் டெலிவரின்னு சொன்னார். என் பேர், விலாசம் போட வேணாம், ஒரு சஸ்பென்சுக்காகன்னு சொன்னார். அதனால நாங்களும் வற்புறுத்தலை. எனி பிராப்ளம் சார்?''

''மேஜர் பிராப்ளம். மிஸ்டர் யோகேஷ் வர்மாவோட பொண்ணை யாரோ



கடத்தியிருக்காங்க. கடத்தினவன்தான் பார்சல் அனுப்பியிருக்கான். அவன் உங்க ரெகுலர் கஸ்டமரா?''

''இல்லை சார். இன்னிக்குத்தான் முதல் தடவையாய் பார்த்தேன்.''

''ஆள் எப்படி இருந்தான்?''

''உயரமா, சிவப்பா, கூலிங்கிளாஸ் போட்டுக்கிட்டு... அடர்த்தியான மீசை.''

''ரெடியா இருங்க. போலீஸ் என்கொயரி வரலாம்.''

போனை வைத்த சுரேந்தர், யோகேஷ் வர்மாவிடம் கேட்டான். ''சார், உங்களுக்கு போலீஸ்ல பெரிய ஆபீசர்ஸ் யாரையாவது தெரியுமா பர்சனலா?''

''நிறைய பேரைத் தெரியும். ஆனா...''

டெலிபோன் ஒலித்தது.

''நீங்களே எடுங்க சார்'' என்றான் சுரேந்தர்.

''வணக்கம் சார். நான் யாருன்னு கேக்காதிங்க. கூரியர் சர்வீஸ்ல ஒரு பார்சல் அனுப்பி வச்சிருந்தேனே. வந்திருக்கணுமே...'' என்றது எகத்தாளமான குரல்.

'வந்தது, வந்தது. அப்ஸரா எங்கே?''

''இருங்க சார். பதறாதிங்க. உங்க பொண்ணு பத்திரமா இருக்கா. மாருதி கார் பீச்ல காந்தி சிலை பக்கத்தில உள்ள பார்க்கிங் வரிசைல நிறுத்தி வெச்சிருக்கேன். சாவி அனுப்பிச்சிருந்தேனே, போய் எடுத்துக்கலாம். எனக்குத் தேவை உங்க அப்ஸராதான். காரில்லை...''

''மைகாட்! என்ன வேணும் உனக்கு? பணமா?''

''இல்லை. சொல்றேன். ஒரு வேடிக்கை பார்த்திங்களா? எனக்கு உங்க கிட்டேர்ந்து ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கு. சாதாரணமா சொன்னா செய்விங்களா? மாட்டீங்க. அதனால என்ன செஞ்சேன் - அப்ஸராவை நீச்சல் உடையில வீடியோல பதிவு செஞ்சேன். அதை வெச்சி உங்களை மிரட்டலாம்னு நினைச்சேன். ஆனா பாருங்க, புதுசா ஒரு ஹீரோ அங்கே முளைச்சி என்னை உதைச்சி அந்த திட்டத்தை எல்லாம் தவிடுபொடியாக் கிட்டான். அப்புறம்தான் என்னோட முட்டாள்தனம் எனக்குப் புரிஞ்சுது. சைக்கிளை பார்ட் பார்ட்டா திருடறதை விட மொத்த சைக்கிளையே திருடறதுதான் சுலபம். இல்லையா? இப்ப பாருங்க- அப்ஸரா என் கஸ்டடில. அதுவும் எப்படி? வெறும் ஜாக்கெட், பெட்டிக்கோட்டோட.''

''ஸ்டாப் இட். உனக்கு என்ன வேணும்?''

''ஒரு சின்ன காரியம் பண்ணணும் வர்மா நீங்க. இங்கேர்ந்து கேரளாவுக்கு ஒரு முக்கியமான பொருளை பல்க்கா கடத்த வேண்டியிருக்கு. உங்களுக்கு போலீஸ்லே நிறைய பேரைத் தெரியும். நீங்க ஒரு வி.ஐ.பி. அதனால அதை நீங்க கார்ல வச்சி எங்களுக்காக கடத்தணும்.''

''நோ! இந்த மாதிரி வேலை எல்லாம் செய்ய என்னால முடியாது.''



''முடியாதில்ல? சரி!''

டக்கென்று எதிர்முனை துண்டிக்கப் பட்டது.

விபரங்களை அவர் சொன்னதும் கத்தினான் சுரேந்தர். ''என்ன அங்க்கிள் நீங்க? இந்த மாதிரி விவகாரங்கள்ல உணர்ச்சி வசப்படாமல் அமைதியா பேச வேணாமா? இப்படித்தான் வெட்டிப் பேசறதா? நம்ம பொண்ணு அவன் பொறுப்பில இருக்காங்கிறதையே மறந் துட்டீங்களே... அவளோட சேலையை உருவி அனுப்பிச்சிருக்கான். ராஸ்கல்! அன்னைக்கு ஏதோ ரசனைக்காகத்தான் அவன் வீடியோ எடுத்தான்னு நினைச்சேன். கடத்தல் கோஷ்டியா?''

''என்ன செய்யலாம் இப்போ?''

''போலீஸ் கிட்ட போய்டலாம் அங்க்கிள். அவன் முகம் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. கூரியர் சர்வீஸ்ல விசாரிப்பாங்க. நம்ம மாருதி கார்ல அவனோட கைரேகைகள் கிடைக்கலாம். அவன் ஒரு பழைய குற்றவாளியா இருந்தா போலீஸ் ரொம்ப சீக்கிரத்துல கண்டுபிடிச்சிடுவாங்க.''

''இருப்பா, இப்ப நீதான் பொறுமை யில்லாம பேசறே. முள்மேல விழுந்த சேலையை எடுக்கற மாதிரியான சூழ் நிலை இப்போ. அப்ஸரா அவன்கிட்ட இருக்கா. இப்ப நாம போலீஸ்கிட்ட போனா, அவன் ஆத்திரப்பட்டு அவளை விபரீதமா ஏதாச்சும் செஞ்சுட்டா?''

சுரேந்தரின் வேகம் சட்டென்று வடிந்தது.

"கிறுக்குப் பிடிச்சவனா இருப்பான் போல இருக்கு. குழம்பிக்கிட்டே இருக்க வேணாம். முதல்ல போய் நம்ம மாருதியை எடுத்துக்கிட்டு வந்துடலாம். அதில அவளைப் பத்தின தடயம் ஏதாவது மறதியா அவன் விட்டிருந்தா அது நம்ம அதிர்ஷ்டம்" என்றான் சுரேந்தர்.

ஆனால் காரை கடற்கரையில் இருந்து கொண்டு வந்து ஆராய்ந்த போது அப்படி எந்தத் தடயமும் இல்லை. மேற்கொண்டு செய்வதறியாமல் இரண்டு பேரும் குழம்பத் துவங்கினார்கள்.






இ.சு.து.மு.ந.சம்பவம் - 6

சென்னை. மத்திய சிறைச்சாலை.

மதிய உணவு நேரம். அந்த மரத்தடியில் முத்தையா தான் ஜெயிலுக்கு வந்த பின்னணியை சொல்லி முடிக்க...

எதிரே அமர்ந்திருந்த சிங்காரவேலுவுக்கு தன்னையறியாமல் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"அவ்வளவு விசுவாசமா நடந்துகிட்ட உங்க மேல மனசாட்சியே இல்லாம கொலைப்பழியைத் தூக்கிப் போட்டிருக்கானே அந்த வர்மா! என்ன ஒரு அயோக்கியத்தனம்."

"அதான்ப்பா உலகம். முதலாளியம்மாவை நான் அம்மா, அம்மான்னுதான் கூப்புடுவேன். அவங்க கையால சோறு தின்னவன். என்னைப் போயி அவங்களைக் கெடுக்க வந்து கொலை செஞ்சேன்னு கோர்ட்ல கூசாம சொன்னானே... அதான் எனக்குத் தாங்கலை. அப்பவே நான் செத்துட்டேன். இப்ப நடமாடிக்கிட்டிருக்கிறது என் உடம்புதான்."

"இதைவிட ஒரு பெரிய அவமானம் இல்லைங்க. என் விஷயத்திலயும் இதே மாதிரி பொய் கேஸ்தான் போட்டு உள்ளே தள்ளினாங்க. தொழிலதிபர் ருத்ரமூர்த்தி ஆள் வெச்சி தொழிற்சங்கத் தலைவரா இருந்த எங்கப்பாவை கொலை செஞ்சான். அந்த அதிர்ச்சியிலேயே அம்மா செத்துட்டாங்க. அந்தக் கொலையை போலீஸ்ல அமுக்கிட்டாங்க. நான் வெளில இருந்தா தொந்தரவுன்னு என்னை நகைக் கடையில கொள்ளையடிச்சதாக ஒரு கேஸ் ஜோடிச்சி உள்ளே மூணு வருஷத்துக்குத் தள்ளிட்டாங்க" என்றான் சிங்காரவேலு.



"நீ இங்க வந்து மூணு வருஷம் இருக்குமேப்பா"

"ஆச்சு. அடுத்த வாரம் நான் விடுதலையாகறேன்."

''ஊகை உணர்ச்சியை எல்லா மறந்துட்டுப் போய் ஏதாச்சும் நல் தொழில் செஞ்சி முன்னேறப் பாருப்பா.''

''அதான் இல்லைங்க. அதெப்படி மறக்க முடியும்? அந்த ருத்ரமூர்த்தியைப் பழி வாங்கணுங்கற ஒரே லட்சியம்தான் இதுவரைக்கும் எனக்கு இருந்திச்சி. இப்ப புதுசா இன்னொண்ணு சேர்ந்திருக்கு.''

''என்னப்பா அது?''

''நீங்க குற்றம் செய்யலைன்னு நிரூபிச்சி உங்களை விடுதலை செய்ய வைக்கிறது இப்ப எனக்கு புது லட்சியம்.''

முத்தையா சிரித்தார்.

''இது முடிஞ்சி போன விஷயம். எப்பவோ தீர்ப்பாய்ட்டது. நாலு வருஷ ஜெயில் தண்டனையை வேற அனுபவிச்சிட்டேன்.''

''அதனால என்ன? நீங்க கொலைகாரர் இல்லைன்னு நான் இந்த உலகத்துக்கு நிரூபிச்சிக் காட்றேன்.''

''அதெல்லாம் நடக்காத காரியம்ப்பா.''

''நடக்கும். என்ன பந்தயம்?''

''பந்தயம் கட்டறதுக்கு என்கிட்ட என்னப்பா இருக்கு?''

''சரி, இது பந்தயம்தான். நான் ஜெயிக்கப் போறேன்தான். உங்க விடுதலைதான் பந்தயத்துக்கான பரிசு. இதில எனக்கு தோல்விங்கற பேச்சுக்கே இடமில்லை'' என்றான் உணர்ச்சிப்பூர்வமாக சிங்காரவேலு.






மறுநாள் காலையில் மீண்டும் கூரியர் ர்வீஸ் மூலம் மற்றொரு பார்சல் ர்மாவிற்கு வந்தது. அப்போது சுரேந்தரும் அருகில்தான் இருந்தான்.

வர்மா பார்சலைப் பிரித்தார்.

உள்ளே அப்ஸரா நேற்றைய தினம் அணிந்து சென்றிருந்த நீலநிற ஜாக்கெட் டும், பெட்டிகோட்டும் இருந்தது. கூடவே ஒரு ஆடியோ கேஸட்டும் இருந்தது.

இருவரும் வர்மாவின் தனியறைக்கு வந்து அந்த கேஸட்டை டேப் ரெக்கார்டரில் போட்டு ஓட விட்டனர்.

''வர்மா'' என்று துவங்கியது நேற்று போனில் பேசிய குரல். ''நீங்க போன்ல அப்படி சூடாப் பேசலாமா? இந்த நிமிஷம் அப்ஸரா வெறும் பிராவும், ஜட்டியும் மட்டும்தான் போட்டுக்கிட்டு தூங்கறா. சாதாரண தூக்கம் இல்லை. போதை தூக்கம். அதாவது போதை ஊசி போட் ருக்கேன். தனக்கு என்ன நடக்குதுங்கறதே அவளுக்கு இப்ப தெரியாது.

உங்களுக்கு இது ஒரு ஃபைனல்

சான்ஸ். நான் சொல்றபடி கேட்க முடியுமா முடியாதா? முடியாதுன்னா நான் என்ன செய்யப் போறேன் தெரியுமா? அவ உடம்புல மிச்சம் இருக்குற துண்டு துணிங்களுக்கும் விடுதலை கொடுத்துட்டு வீடியோல ஷூட் பண்ணப் போறேன். அவளை மட்டும் தனியா இல்லை. கூடவே ஒரு திடகாத்திரமான ஆம்பளையையும் சேர்த்துதான். அமோகமான விலைக்கு விக்கப் போறேன்.

அவளை இப்படி பயன்படுத்தினதுக்கப்புறம் என் துப்பாக்கிலேர்ந்து ஒரே ஒரு புல்லட் செலவழிச்சி அவளை இந்த உலகத்திலேர்ந்து பிரிச்சிடுவேன். இதெல்லாம் நீங்க முடியாதுன்னு சொன்னாத்தான். யோசிங்க. நான் சொல்றபடி நடந்துக்க சம்மதிச்சா சேதம் எதுவும் இல்லாம அப்ஸராவை முழுசா திருப்பி ஒப்படைச்சிடறேன். இது நிச்சயம்.

இப்ப உங்க முடிவு எனக்குத் தெரியணும். நாளைக்கு காலையில தினத்தந்தி பேப்பர்ல வரி விளம்பரங்கள் பகுதியில 'சம்மதம்'னு ஒரே ஒரு வார்த்தை போட்டு வர்மான்னு ஒரு விளம்பரம் கொடுத்துருங்க. அப்புறம் மறுபடி உங்களை நான் கான்டாக்ட் பண்றேன்.

நாளைக்கு விளம்பரம் வரலைன்னா உங்களுக்கு உங்க பொண்ணு செத்துப் போக சம்மதம்னு நினைச்சி, நான் என் வேலையை ஆரம்பிச்சிடுவேன். சரியா?



இன்னொரு விஷயம்...

வழக்கமா எல்லாரும் சொல்றதுதான். போலீஸ் உதவியை நாடி என்னை கப்புன்னு பிடிச்சி உங்க பொண்ணை மீட்டுடலாம்னு மட்டும் கனவு எதுவும் வேணாம். அப்ஸரா செத்தாச்சுன்னு வெச்சிக்கங்க. ரைட்டா?''

வர்மா, சுரேந்தர் இரண்டு பேரின் முகங்களும் வெளுத்துப் போயின.

''ஸ்கவுண்ட்ரல்!'' என்று தன் உள்ளங்கையை குத்திக் கொண்டான் சுரேந்தர்.

''நம்ம பிடி அவன் கையில. இப்ப நாம் அவன் சொல்ற எதுக்கும் சம்மதிச்சுதான் ஆகணும் சுரேந்தர்'' என்றார் வர்மா.

''இப்ப என்ன செய்யலாம்?''

''அவன் சொன்னபடி பேப்பர்ல விளம்பரம் கொடுத்திடலாம்.''

சற்று நேரத்தில் அவர்கள் பத்திரிகையில் விளம்பரச் செய்தி எழுதிக் கொடுத்துவிட்டு பணம் கட்டிவிட்டு புறப்பட்டார்கள்.

''மறுபடி அவனா நாளைக்கு விளம்பரத்தைப் பார்த்துட்டு தொடர்பு கொள்ளும் வரைக்கும் நாம் காத்துட்டிருக்க வேண்டியதுதான்.'' என்றான் சுரேந்தர்.

வர்மாவை அவர் பங்களாவில் இறக்கிவிட்டுவிட்டு ஏதாவது தகவல் வந்தால் போன் செய்யும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டான் சுரேந்தர்.



# 15

தொழிலதிபர் ருத்ரமூர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார். மெல்லிய நீல விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மணி இரவு 12.45. டெலிபோன் அழைக்க, அதைப் புறக்கணித்தார்.

ஆனால் தொலைபேசியின் பிடிவாதம் வென்றது.

''ஹலோ, ருத்ரமூர்த்தி ஹியர்'' என்று கொட்டாவி விட்டார்.

''வணக்கம். இந்த நேரத்தில உங்களை தொந்தரவு பண்றதுக்கு தயவுசெஞ்சி மன்னிக்கணும். ஆனா உங்க நன்மைக்காகத்தான் போன் செஞ்சேன்.''

''யார் நீங்க?''

''என் பேரைச் சொன்னா நாளைக்கு போலீஸ் விசாரணை, அது, இதுன்னு பெரிய பிரச்சினைகள் வரலாம். அதனால என் பேர் வேணாம்.''

ருத்ரமூர்த்திக்குத் தூக்கம் கலைந்து விட்டது.

''போலீஸ் விசாரணையா? என்ன விஷயம்?''



''தொழில் முறையில உங்களுக்குப் போட்டியா உள்ள ஒரு எதிரி உங்களை கொலை செய்றதுக்குத் திட்டம் போட்டுருக்கார் சார்.''

''யாரு?''

''அது யாரு, அது எந்த வகையான திட்டம்னு போன்ல சொல்றது சரியாப்படலை எனக்கு. நேர்ல சந்திச்சிப் பேசலாம் சார்...''

''சரி, வீட்டுக்கு வாங்க.''

''என்னைக் கண்காணிக்கிறாங்க சார், நான் உங்க வீட்டுக்கு வந்தது தெரிஞ்சா நான் தொலைஞ்சேன். முதல் கொலை என்னதான் செய்வாங்க.''

''இப்ப என்ன செய்யணும்னு சொல்றே?''

''நீங்க நான் சொல்ற ஒரு பொதுவான இடத்துக்கு வர முடியுமா?''

''எப்போ?''

''இன்னும் அரை மணி நேரத்துல.''

''எங்கே வரணும்?''

''பெசண்ட் நகர் பீச்சுக்கு.''

''நீங்க அங்கே வெய்ட் பண்றீங்களா?''

''ஆமாம். நீங்க கார்ல வாங்க. தனியா வாங்க. உங்க காரை எனக்குத் தெரியும். உங்களையும் எனக்குத் தெரியும். நீங்க வந்ததும் நானே கார்ல வந்து ஏறிக்கறேன். காசோ, பணமோ எதிர்பார்த்து நான் போன் செய்யலை. மனிதாபிமானம்! என்னதான் பகையா இருந்தாலும் ஒரு உயிரை

மனகக்குப் பட்டுது. சதித் திட்டம் பூரா...
எனக்குத் தெரியும். அதனால மன...
பதைச்சி போன் செய்றேன்.''

''சரி, நீங்க சொல்றதெல்லா...
உண்மைன்னு நான் எப்படி நம்பறது?''

''அது உங்க இஷ்டம். ஆனா எனக்கு
எப்படி நிரூபிக்கிறதுன்னு தெரியலை
சொல்லிட்டேன். வர்றதும், வராததும் உங்க
இஷ்டம்.''

சற்று தயங்கி ருத்ரமூர்த்தி, ''சரி''
என்றார்.

ருத்ரமூர்த்தி எழுந்து லுங்கியை
உதறிவிட்டு வேஷ்டி கட்டிக் கொண்டார்.
உடையணிந்தார். கார் சாவியை எடுத்துக்
கொண்டு புறப்பட்டார்.



பெஸண்ட் நகர் கடற்கரையோர
சாலையில் தனது பியட் காரை
நிறுத்திவிட்டு காரை விட்டு இறங்காமல்
காத்திருந்தார். கடல் காற்று சில்லென்று
வீசிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் தூரத்தில்
நிழலுருவமாய் ஒருவன் தன் காரை நோக்கி
நடந்து வருவதைப் பார்த்தார் ருத்ரமூர்த்தி.

அவன் அருகில் வர, குறை
வெளிச்சத்தில் அவன் முகம் சரியாகக் கூட
தெரியவில்லை. பாதி முகத்தை மறைத்த
படி ஒரு தொப்பி அணிந்திருந்தான். தாடி
வைத்திருப்பது போல் தெரிந்தது.

காரின் அருகில் வந்து உரிமையாக முன்
கதவைத் திறந்து ஏறி அமர்ந்து
...ண்டான்.

''போன் செஞ்சது...''

''நான்தான்'' என்றான்.

''சொல்லு'' என்றார் அவன்
...ளாளுனாக இருந்ததால்.

''தொழிலதிபர் யூனியன் தலைவர்
...கனரங்கம் ஞாபகம் இருக்கா சார்?''
...று ஆரம்பித்தான்.

''யாரோ கொலை செஞ்சி செத்துப்
...னார். அதுக்கென்ன?''

''அவருக்கு ஒரு பையன் உண்டு.
...ரியுமா?''

''தெரியும்.''

''அவன் ஜெயிலை விட்டு ரிலீசாகி ஒரு
...சமாச்சி.''

''அடடே! அப்படியா?''



''ஆமாம். அந்த சிங்காரவேலுவை நீங்க
...ர்த்திருக்கிறீங்களா?''

''இல்லை. அவன் இப்ப எங்க
...ருக்கான்?''

''உங்க பக்கத்திலேயே உக்காந்து
...ம்மடிச்சிக்கிட்டிருக்கான்.''

கிரீச்சென்று பிரேக் அடித்து காரை
...ரமாக நிறுத்தினார் ருத்ரமூர்த்தி.
அவசரமாக தன் இடுப்பில் செருகிக்
கொண்டிருந்த ரிவால்வரைக் கையில்
...டுக்க...

அதற்கு ஒரு விநாடி அவன் முந்திக்
கொண்டு அவர் கழுத்தில் வெட்டினான்.
லொடக்கென்று சரிந்து ஸ்டியரிங் வீலின்

மேல் அவர் கவிழ... பிடிப்பின்றி அ
கையில் இருந்த ரிவால்வர் நழு
விழுந்தது.

அவரை இழுத்து நகர்த்தி
போட்டுவிட்டு டிரைவிங் சீட்டிற்கு மா
காரை ஓட்டத் துவங்கினான் சிங்காரவேலு.




மறுநாள் காலையில் தினத்தந்தி விளம்பரப் பகுதியில் 'சம்மதம் - வர்மா' என்று வரிவிளம்பரப் பகுதியில் வெளியாகியிருந்தது.

ருத்ரமூர்த்தியின் வீட்டில் இருக்கும் சந்தோஷ் பரபரப்பாக போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்.

''சார், என் மாமா ருத்ரமூர்த்தியை நேத்து ராத்திரியிலிருந்து காணலை. ஃப்ரண்ட்ஸ், ரிலேடிவ்ஸ் எல்லார் வீட்லயும் விசாரிச்சிட்டேன்.''

இன்ஸ்பெக்டர் தங்கராஜ் அவனை விசாரிக்கத் துவங்கினார்.

''யாராவது கடத்திட்டுப் போயிருந்தா பதட்டப்படறது நியாயம். அவரே காரை எடுத்துக்கிட்டு அவசர வேலைன்னு



சொல்லிட்டு போயிருக்காருன்னு
சொல்றிங்க. உங்ககிட்ட சொல்ல முடியாத
சனல் வேலையா இருக்கலாம்.
னிக்கு ஈவினிங் வரைக்கும்
க்கலாம். வந்துடுவார்.''

''சரி சார்'' என்று எழுந்து கொண்டான்.

''எதுக்கும் அவர் எடுத்துக்கிட்டு போன
ர் நம்பரை எழுதிக் கொடுத்துட்டுப்
போங்க. டிராஃபிக்ல சொல்லி
வச்சிடலாம். என்ன வண்டி?''

''பியட் கார்''

சந்தோஷ் காரின் எண்ணை எழுதிக்
கொடுத்தான். புறப்பட்டான்.

மதியம் ஒரு மணிக்கு சுரேந்தருக்கு ஃபோன் செய்தார் வர்மா.

''என்னப்பா, சொன்னபடி விளம்பரம் கொடுத்துட்டோம். இதுவரைக்கும் எந்தவிதமான தகவலும் அவன் கிட்டேர்ந்து இல்லையே?''

''அங்க்கிள், அவன் மனசில என்ன இருக்குன்னு நமக்கு என்ன தெரியும்? வெய்ட் பண்ணிதான் பார்க்கணும். போலீசுக்குப் போக முடியாது. நம்ம முயற்சிகளிலேயும் எதுவும் அவனைப் பத்தி தெரிஞ்சுக்க முடியலை.''

''சரி, வெய்ட் பண்ணலாம்.''

''என்ன தகவல் வந்தாலும் உடனே எனக்கு சொல்லுங்க அங்க்கிள்'' போனை வைத்த சுரேந்தர் படிகள் ஏறி மாடியறைக்கு வந்தான்.

அதன் கதவைத் தட்டினான் ஒரு சங்கேத முறையில்.

வினாடிகளில் கதவு திறக்கப்பட்டது.

புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள் அப்ஸரா.

உள்ளே வந்து கதவைச் சாத்தினான் சுரேந்தர். வீடியோ படம் ஒன்று டெலிவிஷனில் ஓடிக் கொண்டிருந்தது.

"சுரேந்தர், ரொம்ப போரடிக்குதுப்பா.." என்றாள் அப்ஸரா.

"எப்படி போரடிக்கும்? எவ்வளவு வீடியோ கேஸட்ஸ்! எவ்வளவு புக்ஸ்! அப்பப்ப நான் வந்து கம்பெனி கொடுக்கறேன். அப்புறம் என்ன அப்ஸரா?"



"என்ன இருந்தாலும் வெளில சுத்தற சுதந்திரமே தனிதான் இல்லை? ஜெயில் மாதிரி இருக்கு. வசதியான ஜெயில். வருஷக் கணக்கில எப்படித்தான் ஜெயில்ல இருக்காங்களோ... அப்பா எப்படி இருக்கார்?"

"கொஞ்சம் வொரீடாதான் இருக்கார் அப்ஸரா."

"போன் செஞ்சி பேசிடட்டுமா சுரேந்தர்?"

"என்னன்னு?"

"டாடி, ஏமாந்துட்டிங்களா? என்னை யாரும் கடத்தலை. நான் சௌக்யமா சுரேந்தரோட வீட்ல ஜாலியா இருக்கேன்னு. கூரியர் சர்வீஸ் மூலமா அனுப்பி வெச்சது எல்லாம் உங்களை

கில் பண்றதுக்குத்தான்னு."

"ரைட். பண்ணிடலாம். ஆனா நம்ம பந்தயத்தில நீ தோத்துட்டதா ஒப்புக் கறியா?"

"அது மாட்டேன்."

"அது எப்படி அப்ஸரா? நியாயமா? நமக்குள்ளே என்ன பந்தயம்? உன் டாடி உன்மேல எக்கச்சக்கமா பாசம் வச்சிருக் கார்ன்னு நீ வாதம் பண்ணே. என்னை யாராச்சும் கடத்தி வச்சிக்கிட்டு எத்தனை லட்சம் கேட்டாலும் கொடுப்பார்னு நீ சொன்னே. அதுக்கு பணம் எக்கச்சக்கமா இருக்கு. அதனால கொடுப்பார். நீதான் முக்கியம்னா சட்டத்துக்குப் புறம்பான காரியம்கூட செய்வாரான்னு கேட்டேன். செய்வார்ன்னு அடிச்சி சொன்னே. பண்ணிப் பார்த்துடலாம்னு நான் சொன்னேன். நீ சம்மதிச்சே. முந்தாநாள் ஈவினிங் இந்தக் கடத்தல் நாடகத்தை ஆரம்பிச்சோம். கொஞ்சம் அவரைத் துடிக்க வெச்சாச்சு. எதுவும் செய்யத் தயார்ன்னு பேப்பர்ல விளம்பரம் கொடுத்துட்டார். இப்ப கிளைமாக்ஸ் மட்டும்தான் பாக்கி. இப்ப விஷயத்தை உடைக்கிறேன்னு சொல்றியே, நியாயமா அப்ஸரா?"



"சுரேந், பேப்பர்ல விளம்பரம் கொடுத்துட்டாரில்லை. அதுவே நான் பந்தயத்தில ஜெயிச்ச மாதிரிதான்."

"நோ. செய்றேன்னு சொல்றது வேற, செய்றது வேற."

"ரைட்டு. இப்ப கிளைமாக்ஸ் என்ன?"

''இன்னிக்கு ராத்திரி 12 மணிக்கு அவரை குறிப்பிட்ட இடத்துக்குப் போய் அங்கே இருக்கிற சூட்கேஸை எடுத்து தன் கார்ல வச்சிக்கிட்டு பீச் ரோட்டுக்கு வரச் சொல்லப் போறோம். அங்கே நீயும் நானும் வெய்ட் பண்ணி அவரை திகைக்க வச்சி உண்மை பூரா சொல்லப் போறோம்.''

''பியூட்டிஃபுல். நான்தான் ஜெயிக்கிறேன்.''

''அப்ஸரா, நீ தோக்கக் கூடாதுங்கிறதுதான் என் ஆசையும்'' என்றான் சுரேந்தர். ''அதுவரைக்கும் உனக்கு இந்த தனிமை தேவைதான்.''

நடந்த சுரேந்தர் திரும்பி வந்து முத்தமிட்டு நடந்தான்.






இன்ஸ்பெக்டர் தங்கராஜிற்கு டிராஃபிக் டிபார்ட்மெண்ட்டில் இருந்து செய்தி போனில் வந்தது.

''நீங்க சொன்ன பியட் கார் மாம்பலம் பனகல் பார்க்ல நல்லி சில்க்ஸ் எதிர்ல பார்க்கிங் ஆகியிருக்கு. கார்லயே சாவி இருக்கு.''

''தேங்க்யூ''

தனது பைக்கில் புறப்பட்டார் தங்கராஜ். பனகல் பார்க் வந்தார். முதலில் னவைத் திறந்து உள்ளே பார்த்தார். குறிப் ம்படியாக எதுவும் தெரியவில்லை.

இன்ஸ்பெக்டர் தங்கராஜ் அந்தக் காரில் அமர்ந்து கொண்டு மேற்போர்டை றந்து பார்த்தார். நிறைய ஆடியோ ஸட்ஸ் இருந்தன.

காலை நகர்த்த... எதுவோ தட்டுப்பட... னிந்தார்.

அது ருத்ரமூர்த்தியின் ரிவால்வர்! திங் ராங்! ருத்ரமூர்த்திக்கு ஏதோ கியிருக்கிறது. இது யாருடையது என்று சாரிக்க வேண்டும். ருத்ரமூர்த்தியிடம் லசென்ஸ்ட் துப்பாக்கி இருக்கலாம்.

சிந்தனை வயப்பட்டவரின் கண்களில் ட்டுக்குக் கீழே ஒரு துண்டுக் காகிதம் ருட்டில் மறைந்திருக்க... அதை டுத்தார்.

அந்தக் காகிதம் சுருண்டு கசங்கியி ருந்தது. இரண்டாக மடக்கப்பட்டிருந்தது. ரித்துப் பார்த்தார். ஒரு ஆறு ஸ்தான போன் நம்பர் மட்டும் எழுதப்பட்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் தங்கராஜ் காரைப் பூட்டிக் கொண்டு பக்கத்தில் இருந்த டெலிபோன் த்திற்கு நடந்தார் விரைவாக.

''எக்ஸ்க்யூஸ் மி சார்''

குரலுக்கு மாலை செய்தித்தாளில் இருந்து நிமிர்ந்தார் வர்மா.

இன்ஸ்பெக்டர் தங்கராஜ் நின்று

கொண்டிருந்தார்.

வர்மாவுக்கு யூனிபார்மில் ஒரு போலீஸ் அதிகாரியைப் பார்த்ததும் பக்கென்றி ருந்தது. அப்ஸராவைக் கடத்தினவனி டமிருந்து இன்னும் தகவல் எதுவு இல்லையே என்று கவலையாக காத்திருக்கும் போது... இவர் யார்?

''சார், ஒரு விசாரணை'' என்று அமர்ந் தங்கராஜ். ''தொழிலதிபர் ருத்ரமூர்த் நேத்து ராத்திரி மர்மமான முறையி கடத்தப்பட்டிருக்கார். அவரோட க மட்டும் இன்னிக்கு எங்களுக்கு கிடைச்சிருக்கு. அதில ஒரு துண்டு காகிதம் கிடந்தது. அந்தச் சீட் உங்களோட டெலிபோன் நம்ப எழுதப்பட்டிருக்கு'' என்றார்.



''என்னது? என் போன் நம்பரா?''

''ஆமாம். இதோ பாருங்க'' என்று தங்கராஜ் அந்த சீட்டைக் காட்டினார்.

''என் போன் நம்பர்தான். யார் எழுதி வெச்சிருந்தாங்க?''

''அதை தெரிஞ்சுக்கத்தான் நான் வந்தேன். ருத்ரமூர்த்திக்கும் உங்களுக்கும் தொழில் முறையில பகை உண்டுன்னு சொன்னாங்க. ரெண்டு பேரும் ஒரு கம்பெனில பார்ட்னர்ஸா இருந்திருக்கீங்க. போர்டு மீட்டிங்ல சட்டையைப் பிடிச்சிக்கிட்டு அடிச்சிக்கிட்டதா ஒரு சம்பவம் கூட சொன்னாங்க.''

''அதெல்லாம் நாலஞ்சு வருஷம் முன்னாடி எப்பவோ நடந்தது சார். எனக்கும் ருத்ரமூர்த்திக்கும் அதுக்கப்புறம் பேச்சு வார்த்தைகூட இல்லை.''

''சமீபத்தில உங்களுக்குப் போட்டியா ஒரு பேட்டரி தொழிற்சாலை அவர் ஆரம்பிச்சி இருக்காராமே...''

''அதனால என்ன?''

''ஒருவேளை நீங்கதான் ஆள் வச்சி ருத்ரமூர்த்தியை கடத்தியிருக்கலா மோன்னு அவர் மருமகன் சந்தோஷ் சந்தேகப்படறார்.''

''கடத்திட்டு வர்றதுக்கு அவர் என்ன பொண்ணா? ருத்ரமூர்த்தி விஷயத்தைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது சார். அப்புறம்?''

''சரி, வர்றேன். ஏதாச்சும் ஆதாரம் கிடைச்சா மறுபடி வருவேன்.''



தங்கராஜ் புறப்பட்டுச் சென்றார்.

'இது என்ன புதுக் குழப்பம்?' என்று வர்மா விழிக்க...

போன் ஒலித்தது. எடுத்து, ''ஹலோ... வர்மா.''

''பேப்பர்ல நான் சொன்னபடி விளம்பரம் கொடுத்துட்டீங்களே...''

''யப்பா! உன் போனுக்குத்தான் நான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன். சொல்லுப்பா... அப்ஸரா எப்படி இருக்கா?''

''நீங்க அந்தக் காரியத்தைச் செஞ்சி முடிக்கிற வரைக்கும் நல்லாவே இருப்பா.''

''சீக்கிரம் சொல்லு. நான் என்ன செய்யணும்? எதுவும் செய்யத் தயாரா

இருக்கேன். எனக்கு அப்ஸராதான் முக்கியம்.

''வெரிகுட். உங்களுக்கு வெஸ்ட் மாம்பலத்தில ஒரு வீடு இருக்குதில்ல? அதைக்கூட நீங்க ஒரு பொண்ணுக்கு வாடகைக்கு விட்டுருந்தீங்க. அந்தப் பொண்ணைக் கூட நீங்க கொஞ்ச நாள் சின்ன வீடா வச்சிருந்தீங்களே... அப்புறம் அவளைக் காலி பண்ணி ஊரை விட்டே அனுப்பி வெச்சிட்டீங்களே... அதுக்கப்புறம் அந்த வீட்டை யாருக்கும் வாடகைக்கு விடாம பூட்டி வச்சிருக்கிங்களே...''

''உனக்கு இவ்வளவு தகவல்கள் எப்படித் தெரியும்?''

''ஒருத்தரைப் பத்தி முழு விபரமும் தெரிஞ்சுக்காம காரியத்தில இறங்கறதில்லை.''

''சரி, சொல்லு.''

''ராத்திரி பத்து மணிக்கு உங்க காரை எடுத்துக்கிட்டு நீங்க உங்க சொந்த வீட்டுக்கு வாங்க. தனியா வாங்க. அது ரொம்ப முக்கியம். அங்கே மிச்சத்தை நேர்ல பேசலாம். சரியா?''

''சரி'' என்றார் வர்மா. ''அப்ஸரா?''

''ரொம்ப பத்திரமா இருக்கா சார். நான் சொல்ற வேலையை முடிச்சதும் அவளை நான் அனுப்பி வைச்சிடறேன். இட் ஈஸ் எ டீல்''

''ஓக்கே'' என்று போனை வைத்தார்.

உடனே சுரேந்தருக்கு போன் செய்தார்.



போன் வந்த விபரங்கள் அனைத்தையும் சொன்னார்.

''ராத்திரி நானும் துணைக்கு வரட்டுமா சார்?'' என்றான் சுரேந்தர்.

''வேணாம். அவன் ரொம்ப கண்டிஷனா சொல்லிருக்கான். தனியாத்தான் வரணுமாம். நான் மட்டும் போய்ட்டு வந்துடறேன். வீட்ல கூட யார்கிட்டயும் சொல்லலை.''

''அங்கே போய் உணர்ச்சிவசப்பட்டு எதுவும் பேசிடாதீங்க சார். நமக்கு அப்ஸராவோட உயிர்தான் முக்கியம்.''

''சரி'' என்று ரிசீவரை வைத்த வர்மா பெருமூச்சு விட்டார்.

இரவுக்குக் காத்திருந்தார்.




இரவு மணி பத்து.

மேற்கு மாம்பலத்தில் இருந்த தனது தனியான வீட்டிற்கு முன்னால் காரை நிறுத்தி அதன் எஞ்சினையும், விளக்குகளையும் அணைத்தார் வர்மா.

காரை விட்டு இறங்கினார். வீட்டின் சாவிக் கொத்து கையோடு கொண்டு வந்திருந்தார். வாசலில் யாரையும்

காணோம்.

வீட்டிற்குள்ளே சென்று காத்திருக்கத் தீர்மானித்து சாவித் துவாரத்தில் சாவி பொருத்தி வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார் வர்மா.

அந்த வாசலுக்கான எல்லா சுவிட்சுகளையும் வரிசையாகப் போட்டு விட்டு, கதவைச் சாத்தி விட்டுத் திரும்பியவர்... அதிர்ந்து போனார்.

சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டிருந்த சுரேந்தர் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். அவரைப் பார்த்து புன்னகைத்தான்.

அவருக்கு அது நிஜமா என்பது புரியவே சில விநாடிகள் ஆயின.

100

''என்னப்பா இது? பூட்டின வீட்டுக்குள்ளே நீ வந்து உக்காந்திருக்கே?''

''பூட்டியிருந்தா என்ன? வேற சாவி தயாரிக்க முடியாதா அங்கிள்? ஆட்டோமேடிக் லாக். உள்ளே வந்து பூட்டிட்டேன். நீங்க திறந்துட்டு வந்திருக்கீங்க.''

''என்ன விளையாட்டு இது?''

''விளையாட்டுதான். ரொம்பப் பெரிய திட்டமிட்ட விளையாட்டு. வாங்க வர்மா. அப்படியே நின்னுகிட்டிருந்தா எப்படி? வந்து இப்படி உக்காருங்க. விலாவரியா பேசலாம்.''

வர்மா வந்து அவனுக்கு எதிர் சோபாவில் அமர்ந்தார்.

''என்னை மட்டும் தனியா வரச்



சொன்னான். நீயும் வந்துட்டே. இப்ப அவன் வந்துடுவான்ப்பா.''

''யாரு?''

''அப்ஸராவைக் கடத்தினவன்தான்.''

''அவன் வரமாட்டான் மாமா. என்னா ஏற்கனவே வந்துட்டான். புரியலையா? அப்ஸராவைக் கடத்தி வெச்சிருக்கிறது நான்தான். ரொம்ப ரொம்ப அழகா உங்களுக்கு போன்ல அப்பப்ப மிரட்டினது என்னோட நம்பிக்கைக்குரிய ஃப்ரண்டு ஒருத்தன். அவனுக்கு கதை, வசனம் எழுதிக் கொடுத்தது நான்தான்.''

''என்ன மாப்பிள்ளை இது? எதுக்கு இந்த விளையாட்டெல்லாம்?''

''சொல்றதுக்காகத்தானே வரச் சொன்னேன். அதாவது மாமா, உங்க பொண்ணைப் பொறுத்தவரைக்கும் நான் கடத்தி ரகசியமாக சிறை வைக்கப்பட்டு இருக்கோம்கிறதே அவளுக்குத் தெரியாது. வேணுமின்னே அவ வாயைப் பிடுங்கி, வம்புக்கு இழுத்து, பந்தயம் கட்டி... அங்கே வேற ஒரு செட்டப்புல அவளை சிறை வெச்சிருக்கேன். என் ஃப்ரண்டு அங்கே காவலுக்கு இருக்கான். வெறும் கையோட இல்லை. துப்பாக்கியோட. இந்தாங்க பேப்பர், பேனா. குறுக்கே எதுவும் பேசாம நான் சொல்ற மாதிரி எழுதணும்.'' 101

''என்ன இதெல்லாம்? எனக்கு எதுவும் புரியலை.''

''புரியும், எழுதுங்க. எழுதினதுக்கு அப்புறம் புரிய வைக்கிறேன். கமான், லேட்

பண்ணினா நான் போன் செய்ய வேண்டி வரும். அவன் ட்ரிக்கரை அழுத்த வேண்டி வரும். அப்ஸரா சாக வேண்டி வரும்.'' என்று அருகில் இருந்த போனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு ரிசீவரை எடுத்தான்.

''அப்போ, நீ அப்ஸராவை லவ் பண்ணலையா?''

''எல்லாம் சொல்றேன். எழுதுங்க. மாட்டீங்களா?'' என்று டயல் செய்யத் துவங்கினான்.

''வேணாம், வேணாம். எழுதறேன்'' என்று பதறி டீப்பாய் மேல் பேப்பரை வைத்து பேனாவைத் திறந்து கொண்டார்.

''ம், சொல்லு...''

''போலீஸ் அதிகாரி அவர்களுக்கு... யோகேஷ் வர்மா எழுதியது. நான்கு வருடங்களுக்கு முன்பு என் மனைவி ராஜியை ஒரு தகராறில் ஆத்திரமாக அடித்து நானே என் கையால் கொலை செய்தேன்.''

எழுதாமல் விக்கித்து நிமிர்ந்து பார்த்தார்.

''ம். எழுதுங்க. அப்ஸரா வேணாமா?''

எழுதினார். அவன் தொடர்ந்தான். ''ஆனால் அந்தப் பழியை சாமர்த்தியமாக என் வீட்டு வேலைக்காரன் முத்தையாவின் மேல் சுமத்தினேன். அன்றிலிருந்து எனக்கு மனச்சாட்சி உறுத்திக் கொண்டே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எனது தொழிலுக்கு போட்டியாக வந்ததோடு என்னை அவமானமும் படுத்திவிட்ட ருத்ரமூர்த்தியை கடத்திவந்த ஆத்திரத்தில்



கொலையும் செய்து விட்டேன்.''

''அய்யோ! என்ன இது அபாண்டம்!''

''எழுதப் போறியா இல்லையா?'' என்று மறுபடி டயல் செய்து, ''ஹலோ, நான்தான் பேசறேன். வர்மா மக்கர் பண்றார். நீ என்ன செய்றே...'' என்றதும்,

''வேணாம், எழுதறேன்.'' என்றார் பதறி.

''இருப்பா. நீ லைன்லயே இரு.. சொல்றேன். எழுதிட்டீங்களா? இந்த இரண்டு கொலைகளையும் செய்துவிட்டு வாழ்க்கை முழுவதும் மேலும் மனச் சாட்சியின் உறுத்தலகளுடன் வாழ எனக்குப் பிடிக்கவில்லை. எனவே வேறு வழியில்லாமல் எனக்கும் முடிவைத் தேடிக் கொண்டேன். அவ்வளவுதான். கையெழுத்து போடுங்க. ஆச்சா? அப்படி மேஜை மேல வைங்க'' என்று கூறிவிட்டு, ''போனை வச்சிடறேன்ப்பா. தேவைப் பட்டா மறுபடி கூப்புடறேன்''. என்று ரிசீவரை வைத்து விட்டு எழுந்தான் சுரேந்தர்.

மேஜை மேல் கடிதத்தையும், பேனாவையும் வைத்து விட்டு நின்ற அவரிடம் வந்தவன், ''வாங்க, மிச்ச காரியம் எல்லாம் அந்த ரூமுக்குள்ளே இருக்கு. உங்க சின்ன வீட்டுக்காரிக்காக செஞ்ச ஏ.சி. ரூமுக்குள்ளே போய்டலாம்'' என்றான்.

அருகில் இருந்த அந்தப் பெரிய அறையின் கதவைத் திறந்து கொண்டு அவர்கள் வந்ததும் வர்மாவுக்கு அங்கே மற்றொரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

சாத்தப்பட்டிருந்த ஒரு ஜன்னலோடு நிற்க வைக்கப்பட்ட நிலையில் இருந்த ருத்ரமூர்த்தி, ஜன்னலின் கம்பிகளோடு நைலான் கயிறால் கட்டிப் போடப்பட்டிருந்தார். அவர் மிகவும் சோர்ந்து போயிருந்தார்.

"வர்மா சார், ரொம்பக் குழப்பமா இருக்கா? தெளிவுபடுத்தட்டுமா? என் ஃப்ரெண்டு, என் ஃப்ரெண்டுன்னு சொல்றனே, அவன்தான் சுரேந்தர். அவன்தான் பணக்காரன். அவன் அப்பா சிங்கப்பூர்ல இருக்கார். நான் அவன் பேரை கொஞ்ச நாளைக்கு கடன் வாங்கிக்கிட்டேன். என் பேரு சிங்காரவேலு. இந்தப் பெரிய மனுஷன் இருக்கானே... என் அம்மா, அப்பா ரெண்டு பேரோட சாவுக்கும் காரணமா இருந்தவன். பழி வாங்கத் துடிச்ச என்னை ஜெயிலுக்கு அனுப்பி வெச்சான் இவன். அங்கேதான் நான் உங்களால பாதிக்கப்பட்ட முத்தையாவை சந்திச்சேன். அவரை நிரபராதின்னு நிரூபிக்கறேன்னு சொன்னேன். ருத்ரமூர்த்தியையும் பழிவாங்க நினைச்சேன். இந்த ரெண்டு லட்சியங்களோட ஜெயிலை விட்டு வெளில வந்தேன். உங்க ரெண்டு பேரோட நடவடிக்கைகளையும் ஒரு மாசமா அப்சர்வ் செஞ்சி திட்டம் போட்டேன். என்னோட பணக்கார ஃப்ரண்டு சுரேந்தர் கிட்ட உதவி கேட்டேன். சமூகத்தில இப்படி பதுங்கி



இருக்கற குற்றவாளிகளை தண்டிக்க சட்டம் தவறிடுச்சி. நீ துணிஞ்சி இறங்கியிருக்கே. உனக்கு என்ன உதவி வேணும்னாலும் செய்றேன்னு சொன்னான். அவன் பங்களாவில தங்கி, சுரேந்தர் ஆனேன். அவன் ஒரு ஹோட்டல்ல தங்கிக்கிட்டான். அவன் டிரெஸ், அவன் கார் இதெல்லாம் பயன்படுத்தினேன். என் திட்டத்தோட முதல் கட்டம் அப்ஸராவை என் வலையில -அதாவது காதல் வலையில விழ வைக்கிறது. வீடியோ திராபரா வந்து வம்பு செஞ்சி அடிவாங்கிட்டுப் போனது என் ஃப்ரெண்டு சுரேந்தர்தான். இப்போ கிளைமாக்சுக்கு வந்துடுச்சி என் திட்டம்."

பேசிக் கொண்டே ஒரு அலமாரியைத் திறந்து கிளவுஸ் எடுத்து அணியத் துவங்கினான் சுரேந்... ஸாரி... சிங்காரவேலு.

இரண்டு பேரும் திகில் முகங்களுடன் பார்க்க, அடுத்து ஒரு ரிவால்வரை வெளியில் எடுத்து, நடந்து வந்தான்.

"வர்மா சார், முழிக்காதீங்க. இது உங்க துப்பாக்கிதான், உங்க கைரேகைதான் இதில பதிஞ்சிருக்கு. உங்களுக்குத் தெரியாம ஜாக்கிரதையா திருடினேன். இப்ப நான் ருத்ரமூர்த்தியை சுடப் போறேன். அவனை என் கையால பழி வாங்கினாத்தான் திருப்தி. ஆனா கொலைப் பழியைத்தான் முத்தையா மாதிரி நீங்க சுமக்கப் போறீங்களே..."

"அய்யோ! வேணாம்" என்று

ருத்ரமூர்த்தி அலற அலற சட்டென்று அவரை மார்பில் குறி பார்த்து சுட்டான் சிங்காரவேலு.

பெரிய அலறலுடன் இறந்து போன ருத்ரமூர்த்தியின் தலை தொங்கியது. பயத்தில் வர்மாவின் விரல்கள், கால்கள் எல்லாமே நடுங்கின.

அவர் பக்கம் திரும்பினான். ''நேத்து ராத்திரி ருத்ரமூர்த்தியை போன் செஞ்சி சாமர்த்தியமாப் பேசி, தனியா வரவழைச்சி நான்தான் கடத்திக்கிட்டு வந்து இங்கே கட்டிப் போட்டேன். இவரோட கார்ல உங்க போன் நம்பரை எழுதிப் போட்டேன். வந்து விசாரிச்சிருப்பாங்களே. இவரோ உங்க தொழில்ல எதிரி. ஏற்கனவே பகை உண்டு. கொலை நடந்திருக்கிறது உங்களுக்குச் சொந்தமான வீட்ல. பயன்படுத்தப்பட்ட ஆயுதம் உங்க துப்பாக்கி. இவ்வளவுக்கும் மேல நீங்களே உங்க கைப்பட கொலை செஞ்சதா எழுதி வேற வெச்சிட்டீங்க. இதுக்கும் மேலே போலீசுக்கு இந்த கேசில சந்தேகம் வருமா வர்மா சார்? நிச்சயமா உங்களுக்கு தூக்குதான். தேவையா? அவமானமில்லையா? அதுக்கு நீங்களே தற்கொலை பண்ணிக்கிறது பெட்டர் இல்லையா?'' என்று பீரோவில் இருந்து கலந்து தயாராய் வைக்கப்பட்டிருந்த ஒரு கிளாஸ் டம்ளரை எடுத்து வந்து அவர் கையில் கொடுத்தான்.

நடுங்கியபடி வாங்கிக் கொண்டார்.

''இதில விஷம் கலந்திருக்கேன். கண்ணை மூடிக்கிட்டு குடிச்சிடுங்க. இல்லைன்னா உங்க நெத்திப் பொட்டுல நானே சுட்டுட்டு துப்பாக்கியை உங்க கைல வெச்சிட்டுப் போய்டுவேன். அதுவும் தற்கொலைதான். என்ன? வலிக்கும். மூளை சிதறும். இதில அந்த அவஸ்தை எல்லாம் இல்லை.''

''அன்னைக்கு கொலையிலேர்ந்து தப்பிக்க முத்தையா மேல பழி போட்டுட்டேன். எனக்கு மன்னிப்பே இல்லையா தம்பி... ப்ளீஸ்...''

''இல்லை. கெஞ்சறதல பிரயோஜனம் எதுவும் இல்லை. அஞ்சி எண்ணுவேன். அதுக்குள்ளே குடிச்சாகணும். இல்லைன்னா சுடுவேன். ஒண்ணு...''

''இரு. இருப்பா. குடிச்சிடறேன். என் பொண்ணு? அப்ஸராவை எதுவும் செஞ்சிடாதே. அவளோட உயிருக்கு...''

''சாகறப்ப நல்ல செய்தி கேட்டுட்டு செத்துடுங்க. எனக்கு உங்க பொண்ணு பகை இல்லை. அவளை நான் ஒரு கருவியா பயன்படுத்தத் தான் காதலிக்கிற மாதிரி நடிக்க ஆரம்பிச்சேன். ஆனா உண்மையா இப்ப லவ் பண்றேன். அதனால அவளை எதுவும் செய்ய மாட்டேன். கமான்.''

''அது போதும்'' என்ற வர்மா கடகடவென்று அந்த விஷத்தைக் குடித்து முடித்தார். சற்று நேரத்தில் சரிந்து விழுந்து மயக்கமாகி... பிறகு இறந்து போனார்.

சிங்காரவேலு துப்பாக்கியை அவர்

அருகில் போட்டுவிட்டு ஹாலில் இருந்த அவர் எழுதின கடிதத்தையும், பேனாவையும் கொண்டு வந்து அவருக்கு அருகில் வைத்து விட்டுப் புறப்பட்டான்.

வெளியே வந்து தெருமுனையில் நிறுத்தியிருந்த சுரேந்தரின் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

இரவு மணி 12. கடற்கரையில் தங்கள் கார் அருகில் சிங்காரவேலுவும், அப்ஸராவும் நின்று கொண்டிருந்தனர்.

''இன்னும் டாடியைக் காணோமே'' என்றாள் அப்ஸரா.

''வருவார். அப்ஸரா, இன்னொரு விஷயம். ஒப்பனான கேள்வி இது. நீ என்னை லவ் பண்றியா? இல்லை என் பணத்தையா?'' என்றான் சிங்காரவேலு.



''என்ன கேள்வி இது? என்கிட்ட இல்லாத பணமா? ஐ லவ் சுரேந்தர்.''

''இல்லை அப்ஸரா. நான் சுரேந்தர் இல்லை. என் பேர் சிங்காரவேலு. கல்யாணத்துக்காக ஆயிரம் பொய் சொல்லலாம்னு சொல்லுவாங்க. நான் காதலுக்காக ஒரு பெரிய பணக்காரன்னு பொய் சொல்லிட்டேன். உன் அன்பை அடையணுங்கறதுக்காக. சுரேந்தர் என் ஃப்ரண்டு. என் காதலுக்கு உதவினவன்.''

இடிந்து போய் நின்றாள் அப்ஸரா.

''என்னை நீ ஏத்துக்கறதும், வெறுக்கறதும் உன் இஷ்டம்'' என்ற சிங்காரவேலு தனது பழிவாங்கல் நடவடிக்கைகள் நீங்கலாக எல்லாம் சொன்னான்.

கொஞ்ச நேரம் கழித்து, ''பேர் எதுவா இருந்தா என்ன? ஐ லவ்யூம்மா'' என்றாள்.

''என்ன, இன்னும் டாடியைக் காணோம். பந்தயத்தில நான் தோத்துடுவேனா?'' என்றாள் அப்ஸரா.

தான் விஷம் குடித்து அவளை பந்தயத்தில் அவள் அப்பா ஜெயிக்க வைத்து விட்டார் என்பதை அவளிடம் சொல்ல முடியாமல் தவித்த சிங்காரவேலு, ''வா, உன் வீட்ல போய்ப் பார்க்கலாம்'' என்றான்.

இருவரும் வீட்டிற்கு வர- நிறைய போலீஸ்காரர்கள் இருந்தார்கள்.

''மேடம், உங்க ஃபாதர் மிஸ்டர் ருத்ரமூர்த்தியை கொலை செய்துட்டு, தானும் தற்கொலை செய்துகிட்டிருக்கார்'' என்றார் ஒரு அதிகாரி.



அவளோடு சேர்ந்து சிங்காரவேலுவும் செயற்கையாக அதிர்ச்சியடைந்தான்.

சில தினங்கள் கழித்து முத்தையா விடுதலை செய்யப்பட, அத்துடன் பந்தயத் துடிப்பு... முற்றும். அப்ஸராவுக்கு எப்போதாவது எல்லாம் சிங்காரவேலுவின் வேலை என்பது தெரிய வந்தால்... தொடரும். அந்த ரகசியம் தெரிய வராமல் அவர்களின் இல்லறம் தொடரட்டும் என பிரார்த்திப்போமா?

**(முற்றும்)**



போனஸ் குறுநாவல்

# ... ஆகையால் இறந்தாள்

பட்டுக்கோட்டை பிரபாகர்



## 1

**கா**ரை அவள் ஓட்டிக் கொண்டிருந்தாள். அருகில் அவர் அமர்ந்திருந்தார். ஆரஞ்சு முகம் கொண்ட சாலையோரக் கம்பங்கள் வெளிச்சம் விசிறிக் கொண்டிருந்தன.

அவள் சூரிதார் அணிந்திருந்தாள். ஆழ நீலமாக கூந்தல் அலட்சியமாய் வாரப்பட்டு நெற்றியோரக் கற்றைகள் அடிக்கடி முன் அசைத்துப் பின் தள்ளப்பட்டன. காதுகளில் சின்னப் பவளம் பதித்த டிராப்ஸ் அசைந்து கொண்டே இருந்தன. எதிரே வரும் வாகனங்களில் ஹெட்லைட்ஸ் ஒளியை அவள் உதடுகளின் மேல் பூசப்பட்ட க்ளோஸ் லேசாகப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. விரல்களின் நகங்களில் நிறைய அக்கறை செலுத்தியிருந்தாள். அவள் கரங்கள் தொட்டுக் கொண்டிருந்த கார் ஸ்டியரிங் அழகாகியிருந்தது. உருவாக்கப்பட்ட புருவங்களின் மத்தியில் சிறிய கருநீல ஸ்டிக்கர் பொட்டு ஒட்டியிருந்தாள்.

அவர், ''மைதிலி'' என்றதற்கு ''ம்'' என்றாள்

பாதையைப் பார்த்துக் கொண்டு.

''இலங்கையிலிருந்து உனக்கு என்ன வேண்டும்?''

''எதுவும் வேணாம். நீங்க பத்திரமாத் திரும்பி வந்தாப் போதும்.''

''அசடு! நான் போற இடத்தில சண்டையே இல்லை...''

''எத்தனை நாளாகும் திரும்பறதுக்கு?''

''அதிகபட்சம் ஒரு வாரம்...''

''ஒரு வாரம் ஆகுமா?''

''எஸ்டேட்டை விலை பேசி வித்து, பத்திரம் ரெஜிஸ்ட்ரேஷன் எல்லாம் செஞ்சி கொடுத்துட்டு வர வேண்டாமா? அடுத்த நாள்லயே வேலை முடிஞ்சிட்டாக்கூட உடனே பறந்து வந்துடுவேன்.''

''திருவான்மியூரால நம்ம புது நகர் இன்னும் வளர்ச்சியடையவேயில்லை. இங்கே ஒரு வீடு, அங்கே ஒரு வீடு. கொஞ்சம் பயமாத்தான் இருக்கு டியர்...''

''ராத்திரி உன்னோட வேலைக்காரியையும் படுத்துக்கச் சொல்லியிருக்கேனே. அப்புறம் என்ன பயம்?''

''தினம் ஒரு தடவை போன் செய்யணும்?''

''நிச்சயமா.''

''அது பாட்டுக்கு அந்த எஸ்டேட் இருந்தா என்ன? இப்போ எதுக்கு அதை வித்துக்கிட்டு?''

''ராணிப்பேட்டையில இன்னொரு தயாரிப்பு யூனிட் போடறதுக்கு வேலை நடந்துக்கிட்டிருக்கு மைதிலி. பணம் வேணும்! கடன் இல்லாம சொந்தப் பணத்திலே காரியங்கள் செஞ்சா நிறைய மிச்சம் இருக்கு...''

''திருச்சி பிராஞ்சில நாளைக்கு முழுக்க இருப்பீங்களா?''

''ஆமாம். நாளைக்குத்தான் திருச்சிலேர்ந்து சிலோனுக்கு விமான டிக்கெட் வாங்கியிருக்கேன். மேஜை டிராயர்ல செக் புத்தகம் வச்சிருக்கேன். வெறும் செக்ல கையெழுத்துப் போட்டு வச்சிருக்கேன். வேணும்னா பேங்கலேர்ந்து எடுத்துக்கோ. என் தம்பியைத் தினம் வீட்டுக்கு வந்து பார்த்துட்டுப் போகச் சொல்லியிருக்கேன். ஒண்ணும் பயமில்லை. தைரியமா இரு. தெரிஞ்சதா?''

''சரி. சொல்ல மறந்துட்டேன். உங்க தம்பி குமார் போன் செஞ்சாரு. எந்த ரயில்ல புறப்படறீங்கன்னு கேட்டாரு. மலைக்கோட்டையிலேன்னு சொன்னேன். ஸ்டேஷனுக்கு வாரேன்னு சொன்னாரு...''

''வரட்டும். ஏன் மைதிலி? இப்படிச் செஞ்சா என்ன? குமார் மனைவியை நான் வர்ற வரைக்கும் நம்ம வீட்ல இருக்கச் சொல்வோமா? துணையா இருப்பா அவ.''

''இல்லை. வேணாங்க. அது முழுகாம இருக்கு. ஏற்கெனவே ஒரு குழந்தை. அதுக்குத் தொந்தரவு தரவேணாம். நான் பார்த்துக்கிறேன்.''



''நமக்கு எப்போ குழந்தை மைதிலி?''

''மூணு வருஷம்தானே ஆச்சு? இன்னும் ரெண்டு வருஷம் போகட்டுமே டியர்...''

''இல்லைம்மா. இதுவே ரொம்ப லேட். நான் சிலோன் போய்ட்டு வந்ததும் ரெண்டு பேரும் ஒரு வாரம் எதாவது ஒரு ஜில்லான ஊருக்குப் போய்டலாம். முயற்சியைத் தொடங்கிடலாம். என்ன?''

''சரி'' என்றாள்.

காரை எழும்பூர் ஸ்டேஷனின் முன் பார்க்கிங் இடத்தில் நிறுத்தினாள். இறங்கிக் கொண்டார் சிதம்பரம். தண்ணீர்க் குடம் போல இடுப்பில் ஹெல்மட்டை அணைத்துக் கொண்டு வந்த குமார், டிக்கியில் இருந்து எடுத்து வைக்கப்பட்ட இரண்டு சூட்கேஸ்களையும் எடுத்துக் கொண்டான்.



''வாங்க, ரயிலுக்கு இன்னும் அஞ்சு நிமிஷம்தான் இருக்கு. அண்ணி! உங்களுக்கும் எனக்கும் பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிட்டேன்'' என்று துரிதப்படுத்தினான்.

உள்ளே ஜனங்கள் பேசிக் கொண்டு நடந்தார்கள். டிராலிகளின் சக்கரங்கள் கடகடத்தன. க்ளோஸ்ட் சர்க்யூட் டி.வி.யில் விளம்பரங்கள் மாறிக் கொண்டிருந்தன.

''மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் இன்னும் சில நிமிடங்களில் புறப்படும்'' என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

முதல் வகுப்புப் பெட்டியை அடைந்து உள்ளே சிதம்பரத்தின் இருக்கைக்கு அடியில் பெட்டிகளை வைத்து விட்டுக் கீழே இறங்கினான் குமார். ஏற்கெனவே அறிமுகமான டி.டி.ஈ. சிதம்பரத்தைப் பார்த்து விஷ் செய்தார். சிதம்பரம் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, ''குமார்! உங்கண்ணிக்குத் தனியா இருக்கப் பயமா இருக்காம்'' என்றார்.

''ஏன் அண்ணி, அப்படியா?''

''இல்லைங்க. அவர் சும்மா கிண்டல் பண்றார். வெளியூர் போனாலே மத்தியான சாப்பாட்டை அப்படியே தள்ளிப் போட்டு சாயங்காலம் டிபன் சாப்பிடுவீங்க. அப்படி எல்லாம் செய்யாம நேரா நேரத்துக்குச் சாப்பிடுங்க...''

''சரி. குமார்! நீ அடிக்கடி வீட்டுக்குப் போய் பார்த்துக்கோ...''

''நிச்சயமா. திருச்சி ஜங்ஷனுக்கு கார் அனுப்பச் சொல்லிட்டிங்களா?''

''நேத்தே பிராஞ்ச் ஆஃபீசுக்கு தகவல் சொல்லியாச்சு. கார் வந்துடும்.''



''சிக்னல் போட்டாச்சி. ஏறுங்க.''

சிதம்பரம் மைதிலியைப் புன்னகைத்து விட்டு ஏறிக் கொண்டார். தன் இருக்கையில் அமர்ந்து ரயில் நகர, நகர உற்சாகமாகக் கையாட்டினார்.

திடீரென்று நினைத்துக் கொண்டவனாய் குமார் சற்று முன்னால் ஓடி, ரயிலின் வேகத்துடன் லோசாக ஓடிக் கொண்டு, ''அண்ணா! நீங்க ஊர்லேந்து வந்ததும் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும் அண்ணியைப் பத்தி'' என்றான்.

சிதம்பரம் புரியாமல் பார்க்க, ரயில் வேகம் பிடித்து விலகியது.

## 2

அவன் பஸ்ஸை விட்டு இறங்கினான். நெடுந்தூர பஸ் பயணத்தில் உடைகள் கசங்கியிருந்தன. அழுக்காகியிருந்தன. தலை கலைந்து போயிருந்தது. முகத்தில் களைப்பும் லேசாக தாடியும் இருந்தன. கையில் ஒரே ஒரு சூட்கேஸ் வைத்திருந்தான்.



பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தான். ஆட்டோக்காரர்கள் விண்ணப்பித்தார்கள். பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு நிராகரித்தான். ரிக்ஷாக்காரர்கள் சப்தம் செய்தார்கள். சென்றான்.

''பக்கத்திலே இருக்கிற ஒரு சுமாரான லாட்ஜுக்கு போகணும்'' என்றான்.

''குந்து. என்னா வாடகை இருக்கலாம்? அம்பது?''

''ம்கூம். பத்து இல்லைன்னா பதினைஞ்சு''

ரிக்ஷாக்காரன் திரும்பிப் பார்த்து விட்டு, ''எனக்கு அஞ்சு ருபா கொடுத்துடு...''

''தாறேன். உன் பீடியைக் கொஞ்சம் தா.''

வாங்கித் தன் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். வாகனங்கள் இருட்டைத் துளை போட்டுக் கொண்டு விர்ர் விர்ர் என்று விரைவதை வேடிக்கை பார்த்தான். உயரமான கட்டடங்களை,

விளம்பர நியான் நிமிட்டல்களைப் பார்த்தான். க்சீ என்று ரிக்‌ஷா நின்றதும் இறங்கிக் கொண்டான்.

லாட்ஜ் மின்சாரப் பஞ்சத்தில் இருந்தது. மாடிப்படிகளில் ஏறியபோது கெட்ட வார்த்தை சொல்லி யாரையோ உரக்கத் திட்டிக் கொண்டு, மாராப்பு விலகின பெண் ஒருத்தி குலுங்கி இறங்கிப் போனாள்.

கள்ளிப் பலகையில் செய்த மேஜையில் அழுக்கான லெட்ஜரில் கையெழுத்துப் போட்டு முடிப்பதற்குள், "தனிதானா, வேற யாருமில்லையா?" என்று இரண்டு முறை சந்தேகமாக விசாரிக்கப்பட்டான். "பேரென்ன, மதியழகனா?"

காட்டப்பட்ட அறையில் கரப்பான் பூச்சிகள் கட்டிலை விட்டுக் காலி செய்தன. பெட்ஷீட் அழுக்காய் இருந்ததை சுட்டிக் காட்ட, உடனடியாக அதே பெட்ஷீட் திருப்பிப் போடப்பட்டது. இப்போது இன்னும் அழுக்காய் இருந்தது.

மதியழகன் சூட்கேஸை வைத்து விட்டு அறையைச சாத்தி விட்டு உடைகளைக் களைந்தான். குளித்தான். வேறு உடை அணிந்து கண்ணாடி தேடி, கிடைக்காமல் உத்தேசமாகத் தலைவாரிக் கொண்டான்.

கட்டிலில் உட்கார்ந்து சூட்கேஸை மடியில் வைத்துத் திறந்து ஓரமெல்லாம் கிழிந்து போயிருந்த அந்த இன்லண்ட் கடிதத்தை எடுத்து ஜாக்கிரதையாகப் பிரித்துப் படித்தான்- ஆயிரத்து நானூற்றி இருபத்து ஏழாவது தடவையாக.

'மைடியர் மதி!

உன்னை என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. இமைகளை மூடினால் உள்ளே வந்து உட்கார்ந்து கொள்கிறாய். திறந்தால் பார்க்கும் பொருள்களில் எல்லாம் படுத்துக் கொண்டு கண்ணடிக்கிறாய். ஏன் இப்படி என்னை ஆட்டி வைக்கிறாய் கண்ணா? உன் உதடுகளில் கொப்பளிக்கும் குறும்பை என் உதடுகளால் துடைத்த எடுத்த பின்னரும் மீண்டும் எப்படி குறும்பு வருகிறது? உன் கரங்களில் என்ன மாயம் வைத்திருக்கிறாய் மதி? நீ என்னைத் தொட்ட இடங்களில் எல்லாம் மீண்டும் நினைத்துப் பார்க்கும்போது அந்தத் தொடும் உணர்வை உணர முடிகிறது. இப்படி நீ என்னை அலைக்கழித்தால் நான் என்ன செய்வது? படிக்க வேண்டாமா? பாஸ் செய்ய வேண்டாமா? விடமாட்டாய் போலிருக்கிறதே... எப்போது கண்ணா என்னை இந்த இன்பச்





சிறையிலிருந்து விடுவிக்கப் போகிறாய்? சொல்லுடா ராஜா. அடுத்த கடிதத்தில் சொல்கிறாயா?

உனக்கே உனக்காக நான் -

படித்து முடித்ததும் தாடையின் நரம்புகள் அசைந்தன. மடித்து உள்ளே வைத்தான். அவன் உதடுகள் ஒரு மோசமான கெட்ட வார்த்தையை முனகின.

இது கடிதமல்லடி என்னைப் பிடிக்க நீ போட்ட தூண்டில். உனக்கு இனித்த வரையில் நான் காகிதம். உனக்குக் கசந்தபோது நான் கசக்கப்பட்ட குப்பை. உன்னை நான் ஆட்டுவிப்பதாகச் சொல்லிச் சொல்லி என்னை ஆட்டுவித்தாயே. எவ்வளவு சுலபமாக குட்பை சொன்னாய்?

உன் இருப்பிடம் தெரியாமல் தான் இத்தனை நாளும் அலைந்தேன்.

மதியழகன் சூட்கேசில் உடைகளுக்கு நடுவில் வைத்திருந்த உறை போட்ட கத்தியை எடுத்து பாண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

லாட்ஜை விட்டு சாலைக்கு வந்து ஒரு சாலையோரக் கடையில் டிபன் சாப்பிட்டு விட்டுக் கேட்டான். "திருவான்மியூருக்கு எந்த பஸ்ல போகணும்?"

**3** எழும்பூர் ஸ்டேஷனை விட்டு மைதிலியும், குமாரும் வெளியில் வந்ததும், "அப்போ நாளைக்குப் பார்க்கலாம் அண்ணி! காரை நிதானமா ஓட்டிக்கிட்டுப் போங்க" என்று கூறிவிட்டு ஹெல்மெட் அணிந்து கொண்டு தனது ஸ்கூட்டருக்குச் சென்றான் குமார்.

மைதிலி காரில் புறப்பட்டு பீச்ரோடு வந்தாள். சாந்தோம் பீச் அருகில் சாலையின் ஓரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் காரை நிறுத்தினாள். இறங்கினாள். காற்று அவள் கூந்தலைப் புரட்டியெடுக்க, தரைக் காற்றில் மண் அலை அலையாக இடம் மாறிக் கொண்டிருந்தது.

வாட்சைப் பார்த்துக் கொண்டு தேடினாள்.

"நான் இங்கே இருக்கேன்" என்று இருட்டான மணல் வெளியிலிருந்து குரல் வந்தது. குரலை நோக்கி நடந்தாள். நெருங்கினாள்.

"பார்சல் கட்டி அனுப்பிச்சிட்டியா? உக்காரு" என்று அவள் கையைப் பற்றி தன் அருகில் அமர்த்திக்

கொண்டான். "வழியனுப்பு விழாவுக்காக இந்த அலங்காரமா, இல்லை எனக்காகவா? சிம்பிள் ரேவிஷிங் மைதிலி!"

"இப்படிச் சொல்லிச் சொல்லியே என்னை மடக்கிப் போட்டுட்டே தினகர்."

"ம்!"



"இந்த மாதிரி பொது இடத்திலே சந்திக்கிறதெல்லாம் வேணாமே..."

"ஏனாமே?" என்றான் அதே ராகத்தில்.

"ரிஸ்க் தினகர்! எனக்குத் தெரியாதவங்க எவ்வளவோ பேருக்கு என்னைத் தெரிஞ்சிருக்கலாம்..."

"திருமதி மைதிலி சிதம்பரம் கள்ளத்தனமாக காதலிக்கிறார். தன் கணவரின் அந்தரங்க உதவியாளரான தினகரும் இவரும் கணவர் ஊரில் இல்லாத நாளகளில் அடிக்கும் கொட்டங்கள் பின்வருமாறு- அப்படின்னு பத்திரிகையில வந்தா எப்படி இருக்கும் மைதிலி?"

"நான் சீரியஸாச் சொல்றேன். கிண்டலா இருக்கா?"

"சரி, நானும் சீரியஸாயிட்டேன். நான் கேட்ட கேள்விக்கு என்ன பதில்?"



"என்ன கேட்டே?"

"நம்ம எதிர்காலத்தைப் பத்தி ஒரு திட்டம் சொன்னேனே மைதிலி..."

"ப்ளீஸ், அதெல்லாம் வேணாம்..."

"எதெல்லாம் வேணாம்? சொல்லு. நான் வேணுமா, வேணாமா?"

"அப்பப்போ வேணும்..."

"திமிரா? மைதிலி, நான் உன் உடம்புக்காக மட்டும் திருட்டுத்தனம் செய்யலை. உன்னை முழுசுமா விரும்பறேன். யோசி மைதிலி. நான் என் வேலையை ராஜினாமா செஞ்சிடறேன். ஒன் ஃபைன் மார்னிங் நாம ரெண்டு பேரும் காணாமல் போயிடலாம். எளிமையா எங்கேயாச்சும் வாழலாம். சிதம்பரத்தை உதறிட்டு வா மைதிலி."

"முட்டாள்தனமாப் பேசாதே தினகர். அதெல்லாம் என்னால முடியாது. ரெண்டு பேரும் இந்த விநோதமான வலையிலே விழுந்திருக்கவே கூடாது. எப்படியோ விழுந்துட்டோம். விழ வச்சது... ப்யூர்லி செக்ஸ்! நீ கன்னிப் பொண்ணு கிட்டே பேசற மாதிரி காதல், கத்திரிக்காய்னு உளறாதே. ஐ டோண்ட் லவ் யு. ஐ நீட் யு. ரெண்டுக்கும் வித்தியாசம் இருக்கு..."

தினகர் அமைதியாக இருந்தான்.

"ஏய், கோபமா?" என்று அவன் தலையைக் கலைத்தாள். வெடுக்கென்று தலையை இழுத்துக் கொண்டு முறைத்தான்.

"அப்பா! எவ்வளவு கோபம் வருது உனக்கு? குறைச்சுக்கோ. நாளைக்கு உன் பொண்டாட்டி ரொம்பக் கஷ்டப்படுவா..."

"மைதிலி! நீதான் என் பொண்டாட்டி."



"திரும்பத் திரும்பி கிறுக்குத்தனமா அதையே பேசாதே..."

மீண்டும் அமைதியானான். அவன் தாடையைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி,

"இன்னைக்கு வேலைக்காரிக்கு காக கொடுத்து செகண்ட் ஷோவுக்கு அனுப்பப் போறேன். சான்ஸைப் பயன்படுத்திக்கிறதா இல்லையா?" என்று அவன் கன்னத்தைக் கிள்ளினாள்.

"நான் வரலை..."

"அப்படின்னா வருவேன்னு அர்த்தம்."

"நிஜமாவே வரமாட்டேன்..."

"பார்க்கலாமா?" என்று எழுந்து கொண்டாள். "எங்கே உன் பைக்? அதோதான் நிக்குதே. தயாராத்தான் வந்திருக்கே. நான் வீட்டுக்குப் போறேன்ப்பா. அனுப்பிவிட்டு குளிக்கப் போறேன்ப்பா. குளிச்சிட்டு நைட்டி மட்டும் போட்டுக்கப் போறேன்ப்பா. போட்டுக்கிட்டு கட்டில்ல தனியாப் படுத்திருக்கப் போறேன்ப்பா. நீ வர வேணாம். என்ன? சரியா?"



"நான் வர்றதுன்னா இன்னைக்கு நீ எனக்கு ஒரு முடிவு சொல்லியாகணும் மைதிலி..."

"அய்யய்யே... இதென்ன சின்னக் குழந்தை மாதிரி இன்னைக்கு இப்படி அடம் பிடிக்கிறே? வா, பேசுவோம். நான் சொல்றதிலே நியாயம் இருக்கா, இல்லையான்னு பாரு. அப்புறம் நீயே ஒரு தீர்மானத்துக்கு வா. கோபம் மட்டும் வேணாம் தினகர். மூடே போயிடும்..."

மைதிலி காரில் அமர்ந்து கொண்டு, "அரை மணி நேரம் இடைவெளி கொடுத்துப் புறப்படு. வழக்கம் போல் தெரு முனையிலேயே இஞ்சினை அணைச்சிடு. என்ன?" என்று ஸ்டார்ட் செய்ய, முறைப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான் தினகர்.

## 4

மதியழகனோடு இறங்கியவர்கள் எல்லாம் குறிவைத்துத் தங்கள் திசை நோக்கி நடக்க ஆரம்பித்து விட... இவனுக்குப் பெட்டிக்

கடைக்காரனின் உதவி தேவைப்பட்டது. அந்த உதவிக்கு நாலு பீடியும், மீதி சில்லறை இல்லாமல் சாக்லெட்டும் வாங்க வேண்டியிருந்தது.

''புதுநகர்ங்கிறது கொஞ்சம் சிக்கலான வழி. புரிஞ்சுக்குவீங்களா? அதோ ஒரு ஸ்ட்ரீட் லைட் எரியாம நிக்குது பாருங்க அதுக்கு நேர் எதிர் ரோடுல நேராப் போங்க. வரிசையா நாலு அரசமரம் வரும். அங்கே ரைட்ல திரும்பினீங்கன்னா ஒரு சாக்கடை வாய்க்கா. அதைத் தாண்டி...''

சிரமம் இல்லாமல் வந்து விட்டான் மதியழகன். புதுநகர் என்று சம்பிரதாயத்துக்கு சின்ன போர்டு இருந்தது. அதிலே இருந்த அம்புக்குறி திசையில் போக வேண்டுமென்றால் ஹெலிகாப்டர் வேண்டும்.



ஆகாயம் பார்த்த போர்டை நிமிர்த்த முயற்சி செய்து முடியாமல் போக, நிதானமாக நடந்தான். எதிர்ப்பட்ட ஒரு ஸ்கூட்டர்காரனை நிறுத்தி, ''சிதம்பர பவனம் எங்கே இருக்கு? டோர் நம்பர் 7/7'' என்றான்.

அவன் அதோ... என்று சுட்டிக் காட்டிய பகுதியில் இருட்டு இருந்தது. நெருங்கினபோது ஒன்றிரண்டு விடுகள் புலப்பட்டன.

''அய்யோ!'' என்று கத்திப் பார்த்தான். சுற்று வட்டாரத்தில் ஒரு மரத்தின் இலைகளில் தவிர சலனமே இல்லை.

சிதம்பர பவனத்தில் உள்ளே விளக்கெரிவதை ஜன்னல் கட்டியம் கூறியது. டிங் டாங் என்றது அழைப்பு மணி.

திறந்தவள் வேலைக்காரிக்கான அம்சங்களுடன் இருந்தாள். ''யாரு?'' என்றாள் அவளுக்கே கேட்காமல்.

''மைதிலி இல்லை? நான் அவ சொந்தக்காரன். முறை மாமன். எங்கே?''

''இல்லையே... அய்யாவை ரயிலேத்தி விடப் போயிருக்காங்க. எந்த ஊரு நீங்க?''

''ஒரே ஊருதான் ரெண்டு பேரும். நகரு. உட்கார்ந்துக்கிறேன். இப்ப வந்துடுமில்லே மைதிலி? காப்பி இருக்குமா?''

''நீங்க வெளியிலே இருங்க. புல்வெளில நாற்காலிகள் போடறேன். உக்காருங்க. வந்துடு வாங்க. இல்லைன்னா காலைல வர்றீங்களா?''

''உனக்கு இவ்வளவு இடம் கொடுத்து வச்சிருக்குதா மைதிலி? வரட்டும்'' என்று வெளியில் வாசல் படியிலேயே உட்கார்ந்து கொண்டான்.



அவள் சற்றுத் தயங்கி விட்டு கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போனாள். ஒரு பீடி பற்ற வைத்துக் கொண்டு காத்திருந்தான் மதியழகன்.

## 5

மறுநாள்.

காலை ஏழு மணிக்கெல்லாம் புது நகரின் நாளைய கிரிக்கெட் வீரர்கள் டவுசர் மாட்டிக் கொண்டு குச்சிகளையும் மட்டைகளையும் தூக்கிக் கொண்டு பிட்சுக்குள் நுழைந்தார்கள்.

சீனியராக இருந்தவன் மட்டை பிடித்தான். மயில நேற்றைக்குத் தான் சேர்ந்தவனை லாங்-ஆனில நிறுத்தி வைத்தான். தனக்கு சாதகமாக நன்றாகத் தூக்கி அடிக்கத் தோதாக பந்துபோடும் சின்னப் பையனை பௌலிங் செய்ய அழைத்தான். ஏனைய பையன்கள் எந்த நேரத்திலும் வீட்டிலிருந்து டிபன் சாப்பிட அழைப்பு வரும் அபாயத்தில் அங்கங்கே நின்று கொண்டார்கள்.

முதல் பந்து அளவு குறைவாக வந்த பந்து. அதை மிட்-ஆன் திசையில் திருப்பிவிட முயன்ற பேட்ஸ்மேன் தன் காலால் ஸ்டம்பைத் தட்டி விட்டான். ஆனால் மட்டையும், குச்சிகளும் அவன் பணம் போட்டு வாங்கியிருந்ததால், அவனுக்கு மட்டும் அது அவுட் இல்லை.

இரண்டாவது பந்து நல்ல உயரத்தில் வர, அதை சுழற்றி சிக்ஸர் உத்தேசித்து அடித்தபோது... பந்து நேராகச் சிதம்பர பவனத்தின் மாடி ஜன்னல் கண்ணாடிகளை சிலீர்-சிலுங் என்று உடைத்துக் கொண்டு உள்ளே பிரவேசித்தது. கட்டிலில் படுத்திருந்த மைதிலியின் மண்டையில் வந்து மோதியது.

ஆனால் மைதிலி விழிக்கவும் இல்லை. அவளுக்கு வலிக்கவும் இல்லை. அவள் உடம்பில் உயிரும் இல்லை.

''வாங்கடா, போய்ப் பந்து எடுத்துக்கிட்டு வரலாம்''

கோரஸாக ஓடினார்கள் வீட்டின் வாசலை நோக்கி. சில விநாடிகளில் கோரஸாகத் திரும்பினார்கள், பீதி நிறைந்த முகங்களுடன். தத்தம் அப்பாக்களிடம் ஓடி மூச்சிரைக்க பார்த்ததை விவரிக்க... அதில் ஓர் அப்பா போன் ரிசீவரைக் கையில் எடுத்தார்.



* * *

திருச்சி ஜங்ஷனில் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் நின்றதும்... முதல் வகுப்புப் பெட்டி நிற்கும் இடத்திற்கு நேராக நின்று காத்திருந்த டிரைவர் வண்டியில் ஏறி, சிதம்பரத்திற்கு வணக்கம் சொல்லி விட்டு இரண்டு சூட்கேஸ்களையும் எடுத்துக் கொண்டான்.



சிதம்பரம் டி.டி.ஈ.யைப் புன்னகைத்து விட்டு லுங்கியைச் சரியாகக் கட்டிக் கொண்டு கீழே இறங்கினார்.

வெளியே திருச்சி நிறுவனத்தின் காரில் ஏறிக் கொண்டார். கார் நேராக வயலூர் ரோட்டில் இருந்த அலுவலகக் கட்டிடத்தின் முன் நின்றது. உதவி மானேஜர் குட்மார்னிங் சொன்னார். "இன்னைக்கு ட்ரெயின் அநியாயத்துக்கு லேட் போலிருக்கு?" என்றார்.

"ஆமாம்" என்று கூறிவிட்டு சிதம்பரம் தனது அறைக்கு வந்தார்.

"நான் குளிக்க ரெடியாயிட்டேன், நீ போய் டிபன் வாங்கிட்டு வா" என்று அயிட்டங்கள் சொல்லி டிரைவரை அனுப்பி விட்டு "வெய்ட் பண்ணுங்க" என்று உதவி மானேஜரிடம் சொல்லி விட்டுக் குளித்தார்.

வேறு உடை மாற்றிக் கொண்டு ரெடியானபோது வெளி ஹாலில் இருந்த டெலிபோன் அடித்தது. உதவி மானேஜர் எடுத்துப் பேசிவிட்டு "சார், கால் உங்களுக்கு" என்றார்.

சிதம்பரம் வந்து வாங்கிக் கொண்டு, "ஹலோ, சிதம்பரம் ஹியர்..."

"சார், நான் இன்ஸ்பெக்டர் வெங்கட் பேசறேன் உங்க வீட்லேர்ந்து..."

"இன்ஸ்பெக்டரா?"

"ஆமாம். ஒரு மோசமான செய்தியை உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கு. உங்க மனைவியை யாரோ கொலை செய்திட்டாங்க..."

"என்னது?" என்று மார்பைப் பிடித்துக் கொண்டார்.

"ஆமாம் சார். உடனே புறப்பட்டு வாங்க."

ரிசீவர் பிடிப்பு நழுவியது. மயக்கம் வந்தது. தடுமாறி அப்படியே நாற்காலியில் பொத்தென்று அமர்ந்தார் சிதம்பரம்.

* * *

"உன் பேரென்னம்மா?"

"மீனாட்சிங்க..."



"எத்தனை வருஷமா இந்த வீட்ல வேலை பார்க்கறே?"

"நாலு வருஷமாங்க."

"நேத்து அம்மாவை எத்தனை மணிக்குக் கடைசியாப் பார்த்தே?"

"பதினொரு மணிக்குத்தான். அய்யாவை ரயிலேத்தி விட்டுட்டு அம்மா வந்தாங்க. என்னை வீட்டுக்குப் போயிட்டுக் காலைல வா, போதும்னு சொன்னாங்க. நான் போயிட்டேன்..."

"அவ்வளவு நேரத்துக்கப்புறம் ஏன் உன்னை அனுப்பினாங்க? வீட்ல தனியா இருந்துடு வாங்களா?"

"அது வந்துங்கய்யா... வேணாம்யா..."

"எதுவா இருந்தாலும் சொல்லணும். சொல்லு. என்ன சொல்ல வந்தே?"

"வந்து... மைதிலி அம்மா சரியில்லைங்க..."

"சரியில்லைன்னா... எப்படி?"

"அய்யா ஊர்ல இல்லைன்னா என்னைத் துணைக்குப் படுத்துக்கச் சொல்லிட்டுப் போவாரு. ஆனா அம்மா எனக்குப் பத்தும் இருபதும் கொடுத்து சினிமாவுக்குப் போ, வீட்டுக்குப் போன்னு அனுப்பிச் சிடுவாங்க. ஒரு தடவை சினிமாவுக்குப் போயிட்டுத் திரும்பி வந்தப்போ நம்ம வீட்லேர்ந்து ஒரு ஆளு வேகமாக வெளில போனான். அவன் யாருன்னு பார்க்கறதுக்குள்ளே தெரு முனையில் நிப்பாட்டியிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போயிட்டான். யாரும்மா வந்ததுன்னு கேட்டேன். யாரும் வரலையேன்னுட்டாங்க. ராத்திரி பன்னெண்டு மணிக்கும் ஒரு மணிக்கும் அய்யா ஊர்ல இல்லாதப்போ வேற ஆம்பிளைக்கு இங்கே என்னய்யா வேலை? அதான் சரியில்லைன்னு சொன்னேன்..."

"இதை நீ அய்யா கிட்டே சொன்னியா?"

"இல்லைங்க."

"ஏன் சொல்லலை?"

"அவங்களுக்குள்ள சச்சரவு வரும். பெரிய பிரச்சனையாவும். நமக்கு எதுக்குங்க பெரிய எடத்துப் பொல்லாப்பு?"



"அந்த ஆளு யாருன்னு நீ தெரிஞ்சுக்கவே இல்லையா அப்புறம்?"

"இல்லை..."

"சரி, நேத்து ராத்திரி அம்மாவும், அய்யாவும் புறப்பட்டுப் போனதுக்கப்புறம் யாராவது போன் செஞ்சாங்களா?"

"இல்லை..."

"யாராச்சும் நேர்ல வந்தாங்களா?"

"ஆமாங்கய்யா. ஒல்லியா வெடவெடன்னு தாடி வச்சிக்கிட்டு ஓர் ஆளு வந்தான். பெல் அடிச்சான். திறந்தேன். மைதிலியோட தாய்மாமன் நான். உள்ளே விடு. அவ வர்ற வரைக்கும் உக்காந்திருக்கேன்னு சொன்னான். எனக்கு அவன் பார்வையும் பேச்சுமே சந்தேகமா இருந்திச்சி. வெளில வேணும்னா நாற்காலி போடறேன்னேன். வேணாம்னு படியிலேயே உட்கார்ந்து பீடி பத்த வச்சிக்கிட்டான். நான் கதவைச் சாத்திக்கிட்டு உள்ளே போய்ட்டேன். கொஞ்ச நேரம் கழிச்சு கதவைத் திறந்து பார்த்தா யாரையும் காணோம்..."



"அம்மா வந்ததும் சொன்னியா?"

"சொன்னேன். அவங்களுக்கு முறை மாமனே கிடையாதாம். யாராச்சும் திருட வந்திருப்பான்னு சொன்னாங்க."

"அய்யா எப்படி?"

"தங்கம்ங்க. அவருக்குப் போய் அம்மா துரோகம் செஞ்சது தப்புங்க. அதுக்குத் தாங்க இந்த தண்டனை."

"இந்த வீட்டுக்கு உரிமையோட யாரெல்லாம் அடிக்கடி வருவாங்க?"



"அய்யாவோட தம்பி குமாருன்னு... அவரு வருவாருங்க. அய்யாவோட ஆபீஸ்ல பி.ஏ.வா வேலை பார்க்கற தினகர் வருவாங்க. மத்தபடி நிறையப் பேர் வருவாங்க. இவங்க ரெண்டு பேரும்தான் அடிக்கடி வருவாங்க."

இன்ஸ்பெக்டர் வெங்கட்டுக்கு அருகில் நின்று ஏட்டு கிறுகிறுவென்று பால்பாயிண்ட் பேனாவால் எழுதிக் கொண்டிருக்க... போன் அடித்தது.

வெங்கட் எடுத்து, "குட்மார்னிங் சார். ஆமாம் சார். என்ன சார்? பேசிட்டேன். உடனே புறப்பட்டு வரச் சொல்லிட்டேன். அந்தம்மா நடத்தை அவ்வளவு சரியா இருக்கிற மாதிரித் தெரியலை. வேற எவனோ ஒருத்தன் தாய்மாமான்னு பொய் சொல்லி வந்துட்டுப் போயிருக்கான். சரி சார், துப்புரவா விசாரிச்சுடறேன் சார். திருச்சிக்கு எஸ்.டி.டி. போட்டு நானே பேசினேன் சார். சரி சார். ஓக்கே சார். நான் வெரிஃபை செஞ்சுக்கறேன் சார். ஓக்கே சார், பார்க்கிறேன் சார்..." என்று வைத்து விட்டு பெருமூச்சு விட்டார்.

விசாரணையைத் தொடர்ந்தார். ஆம்புலன்ஸ் வந்ததும் உடன் இரண்டு கான்ஸ்டபிள்களோடு அரசாங்க மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்கு மைதிலியை அனுப்பி வைத்தபோது... அவன் முகத்தைச் சில விநாடிகள் பார்த்தார். அழகுக்கு மறுபெயர் ஆபத்தா? மைதிலியின் அறையை புரட்டிப் போட்டார். எந்தத் தடயமும் இல்லை.

பக்கத்துப் பக்கத்துப் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் முப்பத்தி எட்டு பேரை விசாரித்தபோது முப்பத்தி எட்டாவது நபர் சொன்னான்.

"நேத்து ராத்திரி நான் பைக்குல புதுநகர் திரும்பிக்கிட்டிருந்தேன் செகண்ட் ஷோ போயிட்டு. ஒரு மணி இருக்கும். மெயின் ரோட்லேர்ந்து பிரிஞ்சி, புதுநகர் வர்ற பாதையில எதிர்க்க ஒருத்தர் தன் பைக் ஸ்டார்ட் ஆகாம உதைச்சி உதைச்சிப் பார்த்துக்கிட்டிருந்தார். நான் ஸ்லோ பண்ணிப் பார்த்தப்போ அவரு சிதம்பரம் சாரோட பி.ஏ. தினகர்னு தெரிஞ்சுக்கிட்டேன். என்ன சார், உதவட்டுமான்னு கேட்டேன். இல்லை, நான் பார்த்துக்கறேன்னு தள்ளிக்கிட்டே போய்ட்டார்..."

அதேபோல ஒல்லியான, தாடி வைத்த ஆசாமியைப் பார்த்தீர்களா என்று விசாரித்தபோது பெட்டிக்கடைக்காரன் சொன்னான்:

"நான்தான் வழி சொல்லி அனுப்பிச்சேன். அப்ப தான் பஸ் ஸ்டாப்ல இறங்கி நேரா என்கிட்டே வந்தான். ஊருக்குப் புதுசான்னேன். ஆமாம்னான்..."



வந்தவன் எந்த பஸ்ஸிலிருந்து இறங்கினான் என்று கேட்க, பெட்டிக் கடைக்காரன் உடனே ரூட் நம்பர் சொன்னதோடு, "அந்தக் கண்டக்டர் நம்ம வீட்டுக்குப் பக்கத்து வீடுதான். இன்னைக்கு டூட்டி இல்லை. வீட்லதான் இருப்பார்" என்றான்.

உடனே கண்டக்டர் விசாரிக்கப்பட...

"பிராட்வேல ஏறினான். புதுநகருக்கு எங்கே இறங்கணும்னு கேட்டுக் கேட்டுத் துளைச்சு எடுத்துட்டான்."

உடனே நான்கு போலீஸ்காரர்கள் இதற்கென அனுப்பப்பட்டார்கள்.

"பிராட்வே சுத்தி ஒரு சின்ன, பெரிய லாட்ஜை விடாதீங்க. ஒல்லியா தாடி வச்சுக்கிட்டு சந்தேகப்படற மாதிரி இருக்கிறவனை எல்லாம் நிறுத்தி வைங்க. வேலைக்காரி மீனாட்சியை அழைச்சிக்கிட்டுப் போய் அடையாளம் காட்டச் சொல்லலாம்..."



அவர்களை அனுப்பி விட்டு வெங்கட், தினகர்

வீட்டிற்கு விலாசம் விசாரித்துக் கொண்டு வந்து சேர்ந்தபோது அவன் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

வாசலில் நின்று கொண்டிருந்த பைக்கைக் காட்டி, "இந்த பைக்தான் ராத்திரி ரிப்பேராயிடுச்சா தினகர்? பாவம், எவ்வளவு தூரம் தள்ளிக்கிட்டு வந்தீங்க?"



அதிர்ந்து போய்ப் பார்த்தான் பின்பு சமாளிப்பாக, "ஆமாம் சார். உங்களுக்கு எப்படித் தெரியும்? என்ன விஷயமா வந்திருக்கீங்க சார்?"

"ரிப்பேர் பார்த்துக் கொடுத்துட்டுப் போகலாம்னு தான் வந்தேன் சார். எந்த இடத்தில வண்டி ரிப்பேர் ஆச்சு?"

"மவுண்ட் ரோட்ல..."

"அப்படியா? திருவான்மியூர் புதுநகர்ல மவுண்ட் ரோடு இருக்குதுன்னு இன்னிக்குத்தானே கேள்விப் படறேன். சொல்லுங்க சார், மைதிலியை எதுக்காகக் கொலை செஞ்சீங்க?"

"சார், என்ன சொல்றீங்க? கொலையா? மைதிலியையா? நிஜமாத்தான் சொல்றீங்களா?"



"நீங்க ஒருவேளை ஜெயில்லேர்ந்து திரும்பி வந்தா பாக்யராஜ் கிட்ட சிபாரிசு செய்றேன் நடிக்க சந்தர்ப்பம் கொடுக்கச் சொல்லி. இப்போ... ஸ்டேஷனுக்குப் போய் விலாவரியாப் பேசலாமா?"

"சார், கொலையா? சத்தியமா எனக்கு ஒண்ணுமே புரியலை. மைதிலிக்கு என்ன ஆச்சு?"

"பெரிசா ஒண்ணும் இல்லை. செத்துப் போயாச்சு. இப்போ ஆஸ்பத்திரியில அறுத்துக்கிட்டிருக்காங்க. வாய்யா... அப்புறம் கழுத்துல கை போட வேண்டியிருக்கும். பக்கத்து வீட்லேர்ந்தெல்லாம் இப்பவே பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க பாரு..."

"அய்யோ, எனக்கு ஒண்ணும் தெரியாது சார்" என்றவனைக் கையைப் பிடித்து இழுத்து ஜீப்பில் ஏற்றினார் வெங்கட்.

போகும் வழியில் சொன்னார், "அங்கே உன் கைரேகைகள் எல்லாம் சேகரிச்சாச்சு. உன்னை வழில பார்த்த சாட்சி இருக்கு. உனக்கும் மைதிலிக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததுக்கு மைதிலி ரூம்ல சில ஆதாரங்கள் எல்லாம் கூட எடுத்துட்டோம். இதுக்கும் மேல நீ பிடிவாதம் பிடிக்கிறது நல்லதில்லை. ஸ்டேஷனுக்குப் போனதும் எல்லாத்தையும் ஒத்துக்கிட்டு வாக்குமூலம் கொடுத்துடு. என்ன?"

"சார், எனக்கும் மைதிலிக்கும் தொடர்பு இருந்தது உண்மை. நேத்து நான் போயிருந்ததும் உண்மை. நான் கொலையெல்லாம் செய்யலை சார். ஒரு மணி வரைக்கும் அங்கே இருந்துட்டுப் புறப்பட்டு வந்துட்டேன் சார்..."

"வெரிகுட். பாதி ஒத்துக்கிட்டே. மீதியை ஒத்துக்க வெச்சிடலாம்..." என்றார் இன்ஸ்பெக்டர் வெங்கட்.

## 6

ஜீப்பை நிறுத்தி விட்டு இறங்கி டெபுடி கமிஷனரின் அலுவலகக் கட்டடத்திற்குள் வந்தார் இன்ஸ்பெக்டர் வெங்கட். இருபது நிமிடம் காத்திருந்து அவர் அறைக்குள் வந்து நின்று மரியாதை சல்யூட் அடித்தார்.

"மைதிலி- என்னாங்க ஆச்சு? ஏனி இம்ப்ரூவ்மெண்ட்?"

"ரெண்டு நாளா இதே கேஸ்லதான் சார் ஈடுபட்டிருக்கேன். நேத்து காலைல பிராட்வேல ஒரு லாட்ஜில மதியழகன்னு ஒருத்தனை சந்தேகப்பட்டு ஸ்டேஷனுக்கு அழைச்சிட்டு வந்தோம். வேலைக்காரியை கூப்பிட்டுக் காட்டினதிலே முறைமாமன்னு அதிகாரமா சொல்லிக்கிட்டு வந்தவன் இவன்தான்னு சொல்றா. அவன் சூட்கேசைச் சோதனை போட்டதிலே ஒரு லவ் லெட்டர், ஒரு கத்தி, சிதம்பரத்தோட அட்ரஸ் எழுதின சீட்டெல்லாம் கிடைச்சது. ரெண்டு தாங்கு தாங்கினதும் சொல்றான்- மூணு வருஷம் முன்னாடி மைதிலி இவனைக் காதலிச்சாளாம். அப்புறம் ஏமாத்திட்டு சிதம்பரத்தைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாளாம். இப்பதான் இவ அட்ரஸ் கிடைச்சதாம். தீர்த்துடணும்னு வெறில தான் வந்தானாம். மைதிலி இல்லைன்னதும் வீட்ல வேலைக்காரி இருக்கிறதைப் பார்த்ததும் இந்தச் சந்தர்ப்பம் சரியில்லை, நாளைக்குப் பார்த்துக்கலாம்னு புறப்பட்டுப் போயிட்டானாம். விட்டு விட்டு மூணு தடவை விசாரிச்சிட்டேன். இதையேதான் திருப்பித் திருப்பிச் சொல்றான்..."



"தினகர் என்ன சொல்றான்?"

"அவனும் முக்கால்வாசி ஒத்துக்கறான். தொடர்பு உண்டு. வீட்டுக்கு வந்தேன். சந்தோஷமா இருந் தோம். புறப்பட்டு வந்துட்டேன்னு சாதிக்கிறான். அழுவறான் குழந்தை மாதிரி..."



"மிஸ்டர் வெங்கட்! மைதிலியோட நடத்தையில சந்தேகப்பட்டு அவ புருஷன் சிதம்பரமே ஏதாச்சும் திட்டம் போட்டிருக்கலாமா?"

"தொண்ணூத்தி ஒன்பது புள்ளி தொண்ணூத்தி ஒன்பது சதவிகிதம் வாய்ப்பு இல்லை சார். அவர் தம்பி வழி அனுப்பியிருக்கார். டிக்கெட் நம்பரை திருச்சி போலீசுக்குச் சொல்லி விசாரிக்கச் சொன்னேன். திருச்சில கலெக்ட் ஆகியிருக்கு. திருச்சில அவர் ஆபீஸ் டிரைவர் வண்டி எடுத்துட்டு வந்து ரிசீவ் பண்ணியிருக்கார். ஆபீஸ்ல உதவி மானேஜர் வரவேற்றிருக்கார். இதுக்கும் மேலே நானே போன்ல பேசினேன். நேத்து வாடி தூத்தல சாயங்காலம் வந்தார். ஒண்ணு ஒரே அழுகை. சமாதானப்படுத்தி பேச ரொம்ப நேரமாச்சு. தினகருக்கும் மைதிலிக்கும் இருந்ததைப் பத்திச் சொல்றப்போ ஆச்சரியப்பட்டுப் போயிட்டார். என் மைதிலியா அப்படிச் செஞ்சான்னு புலம்ப ஆரம்பிச்சிட்டார்..."



"வெல், வேற யாரை இதிலே சந்தேகப்படறீங்க?"

"மதியழகனை சொல்றது உண்மையாப் படுது. மதியழகன் கைரேகை வீட்டுக்கு உள்ளே எங்கேயும் கிடைக்கலை. தினகர்தான் செஞ்சிருக்கணும்ங்கிறது என் சந்தேகம். மைதிலியைத் தன்னோட நிரந்தரமா வந்துடச் சொல்லி வற்புறுத்தியிருக்கலாம். அவ மறுத்திருக்கலாம். ஆத்திரமாகி செயல்பட்டிருக்கலாம். ஆரம்பத்திலேர்ந்து ஆரம்பிக்கணும்..."

"செய்ங்க. புதுக்கோணத்தில கேஸைப் பாத்திங்கன்னா பளிச்சன்னு ஏதாச்சும் உதிக்கும். சிதம்பரத்தின் தம்பி குமார்னு சொன்னீங்களே... அடிக்கடி வீட்டுக்கு வந்து போற நபர் இல்லையா அவர்? அண்ணி அழகானவ. அண்ணனோ ஊர்ல இல்லே. அவங்களுக்குள்ளே ஏதாச்சும் கசமுசா இருக்கலாமான்னு பாருங்க..."

"நானும் அதை யோசிச்சேன் சார். சம்பவம் நடந்தப்போ குமாரை எங்கே இருந்தீங்கன்னு கேட்டதுக்கு அண்ணனை அனுப்பிட்டு செகண்ட் ஷோ போனதாச் சொன்னாரு. டிக்கெட் பாதி வச்சிருக்கீங்களான்னதுக்கு கிழிச்சுப் போட்டாச் சின்னாரு. அவரையும் தீவிரமா விசாரிக்கணும்..."

"செய்ங்க. ரெண்டு நாள்ல ஒரு முடிவுக்கு வந்து சார்ஜ் ஷீட் போட்டு கேஸ் ஃபைல் பண்ணப் பாருங்க..."

"எஸ் சார். வர்றேன் சார்..."

வெங்கட் புறப்பட்டு நேராகத் தன் வீட்டிற்கு வந்தார். திருச்சியிலிருந்து வந்திருந்த தனது மாமனாரை வரவேற்று விட்டுக் களைப்பாக அமர்ந்து



காப்பி கொண்டுவரச் சொன்னார்.

"ஊர்ல எல்லாரும் சௌக்யம் தானே மாமா?"

"சௌக்யம்தான்..."

"நைட் ட்யூட்டி எனக்கு நேத்து. எப்ப வந்தீங்க?"

"காலை ராக்ஃபோர்ட்லதான் வந்தேன். இன்னைக்கு முக்கா மணி நேரம் லேட்டு. நம்ம ரயில்வேஸ் இருக்கு பாருங்க. அநியாயம் பண்ணுது. நேத்துக் காலைல மூணு மணி நேரம் லேட்டா வந்துச்சு ராக்ஃபோர்ட். என்னடான்னா செங்கல்பட்டுக்குப் பக்கத்திலே ரயில்வே லைன்ல ஒரு சரக்கு போகி கவுந்துடிச்சாம். செங்கல்பட்டிலேயே மூணு மணி நேரம் போட்டுட்டாங்களாம். இதுவே ஃபாரினா இருந்தா..."

"என்னைக்கு மூணு மணி நேரம் லேட்டுன்னு சொன்னீங்க மாமா?"

"முந்தா நாள ராத்திரி இங்கே புறப்பட்டு நேத்து காலைல வரவேண்டிய ரயிலைத்தான் மாப்பிள்ளை சொல்றேன்..."

வெங்கட்டுக்கு ஒரு புதிய கோணம் உடனே பளிச் எடுத்தது. உடனே டெலிபோனைக் கையில் எடுத்தார்.

* * *

"குட் ஈவினிங் சார்" என்றார் வெங்கட்.

மாலை போடப்பட்டிருந்த மைதிலியின் படத்திற்கு அருகில், சோகமாக உட்கார்ந்திருந்த சிதம்பரம் நிமிர்ந்து பார்த்தார்.

அவர் எதிரில் போய் நின்ற வெங்கட், "சார், உங்க மனைவியை நீங்க கொலை செஞ்ச குற்றத்துக்காக உங்களைக் கைது செய்ய வந்திருக்கேன். இதோ வாரண்ட்..."

அதிர்ந்து போன சிதம்பரம், "என்ன சொல்றீங்க? நானா?"

"யெஸ், நீங்க போன ரயில் செங்கல்பட்டுல மூணு மணி நேரம் போட்டுட்டாங்க. லைன்ல கவிழ்ந்த வேற ஒரு போகியை சீழுவ செஞ்சு புறப்பட மூணு மணி நேரம் ஆகும்னு தெரிஞ்சுக்கிட்ட நீங்க டி.டி.ஆர். கிட்ட தூக்கம் வரலை, இப்படியே உலாத்தறேன்னு சொல்லிட்டு ஸ்டேஷனை விட்டு வெளில வந்து ஒரு டாக்ஸி



பிடிச்சிக்கிட்டாங்க. நம்பர் டி.எல்.ஓ. 7474. டிரைவர் பெயர் விநாயகம். மெட்ராஸ் போயிட்டு உடனே இங்கே திரும்பணும்னு நீங்க பேசிய தொகை ஐந்நூறு ரூபா. திருவான்மியூர் முக்கிய சாலையி லேர்ந்து புதுநகர் பிரியற பாதையில வண்டியை நிறுத்திட்டு நடந்து வந்து உங்க மனைவியைக் கொலை செஞ்சிட்டுத் திரும்பி டாக்ஸில செங்கல்பட்டு வந்து ரயில்ல ஏறிட்டீங்க. இதைப் பூரா விசாரிச்சுட்டேன். என்னால நிரூபிக்க முடியும். நீங்க உண்மையை ஒத்துக்கறதுதான் நல்லது.''



சில வினாடிகள் அமைதியாக இருந்தார் சிதம்பரம்.

''ஆமாம் சார். நான்தான் செஞ்சேன் நீங்க சொன்ன படி தான் செஞ்சேன். திருச்சி கிளை சம்பந்தப்பட்ட ஆஃபீஸ் பேப்பர்ஸ் சிலதை தினகர் கிட்டே கேட்டிருந்தேன். அதைக் குறிச்சு தினகர் ரெண்டு காகிதங்களை என்கிட்டே கொடுத்தான். ரயில்லே போறப்போ அதையெல்லாம் பார்த்தேன். அந்த சீட்டுகள் நடுவில ஒரு துண்டுச் சீட்டு இருந்திச்சி. அதிலே மைதிலி, தினகருக்குச் செய்தி எழுதியிருந்தா -என் புருஷன் இன்னைக்கு ஊருக்குப் போறான். ராத்திரி வா-ன்னு. நான் அப்படியே துடிச்சுப் போயிட்டேன்.

ஆத்திரம் ஆத்திரமா வந்திச்சு. எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலை. அந்தச் சமயம்தான் வண்டியைச் செங்கல்பட்டுல நிறுத்திட்டாங்க. மூணு மணி நேரமாகும்னு சொன்னதும் எனக்கு அந்த குறுக்கு யோசனை வந்திச்சி. நான் என்ன குறை சார் வச்சேன் அவளுக்கு? எனக்குத் துரோகம் செய்யலாமா? எந்தப் புருஷனாலதான் தன் மனைவி துரோகம் செய்வதைப் பொறுத்துக்க முடியும்?''

''அதெல்லாம் சரிதான். நீங்க செஞ்சது சட்டப்படி குற்றம். தர்மப்படி நியாயம்னு கதைகள்ல வர்ற மாதிரி டயலாக் பேசிட்டு உங்களை விட்டுட முடியாது சார்! என் கடமையைச் செய்யலைன்னா வேலை போயிடும். வர்றீங்களா, போகலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர் வெங்கட்.

(முற்றும்)



## 143 பக்கம்



என்னதான்
நீ என்னைக்
காதலிக்க
மறுத்தாலும்
என் கனவுகளிலும்
கூடவா
வராதிருக்க வேண்டும்
நீ?

-முத்து ஆனந்த், வேலூர்.





ஊர் திரும்பும்
உன்னை...
என்னுடனேயே
வழியனுப்ப வரும்
நம்ம ஊர்த் தென்றல்
சில குருவிகள்
கொஞ்சம்
நம் இடைவெளியை
நிரப்பும் மௌனங்களும்!

-சிவபாரதி,
சிதம்பரம்.